மங்கை

பெண்களின் புத்தகம்

117



ஜூலை 1947

எட்டணா

புதன் கிழமை

•

புதன் கிழமையன்று
குழந்தைகளுக்காக
வெளிவரும் அழகான
அருமையான பத்திரிகை

அணில்

வருட சந்தா ரூபாய் மூன்று
இரண்டு வருடம் ரூபாய் ஐந்து

தனிப்பிரதி
அணா ஒன்று

சக்தி காரியாலயம்

சென்னை 14

அரிய புத்தகங்கள்

நாவல்கள்

வான வில்	வாண்டா வாஸிலெவ்ஸ்கா ரூ.	5- 0
காதல்	,,	3-12
சுந்தரி	வ. ரா.	5- 0
பவானி	'லக்ஷ்மி'	2- 8
வனிதாலயம்	சகுந்தலா ராஜன்	2- 0

சிறு கதைகள்

மஞ்சி விரட்டு	கொத்தமங்கலம் சுப்பு	3- 8
சஞ்சீவி	குகப்ரியை	3- 4
ஜெயகாதல் கீதம்	துர்கனேவ்	0- 8

கட்டுரைகள்

வாழ்க்கைச் சித்திரம்	வ. ரா.	2- 8

(தபால் செலவு தனி)

OF THE REGISTRAR OF BOOKS
JUL 1947

பவானி பிரசுரம்
ராயவரம் : (புதுக்கோட்டை) ஸ்டேட்

சக்தி வாய்ந்த நூல்கள்

லெனின் பிறந்தார் : ஆர். ராமநாதன் எழுதியது.

லெனின் பிறந்தார் என்றால் கூடவே புரட்சி இயக்கமும் பிறந்தது என்றுதான் பொருள். இந் நூலில் லெனின் வரலாறு சொல்லும் வகையில் புரட்சி இயக்கம் வளர்ந்த வகையையும் ஆசிரியர் விளக்கி யிருக்கிறார். படங்களுடன்

விலை ரூ. மூன்றரை — தபால் செலவு தனி

இனி நாம் செய்யவேண்டுவது யாது?

டால்ஸ்டாய் எழுதியது — ரா. விசுவநாதன் மொழிபெயர்ப்பு

காந்தியடிகளின் கருத்தைக் கவர்ந்தது இந் நூல். "உழைப்பவனுக்குத்தான் உணவு, உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தம்" எனும் அரிய சித்தாந்தம்தான் இந் நூலில் அடங்கி யிருக்கிறது. இப்போது தமிழில் மூன்றாம் பதிப்பாக வெளிவந்திருக்கிறது. அழகிய மொழிபெயர்ப்பு

விலை ரூ. மூன்று — தபால் செலவு தனி

தயாராகின்றன

உலோகமும் நாமும் : மு. அருணாசலம் எழுதியது.

உலோகங்களைப் பற்றிய விரிவான முறையில் தெளிவாய் விளக்குவது இந் நூல். தமிழ் உலகுக்குப் புதிது.

ஆசிய நாடுகள் : கு. அழகிரிசாமி எழுதியது

ஆசியாவிலுள்ள முப்பத்து நான்கு நாடுகளைப்பற்றிய சரித்திர, பூகோள, இலக்கிய, அரசியல் விவரங்களைத் தெரிவிப்பது இந் நூல். ஆசிய உறவு மகா நாட்டு நிகழ்ச்சி முறையும், சொற்பொழிவுகளும் அடங்கியது. பல படங்களோடு வெளிவரும்.

முத்திரா ராக்ஷஸம்

வடமொழியில் விசாக தத்தர் எழுதிய சிறந்த அரசியல் நாடகத்தின் அழகான மொழிபெயர்ப்பு.

ஹிந்து பத பாதுஷாஹி

வீர சவர்க்கார் எழுதிய நூலின் மொழிபெயர்ப்பு. இந்து சாம்ராஜ்ய வீழ்ச்சியை விவரிக்கும் சிறந்த நூல்.

சக்தி காரியாலயம் — சென்னை 14.

பொருள் அடக்கம்

1947 ஜூலை

தொகுதி 2 பகுதி 1

●

மங்கையின் வளர்ச்சி	...	பதிப்பாளர்	5
புதிய அம்சங்கள்	...	ஆசிரியர்	6
புதிய சகாப்தம்	...	தலையங்கம்	7
சாந்தி		சியாமளா பாலகிருஷ்ணன்	8
சகோதரிகளின் சந்தேகங்கள்	...	எஸ். விசாலாட்சி	10
உங்கள் பணத்தைச் செலவழிப்ப தெப்படி?	...	குஞ்சலம்	17
பிரசவ வேதனை	...	டாக்டர் ஸ்ரீமதி நாமகிரி	20
சியாமளா	...	எம். லக்ஷ்மி	25
இந்த ஆண் பிராணிகள்!	...	டி. எஸ். ரங்கதேவி	31
பழங்கள் பாதுகாப்பு	...	எஸ். யமுனா	33
பெயராசை	...	லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி	37
ஈடித் சிட்வெல்	...	மீனா	42
வஞ்சனையும் வாஞ்சையும்	...	ராஜம் வேங்கடராம்	43
சட்டமும் பெண்களும்	...	ஸ்ரீமதி எஸ். வி. ரா.	49
மனோரஞ்சிதம்	...	மு. அருணாசலம்	53
ஆகாரம்	...	ருசினி	55
பெண்களும் யோகாசனமும்	...	பெண்மணி	57
கைப்பால்	...	டி. கிருஷ்ணகுமாரி	61
மதிப்புரை	...		64

✲

Edited, Printed & Published by Vai. Govindan at Shakti Press Ltd. Madras 14. ஆசிரியர் : எஸ். விசாலாட்சி



ஆயிரங் காலப் பயிர்

நம் நாட்டில் திருமணத் தம்பதிகளை 'ஆயிரங் காலப் பயிர்' என்று வாழ்த்துவார்கள். நம் நாட்டுப் பண்பாட்டின் அறிகுறியாய்—நம்மவர் திருமணத்தின் மதிப்புக்குரிய சின்னமாய் இலங்கும் திருமங்கலியத்தை எண்ணிப் பெருமைப் படாதவர் யாருமே இல்லை.

திருமங்கலியத்தை யார் வேண்டுமானாலும் செய்யலாமா என்ன? ஆயிரங் காலப் பயிரல்லவா திருமங்கலிய தாரணம்! எனவே, புகழ் பெற்ற நகை வியாபாரியின் அனுபவமும், ராசியும் அவசியம்.

பாபாலால் கம்பெனியார் செய்யும் இத்தகைய அணிகள் உங்கள் வீட்டுக்கு அழகு மட்டுமல்லாமல் கிருஹலட்சுமியையும் சேர்த்து வைக்கின்றன.

ருஷ்யாவுக்கு இந்தியாவின் முதல்
ஸ்தானிகராகச் செல்கிறார்,
ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட்

முல்லை மலர்ச் சிரிப்பு

அமெரிக்காவில் சமீபத்தில் 'குழந்தைகள் புத்தகவாரம்' கொண்டாடப்பட்டது. அதை யொட்டி நடந்த புத்தகக் கண்காட்சிச் சாலையைப் படம் காட்டுகிறது.



இந்தியாவின் இரண்டு ஜோதிகள்

மங்கை

தொகுதி 2	சென்னை, ஜூலை 1947	பகுதி 1

மங்கையின் வளர்ச்சி

●

இதுவரை 'மங்கை' புத்தக வடிவத்தில் வெளி வந்தது. தமிழ் மக்கள் மிக மகிழ்வுடன் வரவேற்று உபசரித்தனர். அவர்களுக்கு எங்கள் நன்றி. புத்தக வடிவத்தில் வந்த காலத்தில் ஆசிரியர் பதவி வகித்துத் திறமையுடன் நடத்தித் தந்த ஸ்ரீமதி 'குகப்ரியை' அவர்களுக்கும் எங்கள் நன்றி.

இப்பொழுது இந்த இதழ்த் தொடக்கம் மாதப் பத்திரிகையாக வெளிவருகிறது. இதன் ஆசிரியர் ஸ்ரீமதி விசாலாட்சி, பத்திரிகைகளில் தேர்ந்த அனுபவம் வாய்ந்தவர். முற்போக்கு மனம் உடையவர். 1929-ல் மெடிகல் காலேஜில் படிக்கும் போதே பத்திரிகைகளுக்குக் கட்டுரை, கதைகள் எழுதி வந்திருக்கிறார். சக்தி, ஆனந்த விகடன், மணிக்கொடி, பாரததேவி முதலிய பத்திரிகைகளில் மாதர்க்கான கட்டுரைகள், விஞ்ஞானக் கட்டுரைகள், கதைகள் முதலியன எழுதியிருக்கிறார். எழுதி வருகிறார். அவரிடம் 'மங்கை'யின் ஆசிரியர் பதவியை மிக மகிழ்வுடன் அளித்திருக்கிறோம்.

'மங்கை' பத்திரிகையானதிலிருந்து விலையும் குறைக்கப் பெற்றிருக்கிறது. அணா எட்டுதான். உங்கள் சிநேகிதர்களையும் 'மங்கை'யின் சந்தாதாரர்களாகச் சேர்த்து விட வேண்டியது உங்கள் கடமைதானே!

சக்தி காரியாலயம்
சென்னை
1—7—1947

வை. கோவிந்தன்
பதிப்பாளர்

புதிய அம்சங்கள்

தமிழ் நாட்டுக்கும், தமிழர் உள்ள எல்லா பிற மாகாணங்கள், வெளிநாடுகள் ஆகியவைகளுக்கும் குறிப்பாக மாதர்களுக்கு மங்கை கடந்த ஒரு வருஷகாலமாகப் புத்தக வடிவத்தில் செய்து வரும் சேவையை வாசகர்கள் அறிவர். பல புதிய அம்சங்களைச் சேர்க்கவேண்டுமென்ற நோக்கத்துடன் "புத்தகமாக" இருந்த மங்கை, இப்பொழுது "மாதப் பத்திரிகையாக" மாறியிருக்கிறது. இந்த மாறுதலை முன்னிட்டு, ஆசிரியர் மாறுதலும் ஏற்பட்டிருக்கிறது. இதுவரை பதிப்பாசிரியையாக இருந்து, புஸ்தகத்தைச் சிறப்பாக நடத்திவந்துள்ள ஸ்ரீமதி குகப்ரியைக்கு எனது நன்றி. அவருக்கு இதுவரை வாசகர்களும், எழுத்தாளர்களும் அளித்து வந்த ஆதரவைப் போலவும்—அதற்கு மேலும் ஆதரவையும் ஒத்துழைப்பையும் நான் நாடுகின்றேன்! எதற்காக அதிக ஒத்துழைப்பு என்று யாரும் ஆச்சரியமடைய வேண்டாம். அதிக அம்சங்கள் இப்பொழுது வருகிறதல்லவா, அதற்காகத்தான்!

பெண்மணிகள் தங்களுக்குள்ள சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொள்ள எனக்குக் கடிதம் எழுதினல், பதில் அனுப்புகிறேன். சங்கோஜம் ஏதும் வேண்டாம். நானும் ஒரு பெண்தான். எனவே, அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களையும் சுக துக்கங்களையும் நான் அறிவேன். அவர்களுக்கு இந்த சஞ்சிகையின் மூலமும் சேவை செய்யப் பத்திரிகையின் அதிபர் ஸ்ரீ வை. கோவிந்தன் எனக்கு அளித்துள்ள சந்தர்ப்பத்திற்காக அவர்களுக்கு நன்றி கூறுகிறேன்.

ஜேய் ஹிந்த்!

சென்னை,
12—6—'47

எஸ். விசாலாட்சி
ஆசிரியர்

197641

புதிய சகாப்தம்

இன்னும் மூன்று மாதங்களில் இந்தியா டொமினியன் அந்தஸ்தை அடையப் போகிறது. எந்தச் சமயத்திலும் பிரிட்டிஷ் காமன் வெல்த்திலிருந்து பிரிந்து போகும் உரிமை இந்தியாவுக்கு இருக்கும். எனவே, முக்கால் வாசி சுதந்திரம் கிடைத்துவிட்ட தென்று மதிக்கலாம். கொஞ்சம் அதிருப்தியுடன் எல்லோரும் இந்தப் புதிய அந்தஸ்தை வரவேற் பார்கள். இவ்வளவு அளவுக்கேனும் இப்பொழுது சுதந்திரம் கிடைப்பதற்கு இந் நாட்டின் எண்ணற்ற பெண்களும் ஆண்களும் 1857-ம் வருஷ முதல் சுதந்திர யுத்தத்திலிருந்து 1942-ம் வருஷம் நேதாஜி போஸ் நடத்திய யுத்தம் ஆகியவைகளில் செய்த மகாத் தியாகங்கள் தான் காரணம். எனவே, அன்னையின் விடுதலைக்காக உயிர் நீத்த தேசபக்தர்களுக்கு நாம் வணக்கத்தை இப்பொழுது தெரிவிப்போமாக! இந்தப் போராட்டங்களில் பெண் உலகம் தனது கடமையை நிறைவேற்றி யிருக்கிறது ஜான்ஸி ராணியை ஞாபகப்படுத்திக் கொள்வோம். 1920, 1930, 1932, 1941, 1942, வருஷங்களில் காங்கிரஸ் நடத்திய போராட்டங்களிலும், பிரிட்டன் மீதும், அமெரிக்கா மீதும் நேதாஜி நடத்திய யுத்தத்திலும் கலந்துகொண்ட பல்லாயிரக் கணக்கான பெண்கள் செய்த தியாகங்களை ஞாபகப் படுத்திக் கொள்வோமாக. அந்நிய ஆதிக்கத்தி லிருந்து தேசம் விடுபடப் பாடுபட்ட பெண்கள் இனி சமூகத் துறையில் தங்களுக்குள்ள தளைகளைத் தகர்த்தெறிவதில் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது.

டொமினியன் அந்தஸ்து சுதந்திரத்துடன், மற்றொரு விஷமத்தனமான சூழ்ச்சியும் கலந்து தரப்பட்டிருக்கிறது. அது தான் இந்தியப் பிரிவினை. பிரிவினையை தலைவர்கள் ஒப்புக் கொள்கிறார்கள் என்ற வாதம் புறமிருக்க, பிரிவினையை ஆரம்பத்திலிருந்தே தூண்டி ஊக்கமளித்தவர்கள் பிரிட்டிஷார் தான் என்பதை யாராலும் மறுக்க முடியாது. தனித் தொகுதி மூலம்—முஸ்லிம்களுக்கு முஸ்லிம்கள் தான் வோட் செய்ய வேண்டும், ஹிந்துக்களுக்கு ஹிந்துக்கள் தான் வோட் செய்ய வேண்டும் என்பதன் மூலம் - ஹிந்துஸ்தான் - பாகிஸ்தானுக்கு விதையைத் தூவியவர்கள் பிரிட்டிஷார்தான். அவர்கள் இந் நாட்டிலிருந்து வெளியேறிவிட்டால் பிறகுவகுப்புச் சமரஸம் ஏற்படும் என்ற நம்பிக்கையில் தான் இப்பொழுது பிரிவினைக்குத் தலைவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஐக்கிய இந்தியாதான் எல்லா இந்தியரின் லட்சியமாக இருக்க வேண்டும். வகுப்பு வாதிகளின் தலைமையைத் தாக்கி எறிய மக்கள் பாடுபட வேண்டும். அந்தத் தலைமை ஒழிந்து விட்டால், ஐக்கிய இந்தியா தலைதூக்குவது நிச்சயம். வகுப்புக் கலவரங்களில் மாதர்கள் கண்கலங்கி விட்ட கண்ணீர் அந்தத் தலைமையை மூழ்கடிக்கும். பலியான இந்தியர்கள் இப்பொழுதே ஐக்கிய இந்தியா ஏற்படப் பூர்வாங்க வேலையைத் தொடங்கிவிட வேண்டும். ஏகாதிபத்தியம் அஸ்தமனமாவது போல வகுப்பு வாதமும் அஸ்தமனமாகும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் வேலை செய்ய வேண்டும்.

சாந்தி

●

சியாமளா பாலகிருஷ்ணன்

1

தபால்! என்ற குரலைக் கேட்டதும் தன் அறையில் ஏதோ படித்துக்கொண்டிருந்த மதுரம் வாசலுக்கு ஓடிச்சென்று தபால்காரனிடமிருந்து இரண்டு கவர்களையும் ஒரு பத்திரிகையையும் வாங்கிக் கொண்டாள். ஒரு கவரில் தன் கணவரின் கையெழுத்தில் தன் பெயரைக் கண்டதும் அவள் மனதில் பல உணர்ச்சிகள் பொங்கி எழுந்தன. கடிதத்தைத் தன் தலைப்பில் மறைத்துக் கொண்டு, தகப்பனாரின் அறைக்குள் நுழைந்தாள். சுந்தரமய்யர் ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். மேஜையின்மேல் அவருக்கு வந்திருந்த கடிதத்தையும், பத்திரிகையையும் வைத்துவிட்டு மதுரம் தன் அறைக்குச் சென்று கதவைத் தாழிட்டுக்கொண்டு ஒரு நாற்காலியில் அமர்ந்தாள். இரு முறைகள் அந்தக் கவரைத் திருப்பிப் பார்த்துவிட்டு அதைப் பிரித்தாள். கடிதத்தில் மாமியாருடைய கையெழுத்தைப் பார்த்ததும் அவளுக்குச் சற்று ஏமாற்றமாய் இருந்தது. ஆனாலும் அவசரமாகப் படித்து முடித்தாள். அவள் கணவருக்கு மிகவும் ஜுரமாக இருப்பதாகவும் அவளைப் பார்க்க அவர் ஆசைப் படுவதாகவும் அவள் மாமியார் எழுதியிருந்தாள். குழம்பிய மனதுடன் மதுரம் அப்படியே நாற்காலியில் சாய்ந்து கொண்டாள். அவளுக்குப் பழைய சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் மனதில் எழுந்தன.

2

அவளுக்குக் கல்யாணமான பொழுது பதினொன்று வயது. அருமையாகப் பிறந்த பெண்ணானதால் கல்யாணம் வெகு விமரிசையாக நடந்தது. நான்கு நாட்களும் ஒரு குதூகல உற்சவமாய்க் கழிந்தன. எல்லாக் கொம்மாளங்களைவிட அவளுக்கு, தான் ஊஞ்சலில் உட்கார்ந்திருந்த பொழுது அவரைக் கடைக் கண்ணால் பார்த்ததும், அவருடைய கண்களை அவைகள் இரண்டு மூன்று முறைகள் சந்தித்ததும் பளிச்சென்று மின் வெட்டைப் போல ஞாபகத்தில் பாய்ந்தன.

அவளுடைய புக்ககத்தோர் எளியவர்கள்தான், மேலும் அவளுடைய தந்தையும் பெரிய சம்சாரி. ஆனால் ஸ்ரீனிவாஸன் நல்ல அழகும் அறிவும் பொருந்தியவன். சுந்தரமையர் கோரியிருந்த வரனும் அத்தகைய வரன்தான். ஏனெனில் ஏழை மாப்பிள்ளையை வீட்டுடன் வைத்துக்கொண்டிருக்கலாம், பெண்ணையும் விட்டுப் பிரிய வேண்டாம் என்று அவர் கருதினார்.

ஸ்ரீனிவாஸன் பி. ஏ. பட்டம் பெற்று சட்ட கலாசாலையில் எப். எல். பரீட்சை தேறியிருந்தான். ஆனால் மேற்கொண்டு பரீட்சைக்குப் படிக்கப் பணமில்லை. அந்த நிலையில் அவன் வரன்களை ஆராய்ந்துகொண்டிருந்த சுந்தரமையர் கண்களில் தென்பட்டான். அவர் அவனுடைய மேல் படிப்பையும், அதற்குப் பிறகு அவன் பிராக்டிஸ் தொடங்குவதற்குரிய சௌகரியங்களையும் தாமே செய்து கொடுப்பதாகச் சொல்லித் தம் பெண்ணையும் கல்யாணம் செய்வித்தார்.

ஐந்தாம் நாளன்று ஸ்ரீனிவாஸனும் அவன் குடும்பத்தார்களும் ஊருக்குப் புறப்பட்டபொழுது என் உடனே போகவேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது. விடுமுறை கழித்துக் கலாசாலை சேர்ந்து தன் தகப்பனார் வீட்டிலேயே வாசிப்பார் என்று அவளுக்குத் தெரியும். அன்று அவர் எப்படியோ அவளை அரை நிமிஷம் தனியாகக் காணச் சமாளித்து, எவ்வளவு அன்புடன் தாம் போய்விட்டுச் சீக்கிரத்தில் வந்துவிடுவதாகச் சொன்னார்!

பிறகு அவர் பி. எல். பரீட்சை தேறிவிட்டு ஒரு வருஷம் அப்ரெண்டிஸாகவும் இருந்தார். அந்த இரண்டு வருஷங்களில் மதுரமும் எஸ். எஸ். எல். ஸி. தேறிவிட்டாள். அவ்விரு வருஷங்களும் ஓர் ஆனந்தக் கனவாய்க் கழிந்துவிட்டன. சாயங்காலந்தோறும் அவள் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வந்ததும் தன்னை நேர்த்தியாய்ச் சிங்காரித்துக் கொண்டு, அவருடன் வெளியே செல்லத் தயாராய் இருப்பாள். அவர் வீட்டிற்கு வந்து டிபன் சாப்பிட்டதும், இருவருமாய் எங்கேயாவது உலாவ்விட்டு, அஸ்தமித்த பிறகுதான் வீட்டிற்கு வருவார்கள்.

ஒரு வருஷம் அப்ரெண்டிஸ் வேலை முடிந்தபின், ஸ்ரீனிவாஸனுக்கு மேலும் மாமனார் வீட்டில் தங்கப் பிடிக்கவில்லை. ஆறுமாதங்களாய்த் தன் மாமியார் தன்னைக் கொஞ்சம் அவமதித்ததை அவன் கவனித்து வந்தான். அதுவுமல்லாமல் அவனுடைய உறவினர்கள் எவராவது அவனைப் பார்க்கவந்தால், அவர்கள் தகுந்த மரியாதையுடன் நடத்தப்படவில்லை என்பதை அவன் உணர்ந்தான். இதை அவன் ஜாடையாக மதுரத்திடம் சொன்னான்.

ஆகவே அப்ரெண்டிஸ் வேலை முடிந்த பிறகு அவன் மெதுவாக மதுரத்திடம் தனிக் குடித்தனம் செய்வதைப் பற்றிப் பிரஸ்தாபித்தான்.

"நாம் இங்கேயே இருந்தால் ஒரு கவலையுமில்லாமல் இருக்கலாமே," என்றாள் அவள்.

"அப்படி இல்லை. இப்போது நாம் பேசுவது, போய் வருவது எல்லாவற்றையுமே மற்றவர்கள் முகம் பார்த்துச் செய்யவேண்டியிருக்கிறது. நம் வீடு என்று இருந்தால் நாம் நம் இஷ்டப்படி இருக்கலாம் இல்லையா?' என்றான்.

"ஆனால் அப்பா என்னை விட்டுவிட்டு இருக்கமாட்டாரே!"

"வேறு ஊருக்கா போகிறோம்? இரண்டு நாட்களுக்கு ஒரு முறை இங்கு வந்துவிட்டால் போகிறது," என்று சொல்லி, அவன் அவளை ஒரு வழியாய்த் தன் இஷ்டத்திற்கு இணங்கும்படிச் செய்தான்.

சுந்தரமையரும் சங்கரியம்மாளும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் மாப்பிள்ளையும் பெண்ணும் தங்களுக்குத் தனிக் குடித்தனம் செயய ஆசையாக இருப்பதாய்ப் பிடிவாதம் பிடித்தனர்.

சங்கரியம்மாள் "இது சம்பந்திகளின் தூண்டுதலாக இருக்க வேண்டும்" என்று அவர்களை வரம்பின்றி சிநேகிதர்களிடமும் வேலைக்காரர்களிடமும் திட்டினாள்.

இதற்கு நடுவில் ஸ்ரீனிவாஸன் தஞ்சாவூரிலிருந்த தன் பெற்றோர்களின் வீட்டிற்குத் தன் மனைவியைக் கூட்டிக்கொண்டு ஒரு

முறை சென்று வந்தான். மதுரத்தைப் பட்டணத்திலேயே விட்டுச் சென்றால், தான் திரும்பி வருவதற்குள் அவள் தாயார் அவள் மனதை மாற்றிவிடுவாளோ என்று அவனுக்குப் பயம். மாமியார் மாமனாருடன் பழகியதில் மதுரத்திற்கு அவர்களை மிகவும் பிடித்துவிட்டது.

கடைசியில் ஒரு விதமாக மதுரமும் அவள் கணவனும் ஒரு சிறிய வீட்டில் தனிக் குடித்தனம் செய்ய ஆரம்பித்தனர். வீட்டின் வாசலில் "ஸ்ரீனிவாஸன் பி.ஏ., பி.எல்., என்ற இனாமல் போர்டு தொங்கிற்று. சுந்தரமையர் தன் பெண்ணின் பொருட்டு விதவிதமான அழகான சாமான்கள் வாங்கி வீட்டை நிரப்பினர்.

ஆனால் பிராக்டிஸ் ஆரம்பித்தவுடன் வரும்படி வருகிறதா? பணத்திற்குச் சுந்தரமையர் கையைத்தான் அவர்கள் எதிர் பார்க்க வேண்டியிருந்தது. சங்கரியம்மாள் முதலில் அவர்களுக்குப் பணம் உதவக்கூடாது என்றாள். ஆனாலும் தன் பெண் தானே? ஆகவே அவளுடைய மனது பிறகு இளகிவிட்டது.

பிராக்டிஸ் ஆரம்பித்து ஆறு மாதங்கள் கழிந்தன. ஸ்ரீனிவாஸனுக்குவரும்படி மாதம் நாற்பது, ஐம்பது ரூபாய்களுக்குமேல் கிடைக்கவில்லை. அவர்கள் தனி வீட்டில் இருக்க ஆரம்பித்தபின் அவனுடைய தாயார் தகப்பனார், சகோதர சகோதரிகள் யாராவது அங்கு வந்துபோய்க் கொண்டிருந்தனர். எப்பொழுது பிள்ளை நன்றாகச சம்பாதிப்பான், தாங்களும் அவனிடம் போய் இருக்கலாம் என்று அவனுடைய பெற்றோர்கள் கனவு கண்டு கொண்டிருந்தனர்.

முதலில் மதுரத்திற்கு அவர்கள் வந்துபோவது சகஜமாக இருந்தது. ஆனால் தாயின் போதனை ஏற ஏற, அவளுக்கு அவர்களுடைய வருகை பிடிக்கவில்லை. சிற்சில சமயங்களில் அவர்கள் ஏழை என்பதை ஸ்ரீனிவாஸனிடம் அவள் ஜாடையாய்ச் சுட்டிக் காட்டினாள். நாளாக ஆக அவளுக்கு இந்தக் குணம் வளர்ந்துகொண்டே வந்தது. தன் தகப்பனார் கணக்கில்லாமல் பணத்தைக் கொடுத்துத் தங்கள் குடும்பத்தை நடத்தியபொழுது, இவர்கள்வேறு தண்டச் சோற்றுக்கு வரவேண்டுமா, என்று அவள் எண்ணிக் கொள்வாள். அவர்கள் யாராவது வந்தால் தனக்குச் சுரம் என்று போர்வையை இழுத்துப் போர்த்துக் கொண்டு படுத்துவிடுவாள். இல்லாவிட்டால் பிறந்தகத்திற்குப் போய்விடுவாள். சமைத்துப் போட்டால் அவர்களுக்கு ஜீரக ரஸமும் சாதமும்தான்.

"இப்படிச் செய்கிறாயே, மதுரம்?" என்று ஸ்ரீனிவாஸன் கேட்டுவிட்டால் வீட்டில் ரகளை தான்.

"ஆமாம், நமக்கு வரும் ஐம்பது ரூபாயில்வேறு என்ன சாதம் சாப்பிடமுடியும்னு நினைக்கிறீர்கள்? இந்த மட்டும் அப்பா கொடுக்கிறாரோ, குடும்பம் கௌரவமாக நடக்கிறதோ" என்று அவள் சொல்லுவாள்.

கொஞ்சநாள் இந்தச் சூடான சொற்களை ஸ்ரீனிவாஸன் பொறுமையாகவே ஏற்றுக் கொண்டு வந்தான். ஆனால் ஒரு புருஷன் எவ்வளவு நாட்கள் தான் பொறுக்கமுடியும்.

ஒருநாள் அவன் தங்கை கமலா செங்கற்பட்டிலிருந்து அவனைப் பார்க்கவந்தாள். அவள் மறு

நாள் காலையிலேயே புறப்பட்டுப் போவதாக இருந்ததால், மதுரத்தை அன்று சாயங்காலம் ஸினிமாவிற்குப் போகலாமா என்று அவள் கேட்டாள். அந்த சமயத்தில் ஸ்ரீனிவாஸனும் அங்கு வந்து சேர்ந்தான்.

"சினிமா போவதென்றால் ரூபாய் வேண்டாமா? அது யார் கையில் இப்பொழுது துள்ளுகிறது?" என்று சொல்லிக் கொண்டே அங்கிருந்து போய் விட்டாள் மதுரம்.

கமலாவிற்கு முகம் சுண்டி விட்டது. ஸ்ரீனிவாஸனும் ரோஸத்துடன் குமுறினான். ஆயினும் மறுநாள் தன் தங்கை ஊருக்குப் போகும்வரை அவன் தன் கோபத்தை அடக்கிக் கொண்டிருந்தான்.

மறுநாள் அவளை ரயிலேற்றி விட்டு ஸ்ரீனிவாஸன் வீட்டிற்கு வந்தான். அவன் பின்னாடியே வாசற் கதவைத் தாழிட்டுக் கொண்டு உள்ளே வந்து மதுரம் மாடிக்குச் செல்லப்போவதை அறிந்ததும் அவளை அவன் கூப்பிட்டான். அவள் சிரித்துக் கொண்டே அவனருகில் வந்து அமர்ந்தாள்.

"ஏன் மதுரம் நேற்று கமலாவின் எதிரில் அப்படிப் பேசினாய்?" என்று அவளை வினவினான்.

"நான் உள்ளதைத்தானே சொன்னேன்!"

"என்னை அவளெதிரில் அப்படித்தானா அவமானப் படுத்த வேணும்?"

"என்ன அவமானம்? அவர்கள் உங்கள் மனிதர்கள் தானே?"

"கொஞ்ச நாளாகவே நீ இப்படி நடத்து கொள்கிறாய். இனி மேல் என்னால் இதைப் பொறுக்க முடியாது. உனக்கு என்னுடன் இருக்க இஷ்டமில்லாவிட்டால் உன் தகப்பனாரிடம் போய்விடு."

"நீங்கள் எப்படிக் காலக்ஷேபம் செய்யப் போவதாக உத்தேசம்? நான் இங்கில்லாவிட்டால் அப்பா ரூபாய் கொடுக்கமாட்டார்."

"எப்படியோ சமாளித்துக் கொள்கிறேன். என்னைப் பற்றி நீ கவலைப்பட வேண்டாம்."

உடனே மதுரத்திற்கு ரோஸம் வந்துவிட்டது. ஒரு வண்டியைக் கூப்பிட்டுத் தன் சாமான்களைத் தூக்கிக் கொண்டு தன் தகப்பனார் வீட்டிற்கு அன்று சாயந்திரமே சென்றுவிட்டாள். நான்கு நாட்கள் கழிந்தால் அவள் தானே திரும்பி வந்துவிடுவாள் என்று ஸ்ரீனிவாஸன் எதிர்பார்த்தான். ஆனால் அவள் வரவில்லை. ஒன்றரை மாதம் வீட்டிலே தங்கியிருந்து பார்த்தான். அவனுக்குச் செலவு கட்டிவரவில்லை. மதுரமும் அவனைக் கவனித்ததாகத் தெரியவில்லை. ஆகவே அவன் தன் மாமனார் வாங்கிப் போட்டிருந்த சாமான்களை எல்லாம் ஒரு வண்டியிலேற்றி அவருடைய வீட்டிற்கு அனுப்பிவிட்டு விளம்பர போர்டைக் கழற்றிக்கொண்டு தஞ்சாவூருக்குச் சென்று விட்டான். மதுரத்திற்குப் பச்சாத்தாபம் பிறந்து, தானே திரும்பிவரும் வரையில் தான் அவளுக்காகக் காத்திருப்பதென்று நிச்சயம் செய்து, அவளைப் பார்க்காமலேயே சென்று விட்டான்.

ஒரு வருஷத்திற்குப் பிறகு அவனுக்கு அங்கே நன்றாகப் பிராக்டிஸ் கிடைத்தது என்று சுந்திரமையர் கேள்விபபட்டார்.

தகப்பனர் வீட்டிற்கு வந்த மதுரமோ நாளாக ஆகத் தன் தவறைத் தானே உணரலானுள், ஆனாலும் அவர் முதலில் தன்னைக் கூப்பிடட்டும்என்று அவளுக்குத் தோன்றிற்று. கொஞ்சம் நாளில் அவளுக்கு அந்த வைராக்கியமும் போய்விட்டது. தானே போனல் என்ன குற்றம் என்று தோன்றிற்று. தாயாரிடம் சொல்லப் பயந்து கொண்டு இரண்டு நாட்கள் சும்மா இருந்தாள். மூன்றும் நாள் சங்கரியம்மாளும் சுந்தரமையரும் ஏதோ பேசிக்கொண்டிருந்த பொழுது, அங்கே போய்த் தான் மறுநாள் கணவன் வீடு செல்வதாகச் சொன்னுள்.

"போடீ போ! உனக்கிருக்கும் சொத்திற்கு அவன் தானே உன் காலில் வந்து விழுவான்; அவனிடம் நீ போக வேண்டாம்! என்று அவர்கள் போதனை செய்தார்கள். அவள் அதற்கு மேலும் பிடிவாதம் பிடிக்க ஆரம்பிக்கவே, சுந்தரமையர் கண்டிப்பாக அவள் அங்கு போகக் கூடாது என்று சொல்லி விட்டார். அதற்கு மேல் அவளுக்குப் பிடிவாதம் பிடிக்கத் தைரியம் எழவில்லை.

இச் சம்பவம் நிகழ்ந்த இரண்டு நாட்களுக்கெல்லாம், ஸ்ரீனிவாஸன் தஞ்சாவூருக்குச் சென்றுவிட்டான் என்ற சமாசாரத்துடன், சுந்தரமையர் அவனுக்கு வாங்கிக் கொடுத்த சாமான்கள் வந்து சேர்ந்தன.

இப்பொழுது மதுரம் தன் புருஷனின் வீட்டிலிருந்து வந்து ஏறக்குறைய இரண்டு வருஷங்கள் கழிந்துவிட்டன. தன்னை அவரிடம் கொண்டு விடுமாறு தன் தாயாரைப் பலமுறை கெஞ்சினுள். ஆனல் அவளுடைய வேண்டுகோள்கள் சங்கரியம்மாளிடம் பலிக்கவில்லை.

3

இந் நிலையில் தன் கணவருக்கு உடம்பு சரியாக இல்லை என்ற கடிதம் வரவே மதுரம் குழம்பிப் போய்விட்டாள். தாயாரிடம் கடிதத்தைக் காண்பித்தால், அவள் அதிலிருந்த செய்தியை நம்பமாட்டாள் என்று அவளுக்குத் தெரியும். சற்று நேரம் யோசித்தாள். வேறு வழி தெரியாமல் கடிதத்தை எடுத்துக் கொண்டு தாயாரையே தேடிச் சென்றுள்.

சங்கரியம்மாள் தோட்டத்தில் மேல்பார்வை யிட்டுக் கொண்டிருந்தாள். மதுரத்தைப் பார்த்ததும் "என்னடி கையில் கடுதாசு" என்று வினவினுள். மதுரம் அவளிடம் கடிதத்தைக் கொடுத்தாள். அதைப் படிக்கையிலேயே சங்கரியம்மாளின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

"பேஷ், இப்படித் தந்திரம் செய்ய ஆரம்பிச்சுட்டாளா? அவனுக்குத் தானே வந்து உன்னைக் கூப்பிடத் துப்பில்லையாக்கும்?" என்று வைதுகொண்டே கடிதத்தை எடுத்துக் கொண்டு கணவரின் அறைக்குச் சென்று, அதை அவரிடம் காட்டினுள்.

அவர் அதைப் பார்த்துவிட்டு "இப்போ பணம் முடையாக்கும். இந்தப் பக்கம் வரட்டும் சொல்லறேன்" என்று கூறினர்.

அறையின் வெளியிலிருந்து இவைகளையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த மதுரத்திற்குக் கோபம் பொங்கிற்று. பேசாமல் தன் அறைக்குச் சென்று அழுது கொண்டே படுத்து விட்டாள். பிறகு பத்து நாட்கள் அழுது

புரண்டு சாப்பிடாமல் பிடிவாதம் பிடித்துப் பார்த்தாள். ஆனல் பெண்ணின் பிடிவாதம் பணத்தின் செருக்கின் முன் தோல்வி அடைந்தது.

4

கடிதம் கிடைத்த பதினொன்ரும் நாள் காலே, சுந்தரமையரின் வீட்டு வாசலில் ஒரு ஜட்கா வந்து நின்றது. அதிலிருந்து ஸ்ரீனிவாஸன் கறுத்து, இளைத்துப் பார்க்கவே ஜுரக்காரன் என்று விளங்கும்படி, இறங்கினன். உள்ளே ஆபீஸ் கட்டுகளைப் பார்வையிட்டுக்கொண்டிருந்த சுந்தரமையர் வண்டிச் சப்தம் கேட்டு வாசலுக்கு வந்தார். மாப்பிள்ளையைப் பார்த்ததும் பல மாதங்களாய் அவர் அடக்கி வைத்திருந்த கோபம் மடை திறந்து வெகு வேகமாய்ப் பாய்ந்தது.

"என்னடா! பணமில்லாது போகவே இங்கு வந்து விட்டாயா? மூஞ்சியைப் பார்த்தாலே தெரியறதே", என்று வரம்பு கடந்து இரைய ஆரம்பித்தார். அதற்குள் சங்கரியம்மாளும் வாசலுக்கு வந்து சேர்ந்தாள்.

"நான் மதுரத்தை ஒரு முறை பார்த்துவிட்டுப் போய்விடுகிறேன். நான் இங்கிருக்கவோ பணம் கேட்கவோ வரவில்லே," என்று நிதானத்தை இழக்காமலே ஸ்ரீனிவாஸன் மொழிந்தான்.

"என் வீட்டு வாசற்படியை நீ மிதிக்கக்கூடாது" என்று கர்ஜித்தார் சுந்தரமையர். அப்பொழுது தான் ஏ்ளுன அறையிலிருந்து வெளி வந்த மதுரம் வாசலில் இரைச்சலேக் கேட்டு அங்கு ஓடிவந்தாள். ஆனல் உடனே அவளுடைய தாயார் அவளே இழுத்துச் சென்று ஓர் அறையில் போட்டுப் பூட்டிவிட்டாள்.

ஸ்ரீனிவாஸன் அதற்கு மேலும் அங்கு நிற்க இஷ்டப்படாமல் தான் வந்த வண்டியிலேயே திரும்பிவிட்டான். எல்லோரெதிரிலும் அவமானப் படுத்தப்பட்டது அவன் மனதைப் புண்ணில் இட்ட கோல் போலக் குத்திற்று.

ஊருக்குச் சென்றதும் பிரயாணக் களைப்பும் ஏக்கமும் வியாதியுடன் சேர்த்து அவனே வாட்ட, அவன் ஒரே படுக்கையாகப் படுத்துவிட்டான். அவனுடைய தாயாருக்கோ தான் இப்படிப் பணத்திற்கு ஆசைப்பட்டு சுந்தரமையர் வீட்டில் போய்ச் சம்பந்தம் செய்தோமே என்ற வருத்தம் நெஞ்சைப் பிளந்தது.

ஒரு வாரம் மெள்ள மெள்ளக் கழிந்தது. ஸ்ரீனிவாஸனின் நிலே மேலும் மேலும் மோசமாயிற்று. டாக்டர்களும் கை விட்டுவிட்டனர்.

எட்டாம் நாள் காலே அவனுக்கு மதுரத்திடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதைப் பார்த்ததும் அவனுக்குச் சந்தோஷம் தாங்கவில்லே. தான் செய்த தப்புகளுக்கெல்லாம் அவனே மன்னிப்புக் கேட்டுவிட்டு, தான் எப்படியாவது அவனிடம் வெகு சீக்கிரம் வந்து சேர்ந்து விடுவதாகவும் அவள் எழுதியிருந்தாள்.

கடிதத்தை அவன் நான்கு முறைகள் திருப்பித் திருப்பிப் படித்தான். பிறகு அதைத் தன் தலேயணையின் அடியில் வைத்துக் கொண்டு, கண்களை மூடிக் கொண்டான். அன்று சாயந்திரமே அவனுடைய ஆத்மா பணப் பேய் பிடித்த உலகை விட்டு அகன்றது.

சகோதரிகளின் சந்தேகங்கள்

●

எஸ். விசாலாட்சி

ஒரு நாளைய தபாலில் "மங்கை"யைப் படிக்கும் ஒரு சகோதரியிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் ஒரு கேள்வியைக் கேட்டு அதற்குத் தகுந்த பதில் சொல்லி அவளுடைய துக்கத்தை கொஞ்சம் குறைக்குமாறு கேட்டிருந்தாள். அதற்கு உடனேயே கீழே கண்ட பதிலை எழுதித் தபாலில் போடச் செய்தேன். இது சில குடும்பங்களில் நடக்கும் தொல்லைகளில் ஒன்று. கேள்வியையும் பதிலையும் கீழே தருகிறேன்.

கேள்வி: "கோமதி, கோபாலபுரம்."

"என் கணவருக்கு மூடக் கொள்கை, அசட்டு ஆசாரம், இவைகள் கொஞ்சம் கூடப் பிடிக்காது. என் மாமியாருக்கோ இதுகள் தான் பிராணன். கணவர் ஒன்று செய்யச்சொன்னால் மாமியார் தடுப்பார். என் மாமியாருக்கோ எழுத்து வாசனையோ, பகுத்தறிவோ கொஞ்சங்கூட இல்லாமையால் "பொட்டச்சிகளுக்கு என்ன படிப்பு? அந்தச் சமயத்தில் இரண்டு இலைகளாவது தைத்தால் உபகாரமாக இருக்கும்" என்று கத்துவார் மாமியார். மாமியாரின் புத்தியைத் திருப்புவதற்கு என்ன உபாயம் என்று தெரிவிக்கக் கோருகிறேன்.

பதில்: ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா என்று சொல்வார்கள். உன்னுடைய மாமியாரின் பழக்க வழக்கங்கள் பல ஆண்டுகளாக அவர் வாழ்க்கையில் ஊறி அவருடன் ஒன்றாய் விட்டவை. அவற்றை ஒழிப்பதோ, திருத்துவதோ சுலபமன்று. ஆனால் எல்லாவற்றையும் ஜயித்து வெற்றி யளிக்கக்கூடிய ஆயுதம் ஒன்று இருக்கிறது. அதுதான் அன்பு. நீ உன் மாமியார் சொல்வது உன் நன்மைக்கே தான் என்று எண்ணிக்கொள். அவரிடம் அதிக அன்பைக் காட்டவேண்டும். உனது கணவரும் தாயின் மனம் புண்படக் கூடிய வார்த்தைகளையோ, காரியங்களையோ செய்யக் கூடாது. நீயும் உன் கணவரும் உங்கள் உள்ளன்போடு செய்யும் உபசரணைக்கு உவந்து உனது மாமியார் மனம் திரும்பும். பிறகு குடும்பத்திற்கு நீதான் இராணி.

நம்முடைய வழக்கங்கள் பல நமது பெற்றோர்களுக்குப் புதியவை. அவர்களுக்கு அவை மிக மிக நல்ல பழக்கங்களாக இருந்தபோதிலும் புதியனவாகையால், விரும்பத் தகாதவைகளாகத் தோன்றும். ஆகையால் முன்னதாக அவர்களுக்கு நமது பழக்கங்கள் நன்மை செய்யக் கூடியவை, என்பதை உணரும் படி செய்யவேண்டும். ஆனால் நமது முயற்சிகள் பலனளிக்காவிட்டால் அதற்காக நாம் நல்ல பழக்கங்கள் என்று தோன்றுவதை விட்டுவிடக் கூடாது. மற்றவர்கள் பரிகாசம் செய்கிறார்களே, கேலி செய்கிறார்களே என்று நாம் சரி என்று எண்ணும் விஷயங்களைத் துறந்து விடக் கூடாது. ஒவ்வொருவருக்கும் அவரது மனச் சாட்சிக்கு விரோதமில்லாமல் நடக்க உரிமை யுண்டு. அந்த உரிமையை விட்டுக் கொடுக்கக்கூடாது.

இன்னொரு விஷயம்; நீ பொறுமையே பூஷணமாகக் கொள்.

உன் கணவரைப் பத்து மாதம் சுமந்து ஈன்று பல கஷ்டங்களுக்குள்ளாகி வளர்த்து உனக்களித்துள்ள மாமியாரின் தியாகம் பெரிது. அவருக்கு நீயும் உன் கணவரும் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறீர்கள் என்பதை மறக்கக்கூடாது, "பேயானாலும் தாய்" என்னும் பழமொழியை நினைத்துப் பார்.

உன் கடிதத்திலிருந்து உனக்கு ஆங்கிலப் படிப்பு உண்டென்றறிகிறேன், ஆங்கிலக் கவி ஈடித் ஸிட்வெல் அம்மையார் 'இருதயமும் பன்றி எலும்பும்' என்றொரு அரிய கவி புனைந்திருக்கிறார். இதை நீயும் உன் கணவரும் படித்தீர்களானால் கட்டாயம் உங்கள் சகிப்புத் தன்மை அதிகரிக்கும்.

யோகா சனங்கள் செய்வதை உன் மாமியார் கேலி செய்வதற்காக நிறுத்த வேண்டாம். நூற்பதும் அப்படியே மாமியாரைத் திருப்தி செய்வது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் தான் இவையும். அவர் இடும் அலுவல்களை செய்து முடித்துவிட்டு, உன் அலுவல்களாகிய படிப்பு, நூற்பது முதலானவற்றைச் செய்ய முடியுமென்று நம்புகிறேன். நான் சுய அனுபவத்தோடு தான் எழுதுகிறேன். ஆகையால் போகாத ஊருக்கு வழி காட்டுவதாக நீ எண்ணக்கூடாது.

மங்கையர் இன்பம்

மங்கையர் பலவீனமானவர்கள் என்று கூறுவது தவறு. ஆனால் துன்பத்தைத் தாங்க முடியாதவர்கள் என்பது ஓரளவு உண்மை.

மங்கையரின் இன்பம் நல்லறமான இல்லறத்தில் தான் இருக்கிறது.

ரூஸோ

ஸ்வர்க்கம் எங்கே?

ஸ்வர்க்கம் எங்கேயோ இல்லை. நம்முடைய மனதில் தான் இருக்கிறது! நம்முடைய செயல்கள், எண்ணங்களிலேதான் இருக்கிறது. தனித்து எங்கேயோ இருப்பதாக எண்ணித் தேடுபவர்கள் மனதிலே தாமாகவே நரகத்தைச் சிருஷ்டித்துக் கொண்டவர் களாகிறார்கள்.

இராமாயணம், பாகவதம், ஸ்காந்த புராணம், கீதை முதலிய மதக் கிரந்தங்களை உங்கள் மாமியாருக்குப் படித்துக் காட்டினால் நீ படிப்பதை அவர் தடுக்க மாட்டார் என்று நினைக்கிறேன். பங்களூர் ஸ்ரீ சுந்தரம் இயற்றியுள்ள 'ஆனந்த ரகசியம்' என்னும் புத்தகத்தையும் படித்துக் காட்டலாம். அவர் நீ படிப்பதை முழுக்கக் கேட்டுவிட்டால் நீ யோகாசனம் செய்வதைக் கேலி செய்வதற்குப் பதிலாக அவர் தாமேசெய்யத்தொடங்கிவிட்டாலும் அதிசயப்பட வேண்டாம்!

அன்பும் பொறுமையும்உங்கள் இல்லற வாழ்க்கையை இன்புறச் செய்யக் கடவுளைத் துதியுங்கள். பிரார்த்தனையால் முடியாதது ஒன்றுமில்லை என்று ஆங்கிலக் கவி லார்ட் டென்னிஸன் எழுதியுள்ளதை நீ படித்திருப்பாய்.

கேள்வி: "நாகலட்சுமி," நாகர் கோயில் "எனக்கு அடிக்கடி கொறக்கள்ளி பிடித்துக் கொள்கிறது. அதற்கு என்ன செய்வது?"

பதில்: உன் வயது என்ன; கர்ப்பமாயிருக்கிறாயா! கடுமையான மலச் சிக்கல் உண்டா? இம் மூன்றில் ஏதாவதொன்று கொறக்கள்ளிக்குக் காரணமாயிருக்கலாம். கடுமையான மலச் சிக்கலிருந்தாலும்,கர்ப்பமாயிருந்தாலும் குடலின் அடிப் பாகம்

சியாடிக் நரம்பை உறுத்துவதால் கொறக்கள்ளி உண்டாகும். எதற்கும் மலச் சிக்கல் இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். உடனடியாகச் சிறிது பிராந்தியும் கடுகெண்ணெயும் கலந்து தேய்க்கலாம். அல்லது டர்பென்டைன் போட்டுத் தேய்க்கலாம்.

வயது நாற்பதுக்கு மேலிருந்து அடிக்கடி இந்த உபத்திரவம் ஏற்பட்டால் பிண்டத் தைலத்தைத் தினசரி தடவி வெந்நீர் விட்டுக் கொள்வதால் குணம் உண்டாகும்.

கடுமையான மலக்கட்டு இருந்தால் பிரதி தினமும் கீரைகளைச் சாப்பிட்டும், யோகாசனங்கள் செய்தும் நிவர்த்திக்க வேண்டும். கீரை வகைகளை அதிகம் சேர்த்துக் கொள்ளவேண்டும். பசளைக் கீரையில் வைடமின் "பி" சத்திருப்பதால் மிகவும் நல்லது.

இந்த மாதிரி அநேக கடிதங்கள் சகோதரிக ளிடமிருந்து தினம் வந்து கொண்டிருக்கின்றன. நான் அவைகளுக்குத் தகுந்த பதிலை "மங்கை" வாயிலாகவே மற்ற சகோதரிகளுக்கும் பயன்படும் முறையில் எழுதுகிறேன். நீங்களும் நடைமுறையில் உங்களுக்கு ஏதேனும் இம் மாதிரி சந்தேகங்களோ, கஷ்டங்களோ இருந்தால் "ஆசிரியை, "மங்கை" ராயப்பேட்டை" என்ற விலாசமிட்டு எழுதினால் "மங்கை" வாயிலாகவே தகுந்த பதிலை எழுதுகிறேன். தனியாகப் பதில் வேண்டுவோர் $1\frac{1}{2}$ (ஒன்றரை) அணா தபால் தலையுடன் எழுதினால் தனியாகவே பதில் எழுதுகிறேன். மேற்கண்ட கேள்விகளையும் பதில்களையும் படித்துப் பாருங்கள். உங்களுடைய யோசனையையும் எழுதுங்கள்.

மங்கை

மாதப் பத்திரிகை

●

தனிப் பிரதி 'தபால்'	0	8
ஆறு மாதம்	3	8
ஒரு வருஷம்	6	0
2 வருஷம்	11	0

ரெஜிஸ்டர் மூலம் பெற விரும்புவோர் பிரதி ஒன்றுக்கு 0-3-0 விகிதம் சேர்த்து அனுப்பவேண்டும்

பர்மா

தனிப் பிரதி	0	9
ஆறு மாதம்	4	0
ஒரு வருஷம்	7	0
2 வருஷம்	13	0

மலேயா, முதலிய வெளி நாடுகளுக்கு

தனிப் பிரதி	0	10
ஆறு மாதம்	4	0
ஒரு வருஷம்	8	0
2 வருஷம்	15	0

●

சக்தி காரியாலயம்
சென்னை 14

என்ற விலாசத்திற்குச் சந்தாத் தொகை அனுப்பவேண்டும்

உங்கள் பணத்தைச் செலவழிப்பதெப்படி?

குஞ்சலம்

குடும்ப சச்சரவுகளில் நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது பணக் கஷ்டத்தினால் ஏற்படுபவை என்றால் என்னுடன் ஒருவரும் வாதத்திற்கு வரமாட்டார்கள். பணக் கஷ்டத்திற்குக் காரணம் வருவாயும், செலவும் சரிக்கட்டி வராததுதான்.

நூற்றில் ஒரு குடும்பமாவது இந்த மாதிரி சச்சரவு இல்லாமல் இருப்பது கிருக லட்சுமியின் விவேகத்தினால்தான். என்னுடன் படித்துக் கொண்டிருந்த சீதா ஒரு ஐ. ஸி. எஸ். ஐக் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறாள். காதல் கல்யாணம். அவள் கணவன் சம்பளத்தை வாங்கி அவளிடம் அப்படியே கொடுத்து விடுகிறான். அவளும் முந்திய மாதம் 25-ம் தேதியிலிருந்தே வரப்போகும் மாதத்திற்கு 'பட்ஜெட்' தயார் செய்ய ஆரம்பிக்கிறாள். ஆனால் அடுத்த மாதம் 15-ம் தேதியிலிருந்து "அவர் என்ன சொல்வாரோ" என்று பயப்பட ஆரம்பிக்கிறாள்!

ஆனால் ரங்கநாயகி இருக்கிறாளே, அவளுக்கு இந்தத் தொந்தரவே கிடையாது. அவள் கணவனுக்கு எண்பது ரூபாய் தான் சம்பளம்.

ஒரு மாமியார், விதவையான ஒரு ஓர்ப்படி, அவள் பெண், தன்னுடைய இரண்டு பெண்கள் தவிர வரும் விருந்தினர்கள் எல்லாம் உண்டு. ஆனால் அவளுக்கு பணத்தைக் குறித்து கவலையே இல்லை. அவள் நூற்றில் ஒருத்தியாக இருக்கிறாள்.

சிலர் சேமித்துவைப்பதிலேயே கண்ணாயிருப்பதால் அவர்கள் அவசியமான செலவுகளைக் கூட அனாவசியமாகக் கருதி அவதிப்படுகிறார்கள். மற்றும் சிலர் பணம் இருக்கும் போது கவலையின்றி செலவழித்துவிட்டு இல்லாத போது ஏக்க முற்று ஊதாரிகள் என்று பெயர் பெறுகிறார்கள்.

பணத்தைச் சம்பாதிப்பது பெரிதல்ல. அதைச் சரிவர செலவழிப்பதுதான் விவேகம்.

சுமார் இருபதாண்டுகளாக பத்திரிகைகள் மூலம் இளைஞர்களுக்கும் வயது முதிர்ந்தவர்களுக்கும் குடும்பப் பொருளாதார திட்டத்தை உபதேசிப்பது என்று எண்ணி, அந்த விஷயத்தைக் குறித்து பல கட்டுரைகளை எழுதியிருக்கிறேன். அவற்றைப் படித்து அனுபவத்தில் பரீட்சை செய்து பார்த்தவர்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டிருந்ததால், அந்தப் பரந்த அனுபவத்தின் மூலம் இந்தக் கட்டுரையை 'மங்கை' வாசகர்களுக்கு எழுதுகிறேன். நீங்களும் என் யோசனைகளை பரீட்சை செய்து பார்த்து உங்கள் அனுபவத்தை எனக்கு எழுத வேண்டுமெனக் கோருகிறேன்.

வருவாயில் இந்த சத விகிதம் வீட்டு வாடகைக்கு, இது சாப்பாட்டுக்கு, இது சினிமாவுக்கு என்று ஆரம்பத்தில் ஆடம்பரமாக திட்டம் வகுப்பவர்கள்; அந்த திட்டம் அனுபவ சாத்தியமா என்று ஆலோசிப்பதில்லை. என் சிநேகிதை ஒருத்தி ஒரு பத்திரிகையின் சமையல் பகுதிக்கு ஒரு பட்சணம் செய்யும் முறையை

எழுதிக் கொண்டிருந்தாள். அதைப் படித்த எனக்கு அந்தப் பட்சணம் செய்வதற்கோ புசிப்பதற்கோ உசிதமாயிருக்குமென்று தோன்றவில்லை. என் சந்தேகத்தை ஆசிரியரிடம் தெரிவித்தேன். "அதைச் செய்யவோ தின்னவோ வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கில்லையே" என்று அவள் சிரித்துக் கொண்டே சொன்னாள். அதேபோல் குடும்பச் செலவுகளுக்குப் பணம் ஒதுக்குகிறவர்களும் அது சாத்தியமா என்று யோசித்துப் பார்த்தால் மட்டும் போதாது. அந்தத் திட்டத்தின்படி குடும்பத்தையே நடத்திப் பார்க்க வேண்டும்.

முதல் முதலில் ஒரு காகிதத்தின் இடது புறத்தில் அடுத்த மாதம் என்ன வரும்படியை எதிர் பார்க்கிறீர்கள் என்று குறித்துக் கொண்டு அந்த மொத்தத்தைக் கூட்டி வருமான மெவ்வளவு என்று நிச்சயித்துக் கொள்ளுங்கள். சந்தேகாஸ்பதமான வருமானம் வேருக நிற்க வேண்டும்.

அடுத்தபடியாக உங்களுடைய தேவைகளை காகிதத்தின் வலது புறத்தில் வரிசையாகக் குறித்துக் கொள்ளுங்கள். அந்தத் தேவைகளில் முக்கியமானவைகளின் சராசரி செலவை எழுதுங்கள். பிறகு மிச்சம் என்ன இருக்கிறதென்று பார்த்துக் கொண்டு அதற்குத் தகுந்தாற்போல மற்ற தேவைகளுக்குப் பணத்தை ஒதுக்குங்கள். வலது புறத் தொகை இடதுபுறத் தொகைக்கு அதிகமா யிருந்தால் இவற்றில் எதைக் குறைத்துச் சிக்கனம் செய்ய முடியும் என்று ஆலோசித்து நிச்சயம் செய்யவேண்டும். எடுத்தவுடன் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாதவை என எண்ணத் தகாதவை என்று அவற்றை அடித்துவிடக் கூடாது. உதாரணமாக குடும்பத் தலைவரின் சிகரட் செலவு 20 ரூபாய் என்று எழுதியிருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். செலவு வரவை விட 20 ரூபாய் அதிகமா யிருப்பதால் இந்த ஒரு வரியை அடித்துவிட்டால் போதுமென்று நினைத்தால் அதைவிட அனர்த்தம் வேறு வேண்டாம்.

என் அனுபவத்தி லிருந்தே சொல்லுகிறேன். எத்தனையோ பேர்களுக்கு அவர்களுடைய வருமானம் எத்தனை என்று தெரியாது. குடியானவர்கள், கமிஷன் ஏஜண்டுகள் தினக் கூலித் தொழிலாளர்கள் முதலியவர்களுக்கு அவர்களுடைய சராசரி மாத வருமானம் என்னவென்றே தெரியாது. அவர்கள் அன்றுடத் தேவையை மாத்திரம் பூர்த்தி செய்து கொண்டு வருவதால் மனித சமூகத்தின் பொருளாதாரத் திட்டமே அவர்களால் தலை கீழாகி விடுகிறது.

"உங்களால் எங்களுக்கு ஒரு சகாயமும் செய்ய முடியாதம்மா. எங்களுக்கு ஏதாவது திட்டமான வருமானம் இருந்தால்தானே செலவுக்குத் திட்டம் போட. எங்கள் கஷ்டங்களுக்கெல்லாம் அதுதானே காரணம். ஒரு நாளைக்கு மூன்று ரூபாய் சம்பாதிக்கிருர். நானும் வரட்டி தட்டி விற்று நான்கணு சம்பாதிக்கிறேன். போன மாதம் வீட்டு வாடகை கொடுக்கவில்லை. சீட்டுப் பணம் கட்டவில்லை. கடன் வேறு எட்டு ரூபாய் வாங்கி யிருக்கிறேன்" என்று ஒரு தச்சு மேஸ்திரியின் மனைவி என்னிடம் கூறினாள்.

மேரி சந்தோஷத்தின் கணவன் அச்சாபீஸ் தொழிலாளி. அவள்

மாதம் பதினைந்து ரூபாய் சேமித்து வைக்கிறாள். "போன மாதத்தை விட இந்த மாதம் பதினைந்து ரூபாய் குறைவாக வரும். வாரத்தில் ஒரு நாள் வேலை யில்லாமல் போய்விடும். அல்லது ஏதாவது சனியன் பிடித்த வேலை நிறுத்தம் வந்து விடும் என்று நினைத்துக் கொண்டு அதற்கேற்றாற் போல் செலவு செய்கிறேன்" என்று மேரி சொல்கிறாள்.

நான் தச்சு மேஸ்திரி மனைவியை அதோடு விட்டுவிட வில்லை. "போன மாதம் உன் கணவன் எத்தனை நாள் வேலைக்குப் போக வில்லை." என்று கேட்டேன். பல கேள்விகள் மூலம் அவர்களுக்குச் சென்ற மாதம் ஐம்பத்தைந்து ரூபாய் வருமானம் இருந்ததாகத் தெரிந்தது.

"ரொம்ப சரி, அடுத்த மாதமும் அதே வருமானம் வரும் என்று அதற்குத் தகுந்தாற் போல திட்டம் போடுகிறது தானே" என்றேன். அதற்கு அதிகமாகக் கிடைக்கும் பணத்தை என்னிடம் கொடுத்தால் அவள் பெயரில் ஸேவிங்க்ஸ் பாங்கியில் கட்டுகிறேன் என்றேன். அவள் ஒப்புக் கொண்டாள். இப்பொழுது அவள் கணவன் சொந்தத்தில் ஒரு தச்சன் பட்டரை வைத்துக் கொண்டு மேஜை, நாற்காலி முதலிய சாமான்களைத் தயார் செய்து கம்பெனிகளுக்கு அனுப்புகிறான். ஒரு சிறிய வீடு கூட வாங்கி யிருக்கிறார்கள்.

ஜானகியின் தகப்பனார் அவள் கணவனுக்கு ஐயாயிரம் ரூபாய் வரதக்ஷிணை கொடுத்தார். சாந்தி முகூர்த்தத்தின் போது தேவையான பாத்திரங்கள் மரச் சாமான்கள் எல்லாம் வாங்கிக் கொடுத்தார். ஜானகியின் கணவன் ராமசாமி அப்பொழுது தான் பி. எல். பாஸ் செய்திருந்தான். அவர்கள் மூவாயிரம் ரூபாய்க்கு ஒரு பழைய மோட்டார் கார் வாங்கிக் கொண்டு மைலாப்பூரில் ஒரு பங்களாவில் குடியிருக்கப் போனார்கள்.

ராமசாமிக்கு ஆரம்பத்தில் நல்ல வரும்படி கிடைத்ததாகவே சொல்ல வேண்டும். மாதம் இரு நூறு கிடைத்தது. ஆனால் பங்களா வாடகை நூறு ரூபாய், மோட்டார் செலவு நூற்றைம்பது ரூபாய், குடும்பச் செலவு நூறு ரூபாய், ஆக முந்நூற்றைம்பது ரூபாய் மாதச் செலவு ஆயிற்று. ஆகையால் ஜானகியின் தகப்பனாருக்கு அடிக்கடி பணவுதவிக்காகக் கடிதங்கள் எழுத வேண்டியிருந்தது. அதிக இன்பமாக நடக்க வேண்டிய குடும்ப வாழ்க்கையிலும் துன்பம் நிறைந்தது.

தற்செயலாக ஜானகியைப் பார்த்து யோக க்ஷேமம் விசாரித்தேன். என் பிரியமான தொண்டென்னவென்று அவளுக்குத் தெரியுமாகையால் அவள் என் யோசனையைக் கேட்டாள்.

"முதலில் மோட்டார், வண்டியை விற்று விடு" என்றேன்.

என் யோசனையை ஏற்றுக் கொண்டாள். இப்பொழுது இன்ப வாழ்க்கை நடக்கிறது. பஸ் பிரயாணத்தினால் ராமசாமியின் வருவாய் பாதிக்கப்பட வில்லை. இப்பொழுது சராசரி ஐந்நூறு ரூபாய் வருமானம் இருப்பதாகத் தெரிகிறது.

*

பிரசவ வேதனை

டாக்டர். ஸ்ரீமதி நாமகிரி

தைமாதம் அமாவாசை இரவு பத்து மணிக்கு வீடு திரும்பினேன். அன்று பகல் ஒருமணிக்கு திவான்பகதூர் ராமசாமி அய்யர் பெண்ணுக்கு இடுப்பு வலி கண்டிருப்பதாக வண்டியனுப்பினர்கள். போய்ப் பார்த்துவிட்டு ஒரு மருத்துவ ஸ்திரீயை ஏற்பாடு செய்துவிட்டு, அவசியமானல் சொல்லியனுப்ப வேண்டுமென்று சொல்லிவிட்டு வந்தேன். பிரசவத்திற்கு சுமார் எட்டு மணி நேரமாவது ஆகலாம் என்று பரீக்ஷை செய்ததிலிருந்து தோன்றிற்று. ஆனல் இரவு எட்டு மணிக்குள் ஐந்து தடவை நான் போய்ப் பார்க்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. முதலில் திவான்பகதூர் வந்தார். பிறகு அவர் சகோதரி வந்தாள். அப்புறம் அவர் மாப்பிள்ளை வந்தார். இப்படி ஒவ்வொரு தடவையும் யாராவது ஒருவர் வந்து கையோடு அழைத்துக்கொண்டு போனர்கள்.

பல பிரசவங்களைப் பார்த்த எனக்கே "ஐயோ பாவம்" என்றிருந்தது. பெண் அப்படி அவதிப்பட்டாள். அவள் துடித்த துடியைப் பார்த்த அவள் அத்தை "உலகில் பிரஜா உற்பத்தி இருக்கவேண்டியது மிக மிக அவசியமாக இருக்கும்போது அதனல் பெண்களுக்கு இவ்வளவு வேதனையை ஏன் கடவுள் கொடுக்க வேண்டும்?" என்று என்னைக் கேட்டாள். பெண் தாயார் ஈரேழு பதினலு லோகங்களிலுமுள்ள முப்பத்து முக்கோடி தேவதைகளுக்கும் வேண்டிக்கொண்டு மஞ்சள் துணியில் முடிச்சுப் போட்டு வைத்துக்கொண்டேயிருந்தாள். அவள் பாட்டி "அழுதாலும் பிள்ளை அவதானேடி பெறணும். அழாதேம்மா" என்று கூடத்திலிருந்தபடி சமாதானம் சொல்லிக் கொண்டிருந்தாள். அவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து படுத்தின அமளியில் எனக்கே நிதானம் தவறிவிடும் போலிருந்தது. சரியாக எட்டரை மணிக்கு ஆண் மகவு சுகப் பிரசவமாயிற்று. அதற்குப் பிறகு என் வேலையெல்லாம் முடித்துக்கொண்டு வீடு சேர மணி பத்தடித்துவிட்டது. வேறு உடை அணிந்து சுத்தம் செய்துகொண்டு சாப்பிடப் போனேன். 'கேட்ட'ண்டை யாரோ ஒருவர் தீனமான குரலில் "அம்மா, அம்மா, டாக்டரம்மா" என்று கூப்பிடுவது கேட்டு வெளியில் வந்தேன். கையில் ராந்தலுடன் ஒருவர் நின்றுகொண்டிருந்தார்.

"டாக்டர் இருக்கிருரா?" என்று கேட்டார்.

"உள்ளே வாருங்கள் நான் தான் டாக்டர்" என்றேன்.

சொட்டச் சொட்ட நனைந்திருந்தார். உடம்பு 'வெட வெட' என்று நடுங்கிக்கொண்டிருந்தது. அவர் பேச ஆரம்பிக்கும்போது வாய் "வெவ் வெவ்வே" என்று தாளம் போட்டது.

"என்ன சமாச்சாரம்?" என்று கேட்டேன். மின்சார ஒளியில் அவர் கவலைதோய்ந்த முகத்தைக் கண்ணுற்ற எனக்கு மிகவும் பரிதாபமாக இருந்தது.

"என் சம்சாரம் பிரசவ வேதனையில் இருக்கிருள். சற்று உங்கள் உதவி வேண்டும்" என்ருர்.

"வண்டி கொண்டு வந்திருக்கிறீர்களா?" என்றேன்.

"இல்லை" என்று சொல்லி விட்டு சுற்றுமுற்றும் பார்த்தார்.

"ஒரு ரிக்ஷா இருந்தால் பாருங்கள்" என்று சொல்லி விட்டு சாப்பிடப் போனேன்.

வேலைக்காரர்களெல்லாம் வீட்டிற்குப் போய்விட்டார்கள். என் தாயார் மாத்திரம் எனக்காக விழித்துக்கொண்டிருந்தாள். மழை சற்று பலமாகவே பெய்ய ஆரம்பித்தது.

சாப்பிட்டு வெளியே வந்தேன். 'பளிச்சுப் பளிச்'சென்று வானம் மின்னிற்று. எங்கும் காடாந்தகாரம். ரஸ்தாவின் இருபுறமும் இருந்த விளக்குகள் அந்தகாரத்தை எடுத்துக் காட்டின.

சற்று நேரத்தில் அவர் திரும்பி வந்தார். சற்று அஞ்சிய பாவத்தில் "வெகுதூரம் சென்று பார்த்தேன். வண்டி கிடைக்கவில்லை. தாங்கள் தயவுசெய்து வரவேண்டும்" என்று கெஞ்சினர்.

பதில் பேசாமல் கிளம்பினேன். இதுதானே என் தொழில். இறைவனும் இதற்காகத்தானே என்னை ஏகாங்கியாக்கி யிருக்கிறான்.

மழை காலத்தில்தான் தியாகராய நகர் ஒரு சமயத்தில் ஏரியாக இருந்தது என்று எல்லோருக்கும் நினைவு வரும். இது மறந்துவிடக் கூடாது என்றே நகர பரிபாலன சபையும் மழை ஜலம் வடிய வடிகால் கட்டவில்லை என நினைக்கிறேன். நான் நடந்து—இல்லை ஊர்ந்து—சென்ற ரஸ்தாவில் முழங்காலளவு ஆழம் ஜலம் ஆறு போல் ஓடிக்கொண்டிருந்தது. கூர்மையான கற்கள் மண்ணெல்லாம் அலசிக் கொண்டுபோய் விட்டதால், பாதங்களை சல்லடையாகத் துளைத்தன. அவர் இருப்பிடம் சேரும்போது கடைசி மின்சார வண்டி ஓடிற்று. மணி பன்னிரண்டேகால் என அறிந்தேன்.

அவர்கள் ஜாகை ஒரு மோட்டார் வண்டி நிறுத்துமிடம். வேறு இடம் கிடைக்காததால் அங்கு இருபது ரூபாய் வாடகைக்குக் குடியிருப்பதாகவும் அவர்கள் சதிபதிகள் இருவரும் நகர பரிபாலன சபையார் நடத்தும் பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்களாக இருப்பதாகவும் அவர் சொன்னர்.

இரண்டு மரப் பெஞ்சிகள் போட்டு படுக்கை தயார் செய்திருந்தார்கள். தரையில் சுமார் ஒரு அடி ஜலம் நின்று கொண்டிருந்தது. படுக்கையின் காலடியிலிருந்த பித்தளை டிபன் செட்டு சாப்பாடு வரும் வழியைக் காட்டிற்று.

படுக்கையில் படுத்திருந்த மங்கைக்கு இருபத்தைந்து வயதிருக்கலாம். சுவற்றில் ஆணி அடித்து ஒரு சிறிய மண்ணெண்ணெய்விளக்கு "மினுக் மினுக்" கென்றது. அதோடு என்னை அழைத்துவர உதவிய விளக்கும் சேர்ந்து சிறிது மங்கிய வெளிச்சம் கிடைத்தது. ஏற்கனவே இருட்டிற்குப் பழகி விட்ட என் கண்களுக்கு அந்தப் பெண் உருவம் நன்ருகத் தெரிந்தது.

வெளுத்த முகத்தில் வியர்வை அரும்பிக் கொண்டிருந்தது. அதோடு ஒரு சாந்தம். உயர இருந்த ஒரு சிறு சாளரத்தின் மூலம் மழைச்சாரல் உள்ளே வந்தது.

நான் உட்கார ஒரு முக்காலி கொண்டு வந்து போட்டார்.

நான்கு கோணிச் சாக்கு களின் மேல் ஒரு பழம் புடவை யைப் போட்டு படுக்கை தயார் செய்திருந்தார். என் பெட்டி யைத் திறந்து சிறிது டெட்டால் எடுத்துத் தெளித்து அந்த அறை யிலிருந்த பூஞ்சாங்காள நாற்றத்தை அப்புறப் படுத்தி னேன்.

" அதிக பாதையாக இருந்தால் சிறிது குளோரோபாரம் கொடுக் கிறேன்" என்றேன். அவள் பார்த்த பார்வை இன்னும் என் கண் முன் இருக்கிறது. செய்யத் தகாத ஒன்றை செய்யச் சொன் னல் எப்படி யிருக்கும் அப்படி யிருந்தது அவள் முகக்குறி.

"ஏனம்மா?" என்று கேட் டேன்.

அவள் உடனே பதில் சொல்ல வில்லை. மேலே இருந்த சாளரத் தின் மூலம் எப்பொழுது பொழுது விடியும் அல்லது மழை நிற்கும் என்று பார்ப்பது போலி ருந்தது. சிறிது நேரம் கழித்து ஒரு பெரு மூச்சு விட்டுக் கொண்டே, "வலியே இல்லையே, இதில் வேதனை இருக்க வேண்டு மென்று இறைவன் கருத வில்லையே, ஆமாந்தானே, டாக் டர்"? என்ருள் அந்த அதிசயப் பெண். அவள் முகத்தில் நிலவிய அமைதியைக் கலைத்துக் கொண்டு ஒரு சிறு புன்னகை அரும்பிப் பாவிற்று. கணவன் அருகிலிருக் கிருரோ என்று லச்சையோடு அவள் கண்கள் சுற்றிலும் தேடின. அவர் கொட்டும் மழை யில் வெளியில் நின்று கொண் டிருந்தார்.

நான் சென்ற ஒரு மணி நேரத் திற்கெல்லாம் எட்டரை இராத் தல் நிறையுள்ள ஆண் மகவு பிறந்தது. தொப்புள் கொடியைத் கத்தரிக்கும் வரையில் ஒரு முக் கல் முனகல் கூட இல்லை. எனக்கே மிகமிக அதிசயமாக இருந்தது. இது முதல் பிரசவம். பத்தாவது பிரசவத்தின் போது கூட "அம்மா, அப்பா, ஐயோ" என்று அலறுவார்கள் சிலர்!

இது நடந்து பல மாதங்களாய் விட்டன. இதற்குப் பிறகு பல பெண்களின் பிரசவத்திற்குச் சென்றிருக்கிறேன். அவர்கள் "ஐயோ, அப்பா, அம்மா" என் றலறும் போது அந்தப் பெண் ணின் வார்த்தைகள் என் காது களில் — இருதயத்தில் ஒலிக்கின் றன. "இதில் வேதனை இருக்க வேண்டுமென்று இறைவன் கருத வில்லையே? ஆமாந்தானே, டாக் டர்!"

இதைக் குறித்துப் பல நாட்கள் வலி பொறுக்க முடியாமல் கதறும் பெண்களருகில் உட் கார்ந்து கொண்டு யோசித்ததின் பலன்தான் இக்கட்டுரை.

இயற்கையாக நேரும் சம்பவங் களில் உபாதையோ, வேதனையோ இருக்கக் காரணமில்லை. சாதா ரணமான உணவு உட்கொள் ளும் போதோ மல ஜல விஸர் ஜனம் செய்யும் போதோ நோ வுண்டாகிறதோ? இயற்கைக்குப் புறம்பான உணவை உட்கொண் டால்தானே வயிற்று வலி உண் டாகிறது.

பிள்ளைப் பேறு மனித சிருஷ்டி யின் ஆரம்ப காலத்திலிருந்து நடைபெற்று வரும் ஒரு இயற் கைச் சம்பவம். இதற்காக சிருஷ்டியிலேயே பெண்ணின் அவயவங்கள் பிரத்தியேகமாக நிர்மிக்கப் பட்டுள்ளன. பிள்ளைப் பேறு பெண்ணின் உடற் கூற் றுக்கு உகந்தவாறு ஏற்பட்டிருக் கும் வேதனைக்குக் காரணமில் லாத இயற்கைச் சம்பவம்.

என் அனுபவத்தில் சற்றேறக் குறைய எல்லாப் பெண்களும் பிரசவத்தின்போது அதிகக் கஷ்டப்பட் டிருக்கிறார்கள். ஒரு சிலர் வலி யில்லாமலும் பெற்றிருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன?

எனக்கு ஒரே காரணம்தான் தோன்றுகிறது. அறிவு தெரிந்ததிலிருந்து பெண்களுக்கு பிள்ளைப் பேறு மிக மிக வேதனை கொடுக்கும் சம்பவம் என்று போதிக்கப் பட்டிருப்பதுதான்.

சில நாட்களுக்கு முன் என் தமயனைத் தேள் கொட்டி விட்டது. அவன் பட்ட அவஸ்தையை விவரிக்க முடியாது. சென்ற வாரம் அவர் ஸ்நான அறையிலிருந்து வரும்பொழுது "காலில் ஏதோ சுருக்கென்றது. 'தேளோ என்னவோ பாரம்மா?' என்றார். தேளேதான் சந்தேகமே யில்லை. அவரைக் கொட்டி விட்டு வாசல் படியிலேயே கொடுக்கைத் தூக்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தது. செம்பால் அதை நசுக்கிவிட்டு அண்ணாவிடம், "தேளுமில்லை, ஒன்றுமில்லை. கட்டெறும்புதான் நிறைய இருக்கிறது" என்று புளுகினேன். சிறிது சுண்ணாம்பைக் கடி வாயில் தடவி விட்டு அவரையே வந்து பார்க்கச் சொன்னேன். கட்டெறும்புகள் நிறைய மேய்ந்து கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டு அவர் கட்டெறும்புதான் கடித்திருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டார். கடுப்புக்கு, மனதில்தான் காரணம் என்று நான் சொன்னால் அவர் நம்புவாரா?

ஏதாவது ஒரு பெண் கணக்குச் சரியாக விடை வரவில்லையே என்று முகத்தைக் கடு கடுப்பாக வைத்துக்கொண் டிருந்தால், "என்ன பிரசவ வேதனைப் படுகிறாயடி" என்று சொல்லி அவள் மனதில் பிள்ளைப்பேறு என்பதில் வலி மிகவும் அதிகம் என்று ஆழப் பதிய வைத்து அந்த சம்பவத்தை நினைத்தால் கூட அஞ்சும்படி செய்து விடுகிறோம்.

இந்தப் பயம்தான் உண்மையான பிரசவ வேதனைக்கு அடிகோலி விடுகிறது. நாம் நடக்கும்போது ஓரிடத்தில் பள்ளமிருப்பதாகத் தெரிந்தால் அதைத் தாண்டுவதற்கு உகந்தாற்போல மூளையிலிருந்து உத்தரவுகள் எல்லா அவயவங்களுக்கும் பறக்கின்றன. காரணமென்ன வென்றால் இதற்குமுன் ஒரு சமயத்தில் பள்ளத்தில் விழுந்து அதன் அனுபவம் மூளையில் நன்றாகப் பதிந்திருக்கிறது. மனித மூளை பிறருடைய அனுபவத்தால் பயனடையக் கூடிய வாறு அமைந்துள்ளது. ஆகையால் ஒருவர் பள்ளத்தில் விழுந்திருந்தால்தான் அதைத் தாண்ட முயற்சிக்க வேண்டுமென்கிற நியதியில்லை. பள்ளத்தருகில் வந்ததும் ஜாக்கிரதையாக நடக்கும்படி 'உஷாரா'க்கப் பட்டிருந்தால் போதும்.

இவ்வாறேதான் பிரசவமென்கிற சாதாரண அலுவலுக்கும் பலரால் பயமுறுத்தப்பட் டிருக்கும் காரணத்தால் மூளையும் மற்ற அவயவங்களும் மாறி விடுகின்றன. தற்காப்பு சாதனங்கள் மூளையில் மாத்திரமன்று, இதர தசை நார்களிலும் ஏற்பட்டுவிடுகின்றன.

கர்ப்பாசயத்தின் சலனத்தை மூன்று வகைத் தசைநார்கள் கட்டுப்படுத்துகின்றன. மனித அறிவின் கட்டுபாட்டுக்குப் புறம்பான (Involuntary) தசை நார்

கள் குழந்தையை வெளி நோக்கி கர்ப்பாசயத்திலிருந்து தள்ளுவதற்காக இறுகிக் குறுகுகின்றன. இரண்டாவதாக கர்ப்பாசயத்தின் வாயிலைக் காக்கும் தசை நார்கள் தளர்ந்து வாயை அகற்றிக் கொடுக்க வேண்டும். இவற்றில் சிறிது கூட இறுக்கம் இருக்கக்கூடாது, சிறு குழந்தைப் பருவ முதல் அத்தை பாட்டிக் கதைகள் மூலமாகவும், பிள்ளைப் பேறென்றால் என்னவென்றறியாத பேதைகளின் பேச்சின் மூலமாகவும் பிள்ளைப்பேறு பெரும்பாடென்று கேட்டுக் கேட்டு அஞ்சி நடுங்கிக் கொண்டிருக்கும் மங்கை குழந்தையை வெளியேற்ற, முதல்

வாத்தியாரின் யோக்கியதை!

ஒரு பள்ளிக்கூடத்திற்கு இன்ஸ்பெக்டர் வந்திருந்தார். அவர் உட்கார்ந்திருந்ததற்கு அடுத்த அறையில் ஒரே இரைச்சலாக இருந்தது உடனே அவர் எழுந்துபோய், அதிகமாகச் சப்தம் போட்டுப் பேசிக்கொண்டிருப்பதாகத் தெரிந்த ஒரு வளர்ந்த பையனைப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்து ஒரு மூலையில் நிறுத்தி வைத்தார். 'சத்தம் போடாமல் அங்கே நில்லு' என்று சொல்லிவிட்டு இன்ஸ்பெக்டர் உட்கார்ந்தார்.

சில நிமிஷங்கள் கழித்து அதே அறையிலிருந்து ஒரு பையன் இன்ஸ்பெக்டரிடம் வந்து, "ஸார்" எங்கள் வாத்தியாரை வகுப்புக்கு அனுப்ப மாட்டீர்களா, ஸார்?" என்று கேட்டான்.

—தி வில்லேஜ் நியூஸ்

திவ்ய நாமங்கள்

மனிதன் தனிமையாக வாழவே முடியாது. கூட்டமாக வாழ்வதற்கே இயற்கை யன்னை மனிதனை படைத்திருக்கிறாள். தன் மனதில் தோன்றும் எண்ணங்களை பிறரோடு பகிர்ந்து கொள்வதில் மனிதனுக்கு ஆர்வம் உண்டு. அதில் அலாதி ஆனந்தத்தை அனுபவிக்கிறான். ஒருவன் பகவான் நாமங்களை உச்சரிப்பதில் வெறுப்புள்ளவனாக இருக்கலாம். அல்லது கூச்சமுள்ளவனாக இருக்கலாம். பகவான் பேரில் நம்பிக்கை யற்றவனாயும் இருக்கலாம். பகவானின் நாமங்களை உச்சரிக்கும் ஒரு கோஷ்டியுடன் அவன் பங்கெடுத்துக் கொண்டானே யானால் அவன் காதுகளில் சங்கீர்த்தனம் முடிந்த பல மணி நேரங்களுக்கு பிறகு கூட ஒலித்துக் கொண்டே இருக்கும்.

கூறப்பட்ட தசை நார்கள் இறுக ஆரம்பித்தவுடன் பிரசவ வேதனை ஆரம்பித்துவிட்டதாக பயப்படுகிறாள். இந்தப் பயம் காரணமாக தளரவேண்டிய தசைகள் இறுக ஆரம்பிக்கின்றன. அதனால்தான் நிஜமான வேதனை உண்டாகிறது.

குழந்தையின் வெளியேற்றமும் தாமதப் படுகிறது. நோய் சகிக்க முடியாமல் போனவுடன் மயக்க மருந்து கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

[அடுத்த இதழில் சுகப் பிரசவத்திற்கு வழி காட்டப்படும்]

✲

ஹாலிவுட் கல்யாணம்!

ஹாலிவுட்டில் கல்யாணம் செய்துகொள்ளுவது என்பது ஒரு விடுமுறை நாளை உல்லாசமாகக் கழிக்கும் உபாயம்தான். —வில்ஸன் மிஸ்னர்

(ஓரங்க நாடகம்)

சியாமளா

●

எம். லக்ஷ்மி

[காலம்–தற்போது]

[நவநாகரிக முறையில் அலங்கரிக்கப்பட்ட ஒரு கூடம். ஒரு ஸோபாவில் சுமார் இருபது இருபத்திரண்டு வயதுள்ள இரண்டு பெண்கள் உட்கார்ந்து பேசிக் கொண் டிருக்கிறார்கள். எதிரில் ஒரு சிறு மேஜைமேல் இரண்டு உயர்ந்த ரகப் புடவைகள் மடிப்பு விரித்துக் கிடக்கின்றன.]

லீலா: உன் கடிதங்களிலிருந்தே நான் எல்லாம் தெரிந்துகொண்டேன். நீ நினைத்தபடி உனக்குச் சிற்றன்னை வாய்க்கவில்லை; எப்படியும் உன் தகப்பனார் சந்தோஷமா யிருக்கிறாரல்லவா?

பத்மா: இன்னும் புதுமை மாறவில்லை; கலியாணமாகி நாலு மாதம்கூட ஆகவில்லையே. லீலா, இது என்னால் முடிந்த காரியம், நான் வற்புறுத்தி யிராவிட்டால் என் தகப்பனார் கலியாணம் செய்து கொண் டிருக்கமட்டார்.

லீலா: அது நிஜம். உன் தாயார் இறந்துபோய் எட்டு வருஷங்களாகவில்லையா? நீ ஒரே பெண், உன் மனம் நோகக்கூடாதென்றுதான் அவர் யார் சொல்லியும் இதுவரை கேட்கவில்லை. இந்த வருஷம் இந்த வீட்டுக்கு ஒரு புது யஜமானியைக் கொண்டுவர நீயே முனைந்தாய்.

பத்மா: அதில் என்ன தப்பு? என் கணவர் சீமையிலிருந்து வர இன்னும் இரண்டு மாதங்கூடச் செல்லாது; நான் அவருடன் போனால், இந்த வீட்டையும் என் தகப்பனாரையும் கவனித்துக் கொள்வது யார்? ஆனால் நான் விரும்பியது வேறு. உன்னைப் போல ஒரு படித்த பெண், என் சிநேகிதியா யிருக்கத் தக்கவளை நான் தெரிந்தெடுக்க அவர் மணந்து கொள்வாரென்று நினைத்தேன். அந்த சிரமத்தையும், பெருமையையும் அவர் எனக்குத் தரவில்லை.

லீலா: நடந்தது நடந்தாய் விட்டது, பத்மா, அவள் உன்னிடம் பிரியமாயிருக்கிறாளா? நீ அவளை என்ன சொல்லிக் கூப்பிடுகிறாய்.

பத்மா: அவளுக்கு என் வயதுதான், சியாமளா என்று பெயரைச் சொல்லிக் கூப்பிடுகிறேன். அவள் எப்பொழுதும் குதூகலமாயிருக்கிறாள்; எனக்குத்தான் மனம் தாளவில்லை.

லீலா: உன் தகப்பனார் அவளுக்குத் தகப்பனாரா யிருக்கலாம்; அந்த வயது வித்தியாசத்தைப் பாராட்டாமல், அவள் அவருக்கு இங்கிதமாய் நடந்துகொண்டால், நீ இவ்வளவு வருத்தப்படக் காரணமில்லையே.

பத்மா: என் தகப்பனாருக்கு இவள் ஈடாவாளா? அவருடைய அருமை, பெருமை இவளுக் கெப்படித் தெரியும்? அவர் எவ்வளவு பரோபகாரம் செய்கிறார், எத்தனை நிதிகளுக்குக் காரியதரிசியா யிருக்கிறார்? சமூக சேவையில் அவருடன் கூட உழைக்கக் கூடிய நாகரிகம் தெரிந்த மனைவி வாய்த்தால், அவருடைய கியாதி இன்னும் அதிகமாய் விளங்காதா?

லீலா: பத்மா, இதெல்லாம் வீண் பகற்கனவு; உனக்கு அவ

ளைப் பிடிக்காததற்கு வேறு காரணமுண்டா?

பத்மா: (சிரித்து) அவளுக்குப் பிடித்த புடவை எனக்குப் பிடிக்கவில்லை.

லீலா: (சிரித்து) உனக்கு இஷ்டமானபடி நீ புடவை எடுத்துக் கொள்ளேன்.

பத்மா: என்னைப்பற்றிச் சொல்ல வரவில்லை. அவள் தனக்கு இந்தப் பச்சைப்புடவை வாங்கிக்கொள்ளப் போவதாகச் சொல்கிருள். இது சரிகை பகட்டா யிருக்கிறது, அடியிலிருக்கிற சாம்பல் வர்ணப் புடவையில் சரிகை நூலிழைபோலிருக்கிறது, அதுதான் அழகு என்று சொல்லிக் கொடுத்தாலும் தெரியவில்லை. இதோ வருகிருள் (சியாமளா வருதல்) சியாமளா, இவள்தான் என் சிநேகிதி லீலா, பி.ஏ. பி.டி., ஸ்ரீவைசியப் பள்ளிக்கூடத்தில் கணக்கு உபாத்தியாயினி.

சியாமளா: நீ முன்பே சொல்லியிருக்கிருய்.

பத்மா: (லீலாவிடம்) இந்த இரண்டு புடவைகளில் எது அழகென்று உனக்குத் தோன்றுகிறது.

லீலா: பச்சை சிலருக்கு ஒத்திருக்கும்; சரிகை எடுத்துக் காட்டுகிறது. சாம்பல் வர்ணப் புடவை புது மாதிரியில் சரிகை பகட்டில்லாம லிருக்கிறது.

சியாமளா: நூற்றைம்பது ரூபாய் கொடுத்து சரிகை கண்ணுக்குத் தெரியாத புடவையை வாங்குவானேன்.

பத்மா: அப்படியானல் விலைச் சீட்டை வெளியில் தெரியும்படியாக உடுத்திக் கொள்ளலாம்.

சியாமளா: (சிரித்து) இதென்ன கேலி; உனக்கு அவ்வளவு பிடிக்காவிட்டால், நான் இரண்டு புடவைகளையும் திருப்பி விடுகிறேன்; எனக்கு அந்த சாம்பல் வர்ணம் பிடிக்கவில்லை.

> **நடந்து காட்டுக!**
>
> நற்குணம், நற்குணம் என்று உபதேசித்துக் கொண்டிருப்பவர்கள் முதலில் தங்களைச் சீர்திருத்திக் கொள்ள வேண்டும் குணச் சிறப்பு உபதேசத்தால் வராது. பழக்கத்தாலும், வழக்கத்தாலும் தான் ஒருவருடைய குணம் திருந்தவோ அல்லது கெடவோ முடியும், ஆகவே நற்குண உபதேசகர்கள் முதலில் தங்களைக் கவனித்துக் கொள்ளட்டும்.
>
> "எமர்சன்"

பத்மா: அரக்கு, பச்சை, மயில் நீலம் போன்ற வர்ணங்கள் உனக்குப் பிடிக்கும்போலிருக்கிறது. உடையிலும், வேறெதுவிலும், வெளித்தோற்றம் பகட்டாயிருப்பது நாகரிகமில்லை; எளிமையாய்த் தோன்ற வேண்டும்.

சியாமளா: அதுவும் ஒரு வேஷம், பிறர் பார்வைக்காகத் தானே, நீங்கள் உள்ளாடைகளுக்கு லேஸ் வைத்துத் தைத்துக்கொண்டு, அதன்மேல் மெல்லிய துணிகளை உடுத்திக் கொள்கிறீர்கள்; எங்கள் ஊரில், அரை கஜப் பட்டுத்துணியை வெளிக் கைக்கும் முதுகுக்கும் வைத்து, புடவை மறைக்கும் தோளுக்குக் காங்குத் துணியை ஒட்டுப் போட்டு விடுவார்கள். எப்படியானலென்ன, சிறுக்கி சிங்காரிப்ப தெல்லாம் தேர்க் கூட்டம் பார்ப்பதற்காகத்தான் (சிரிக்கிருள்.)

பத்மா: ஒருவிதம் நாகரிகம் மற்றது அநாகரிகம். நீ அடிக்

கொரு வசனம் சொல்லிப் பேசு கிருயே, அது சுத்த நாட்டுப்புறம்.

சியாமளா: உன் தகப்பஞர் ஏன் இன்னும் வரவில்லை; நேர மாகுமென்று சொன்னுரா?

பத்மா: ஒன்றும் சொல்ல வில்லை, அவருக்கு பல அலுவல்க ளிருக்கும்.

சியாமளா: சமையற்காரனை அனுப்பிப் பார்த்து வரச் சொல் கிறேன்.

(உள்ளே போகிருள்)

பத்மா: (புடவைகளைத் மடித்து ஒரு துண்டிற் கட்டி வைத்து)பார்த்தாயா, உன்னிடம் மரியாதையாகச் சொல்லிக் கொள்ளவில்லை. மனத்திலுள் ளதை அப்படியே பேசிவிடு வாள்.

லீலா: கள்ளங்கபடில்லை!

பத்மா: இதுவா ஒரு புகழ்சி! இன்று வீட்டில் மைசூர்ப்பாகு செய்திருந்தது; ஐந்தாறு தின்று விட்டாள். தித்திப்பு, ஒன்று தின் னது, எனக்குத் தெவிட்டி நெஞ் சைக் கரித்தது. ரோஜாவுக்கு உரமிட்ட பாத்தியில் கீரைத் தண்டு முளைத்தது போலாயிற்று, இவள் இங்கு வந்து சேர்ந்தது.

லீலா: இதோ உன் தகப்ப ஞர் வந்து விட்டார், நான் போகி றேன்.

(கையில் ஒரு கைப் பெட்டி யுடன், கவலை தேங்கிய முகத்து டன் நரசிங்கராவ் வருதல்).

நரசிங்கராவ்: அம்மா, லீலா ஒரு நிமிஷம் இரு. உன் மாமா ஊரிலிருக்கிருரா?

லீலா: இருப்பாரென்று நினைக்கிறேன். நிச்சயமாய்த் தெரியாது.

நர: நான் டெலிபோனில் கூப்பிட்ட பொழுது அவர் வீட் டிலில்லை. நீ மறுபடியும் கூப்பிட் டுப் பார், இருந்தால் நரசிங்கராவ் உங்களை அவசரமாய் வரச்சொல் கிருர் என்று சொல்; வற்புறுத் திச் சொல், தெரியுமா?

லீலா: சரி, அவருடன் பேச முடிந்தால் சொல்கிறேன்—நமஸ் காரம்—வருகிறேன் பத்மா; (போகிருள்).

பத்மா: (தகப்பஞரிடம்) உங் களுக்கு உடம்பென்ன? இவ் வளவு அவசரமாக வக்கீல் எதற்கு?

நர: உடம்பு ஒன்றுமில்லை; சியாமளா எங்கே?

பத்மா: உள்ளே யிருக்கிருள். உங்கள் முகத்தைப் பார்த்தால் ஒரு மாதிரியாயிருக்கிறது. அவ சரமாக வக்கீலைத் தருவிக்கிறீர் கள். அவரிடம் சொல்லப் போவதை முதலில் என்னிடம் சொல்லக்கூடாதா?

நர: உன்னிடம் சொல்லிப் பிரயோசனமில்லை (ஒரு சாய்வு நாற்காலியில் சாய்கிருர்.)

பத்மா: சியாமளாவுக்கு விளங்கும் விஷயம் எனக்குப் புரியாதா?

நர: அவளிடமும் ஒன்றும் சொல்லிப் பயனில்லை. எல்லாம் என் தலைவிதி (கையால் தலையைத் தாங்கிக் கொள்கிருர். சியாமளா காபி கொண்டு வருகிருள்.)

சியா: உங்கள் குரலைக் கேட்டு காபி கொண்டு வந்தேன். முதலில் அதைச் சாப்பிடுங்கள் அப்புறம் மதியால் விதியை வெல்லலாம்.

நர: நான் எதைப் பற்றிப் பேசுகிறேனென்று உனக்கு என்ன தெரியும்?

சியா: தெரியாது, ஏதோ சௌக்கிய மில்லாமலிருக்கிறீர்கள். சற்று சிரமபரிகாரம் செய்து அப்புறம் யோசனை செய்யலாமென்று சொல்கிறேன்.

பத்மா: நான் போகிறேன். (தகப்பனாரிடம், சற்றுக் கோபமாய்) நீங்கள் வக்கீலை யழைத்து உயிலை எப்படி மாற்றினாலும் எனக்கு அதில் வருத்தமில்லை.

சியா: உயிலைப்பற்றியா பேச்சு? ஒருநாள் உடம்பு சடைவாயிருந்தால் உயிலைப் பற்றியா நினைவு? உங்களுக்கு உடம்பு சரியாயில்லா விட்டால் வைத்தியனைக் கூப்பிடுங்கள். வக்கீலுக்கு இப்பொழுது அவசரமில்லை. நான் சொல்வதைக் கேட்பீர்களா? உங்களுக்கு உடம்பு ஒன்றுமில்லை; மனத்தில்தான் ஏதோ உறுத்திக் கொண்டிருக்கிறது. கொஞ்ச நாள் இந்த அலுவல்களை யெல்லாம் விட்டு ஓய்வெடுத்துக் கொண்டு பங்களூருக்குப் போயிருக்கலாம்.

நர: (கசந்த சிரிப்புடன்) அந்த ஓய்வுநாள் எடுத்துக் கொள்ள வேண்டாம், தானாகவே கிடைத்துவிடும். என் வேலைக்கு ஓய்வு காலம் வந்தாய் விட்டது.

பத்மா: (பரபரப்பாய்) உங்களுக்கு என்ன உடம்பு?

சியா: (சாவதானமாய்) அதுவும் நல்ல காலம்தான்; என்ன வாயிற்று?

நர: நான் திடீரென்று ஒரு வியதிக்குள்ளாகி, உயிலை மாற்ற வக்கீலைத் தேடுகிறேன் என்று பத்மா நினைக்கிறாள். அப்படியாவது ஒரு வியாதி நேர்ந்து உயிர் நின்று விடாதா என்று தான் நான் கோருகிறேன். அவ்வளவு பெரிய அவமானத்துக்காளாகியிருக்கிறேன்.

பத்மா: நீங்களா? நீங்கள் ஏதாவது தப்பாகச் செய்துவிட்டீர்களா?

சியாமளா: நீ பேசாமலிரு. பத்மா. அவர் சொல்லட்டும். யாரோ உங்கள் மேல் பழிசாட்டியிருக்கிறான்; அதற்காக வக்கீலைத் தேடுகிறீர்கள்; பிராணனை விடலாமா என்று யோசிக்கிறீர்கள். இந்தக் கோழைத்தனத்திலிருந்தே உங்கள் மேல் தப்பில்லை என்று அறிவேன்; வேண்டுமென்று அநியாயமாய் நடந்தவனுக்கு இன்னும் சற்று நெஞ்சழுத்தம் இருக்கும். வாய்விட்டுச் சொல்லுங்கள். காரணமிருந்தால், (சிரித்து) நாமிருவரும் சேர்ந்து பிராணத் தியாகம் செய்யலாம்.

நர: பத்மாலய நிதிக் கணக்கில் ஏதோ கோளாறு இருக்கிறது; சங்கரராவ் கண்டு பிடித்து என்னை விவரம் கேட்

> **பணத்தின் மதிப்பு**
>
> "பணம் இப்போது எங்கும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. ஆனால் பணம், தானே பிரயோசனப் பட்டுவிடாது. நமக்குத் தேவையான பொருளை அடைவதற்குத் தான், பணம் உதவி புரிகிறது. நாம் பண்டங்களை மாற்றிக் கொள்ள, அது உதவி புரிகிறது. மிடாஸ் என்ற மன்னனிடம் ஏராளமான தங்கம் இருந்தது. ஆனால் தின்ன ஒன்றுமே இல்லை. இந்தக் கதையை அறிவீர்கள். ஆகையால், நமக்குத் தேவையான பொருளை வாங்க அது உபயோகப் படாவிட்டால், அந்தப் பணத்தால் பயனில்லை."
>
> —பண்டித ஜவஹர்லால் நேரு

டான்: எனக்கு சரியாய்த் தெரியவில்லை.

சியா: எவ்வளவு தொகை குறைகிறது?

நர: ஏதோ, இரண்டாயிரம்.

சியா: எவனுவது அதை வாயில் போட்டுக் கொண்டிருப்பான்; உங்களுக்கு வெளுத்ததெல்லாம் பால். உங்கள் மேல் பொறுப்பிருப்பதால் நீங்கள் நஷ்டத்தை ஈடுசெய்ய வேண்டும்; இவ்வளவுதானு?

பத்மா: இது போலவே, நீங்கள் கண்காணிக்கும் மற்ற நிதிகளிலும் குறைவிருக்கிறதோ?

நர: இல்லை; அவையெல்லாம் சரியாய்த்தான் இருக்கின்றன. ஹரிஜன சங்க நிதியில் இருநூறு ரூபாய் குறை; அது நான் எடுத்துச் செலவழித்தது. திரும்பவும் போட்டு விடலாமென்று கணக்கில் காட்டவில்லை. அந்த பாக்கியின் விவரம் நினைவிருக்கிறது, நான் சொல்லியாய் விட்டது.

பத்மா: சங்கராராவ் உங்களைப் பற்றி என்ன நினைப்பார்; இது பெரிய அவமானம்தான்; பெண்கள் கூட இதைவிடச் சீராகக் கணக்கெழுதுவார்கள்.

சியா: பத்மா, சமயம் தெரிந்து பேசு, அல்லது பேசாமலிரு. மாளிகை யிடிந்தாற் கட்டலாம்; மனமிடிந்தாற் கட்ட முடியுமா?

பத்மா: என் தகப்பனுர் மேல் இம்மாதிரி அவதூறு ஏற்படு மென்று நான் நினைக்கவேயில்லை.

சியா: (நரசிங்கராவிடம்) இப்படி ஒரு பெண் பேசுகிருளே யென்று மனம் கசந்து கொள்ளாதேயுங்கள். பத்மாவுக்கு வயதாகிறதே யொழிய, அநுபவமில்லை; குழந்தைத்தனமா யிருக்கிருள். குழந்தைகளுக்குப் பெற்றோர்மேல் ஒரு நாளும் அநுதாபம் கிடையாது; பிள்ளை மனம் கல். அதோ வருகிறது யார், உங்கள் வக்கீலா? நானும் கூடவிருக்கிறேன், நீங்கள் தடுக்காதேயுங்கள்.

(வக்கீல் பிரசன்னராவ் வருகிருர்)

பிர: (அவசரமாய்) என்ன நரசிங்கராவ், இப்படிக் கவலைப் படுகிறீர்கள். நான் சங்கராராவை பார்த்துவிட்டுத்தான் வருகிறேன்; தன் சாமார்த்தியத்தைத் தானே மெச்சிக்கொண்டு ஏதோ துள்ளுகிருன். "தவறைக் கண்டு பிடித்தாய், தவறு செய்தவனைக் கண்டு பிடிக்கவில்லை" என்று சொல்லிவிட்டு வந்தேன். நீங்கள் தொகையைச் சரிப்படுத்திவிட வேண்டும். அது தவிர, மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ள ஒரு நியாயமுமில்லை.

நர: சரிதான். ஜெயிலுக்குப் போகவேண்டாம். மதிப்பைக் காப்பாற்றிக் கொள்ள வழியில்லையே.

பிர: கணக்கு விஷயங்களில் தப்பு நேர்ந்தால் பலர் பலவிதமாய்ப் பேசுவார்கள்; நான் இன்றிரவு ரயிலேறி பெஜவாடாவுக்குப் போகிறேன். நீங்கள் நாளை மடாதிபதியைப் பார்த்து உள்ளதை உள்ளபடி சொல்லிவிடுங்கள். நான் இரண்டு நாளில் வருகிறேன். சங்கராராவால் ஒன்றும் செய்ய முடியாது. நீங்கள்கூட ஸ்டேஷனுக்கு வருகிறீர்களா, பேசிக்கொண்டே போகலாம்.

(பிரசன்ன ராவும் நரசிங்க ராவும் போகிருர்கள்.)

பத்மா: ஐயோ! இப்படியும் உண்டா? (ஒரு சோபாவில் சாய்கிருள்.)

சியா: பத்மா, நீ நடந்து கொள்வது அழகாயில்லை. இதனுல் அவர் மனம் கோலிட்ட புண்போலாகிறது.

பத்மா: ஊர் சிரிக்கத் தப்புக் கணக்கெழுதினுல், அவர் மனம் நோகக் காரணமில்லையா? நான் அவரைப் பற்றி எவ்வளவோ சிறப்பா யெண்ணி யிருந்தேன்.

சியா: வீட்டில் ஆறு வருஷமாய் உன் இஷ்டப்படி நடந்தவர் வெளிக் காரியங்களிலும் மற்றவர் பேச்சுக் குட்பட்டு நடக்கக் கூடியவர் என்பது உனக்குத் தெரியவில்லையா? பலரும் அவரை தங்கள் சௌகரியப்படி உபயோகப் படுத்திக் கொண்டார்கள். ஓரிடத்தில் சம்பளத்துக்கு வேலை செய்பவன், வேறிடங்களில் ஊதியத்துக்கு உழைக்கக் கூடாதென்று ஒரு கட்டுப்பாடு உண்டு. இலவச வேலைக்கு ஒரு வரம்பு கிடையாது—எத்தனை அலுவல்களை ஒருவனுல் கவனிக்க முடியும்? தாக்ஷண்யத்துக்காகவும், பெருமைக்காகவும், உன் தகப்பனர் வேண்டாத பளுவைச் சுமத்திக் கொண்டார். தலை வலிக்குப் பூ எதற்கு? இதுவே அவருக்கு ஓர் எச்சரிக்கையாயிற்று. அதுவும் நல்லதுதான்.

பத்மா: நரசிங்கராவின் பெண் என்று சொல்லிக் கொள்வது பெருமையா யிருந்தது. இப்பொழுது அதற்காகத் தலைகுனிய வேண்டும்.

சியாமளா: எந்த சமயத்திலும் உன்னைப் பற்றியே நினைத்துக் கொள்ளாதே.

பத்மா: உன்னைப் பற்றி நினைக்கட்டுமா? சமார்த்தியமில்லாமல் பெயரைக் கெடுத்துக் கொண்ட என் தகப்பனரைப் பற்றி நினைக்கட்டுமா? நீ அவருக்கு ஏற்றவள்தான்.

சியாமளா: (சிரித்து) வசிஷ்டர் வாக்குப்போல், இந்தச் சொல் பலிக்கட்டும்.
(இருவரும் உள்ளே போகின்றனர்).

✲

"நானு பழி?"

ஒரு ஸ்திரீயும் ஒரு சிறுவனும் காரில் ஏறினர்கள் அப்போ கண்டக்டர் சிறுவனுக்கும் டிக்கெட் எடுக்க வேண்டு மென்றுர்.

"அவனுக்கு மூன்று வயது கூட ஆகவில்லை, அவனுக்கும் டிக்கெட் எடுக்கவேண்டுமா?" என்றுள் அந்த அம்மாள்.

"மூன்று வயதா? ஆறு வயது தாராளமாக இருக்கும் இவனுக்கு"

"என்னப்பா, நான் கல்யாணம் செய்தே நாலுவருஷம்தானே ஆகிறது?"

"அதற்கு நாஞ பழி? அவனுக்கு டிக்கெட் வேண்டுமென்றுதான் கேட்டேனே ஒழிய, உங்கள் தப்பிதங்களை ஒப்புக்கொள்ளச் சொல்லவில்லை என்றுன் கண்டக்டர்.

—ஆஸ். யு. கோ. நியூஸ்

இந்த ஆண் பிராணிகள்

●

டி. எஸ். ரங்கதேவி

நான் கலாசாலையில் படித்துக் கொண்டிருந்த பொழுது யாராவது இரண்டாயிரம் ஐயாயிரம் என்று வரதட்சணை கொடுத்துக் கல்யாணம் செய்தார்கள் என்று கேள்விப்பட்டால் எனக்குச் சிரிப்பு வரும். இயற்கையில் பெண் ஜந்துக்கள் ஆண்களை லட்சியம் செய்வதேயில்லை. கோடி வருஷங்களாக இயற்கைத் தாய் தன் ஆண் குழந்தைகளைப் பெண் பிராணிகள் கண்ணெடுத்துப் பார்க்கட்டும் என்று அவைகளைப் பல கண்களைக் கவரும் வர்ணங்களில் படைக்கிறாள். ஆனால் இன்னும் பெண் மனதைக் கவர ஆண் பகீரதப்பிரயத்தனம் செய்ய வேண்டியிருக்கிறது. மனிதவருக்கத்தில் காதல் மண மேற்படுவதாயிருந்தால் பெண் மனதைக் கவர புருஷன் தான் பலமான முயற்சி செய்கிறான், பெருத்த தியாகங்கள் புரிகிறான், மகத்தான சாதனைகளைக் கையாளுகிறான் என்பது வெளியாகும்.

தோகை விரித்தாடும் அழகிய காதலனுக்காகப் பெண் மயில் பரிந்து ஓடும் என்று எதிர் பார்ப்பீர்கள்; அதுதான் இல்லை. அது ஆடி ஆடி அலுத்து போகலாம். ஆனால் பெண் மயில் அசிரத்தையாகத் தூங்கிக் கொண்டுதானிருக்கும். அதன் கவனத்தைக் கவர்வதற்காக ஆண் தன் அழகிய சிறகுகளை அசக்கி "சல சல" வென்றோசை எழுப்பும்.

ஆண் நண்டு தன் காதலியை அடைய ஒற்றைக் காலால் தவம் செய்வதும், எட்டுக்கால் பூச்சி அற்புத நாட்டிய மாடுவதும், பட்டாம் பூச்சி வாசனைப் பொருள்களைத் தாங்கிச் செல்வதும், ஒருவகை வெட்டுக் கிளி தேன் கொண்டு சென்று 'காக்காய்' பிடிப்பதையும் பிராணி நூலாசிரியர் கண்டு வியப்பார்கள். ஆனால் அவர்களால் இந்த மனிதப் பிராணி மாத்திரம் தன் மனைவியிடம் வரதக்ஷிணை கேட்பதன் தத்துவம் என்ன வென்று சொல்ல முடியாது!

மனோ தத்துவத்தில் மானிட மங்கை ஏனைய பெண்ணினங்களுக்கு சளைத்தவளல்ல என்பது மணம் முடிந்தவுடன் வெட்ட வெளிச்சமாய் விடுகிறது. எனக்குக் கூட சில சமயங்களில் இந்த அப்பாவி மனுஷனைக் கண்டால் 'ஐயோ பாவம்'! என்றிருக்கிறது. வரதட்சணை ஐயாயிரத்தையும் வாங்கிக் கொண்டு கைக் கடியாரத்துக்கு தங்கச் சங்கிலியும் மோட்டார் ஸைகிலும் வாங்கிக் கொடுத்தாலன்றி தாலி கட்ட மாட்டேன் என்று விரட்டியவர் இன்று எனக்கொரு ரிப்பன் வாங்கி வருவதற்காக 112 டிகிரி வெயிலில் மூன்று மணி நேரம் அலைகிற தென்றால் நம்பக் கூடியதாக இருக்கிறதா? ஆனால் இது நூற்றுக்கு நூறு உண்மை.

இந்த புருஷர்களைப் போன்ற அற்ப சந்தோஷிகள் இல்லவேயில்லை. அனுபவத்தைத்தான் சொல்கிறேன். காலையில் எழுந்தவுடன் பல் தேய்ப்பதற்கு ஒரு செம்பு ஜலம் தயாராக வைத்து விட்டால் தானென்ன? அன்று முழுதும் எது வேண்டுமானாலும்

கேட்கலாம். அதோடு பிரஷில் சிறிது பசையையும் போட்டுக் கொடுத்து விட்டாலோ, உயிரையும் தியாகம் செய்யத் தயார்.

நாள்முழுக்க நாயாய் உழைத்துவிட்டு புளி மூட்டை போல் மைலாப்பூர் டிராமில் அடைபட்டு வந்தவருக்கு மீண்டும் அந்தச் சட்டையைக் கழற்றாமல் அதே டிராமில் பிரயாணம் செய்யத் தோன்றுமா? தோன்றாதென்றுதான் சொல்வீர்கள். ஆனால் அவருக்குப் பிரியமான புளியாத தோசை இரண்டு வார்த்து ஒரு சிட்டிகை மிளகாய் பொடியும் அரை ஸ்பூன் நெய்யும் விட்டுக் கொடுத்த பிறகு உங்களுடன் அந்த டிராமில் மாத்திரமல்ல நரகத்திற்கே, கூட போகத் தயார்!

பிறந்தகத்துக்குப் போக வேண்டுமா? அதற்காக சில

ஊமை பேசினாள்!

சிந்து மாகாணத்தின் பிரபல காங்கிரஸ் தலைவரான ஜெயராம் தாஸ் தௌலத்ராம் பலமுறை சிறை சென்றவர். தியாகத்தின் சிகரம் என்று போற்றப்படும். அவர் காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினராயு மிருந்தவர்.

திடீரென்று அவர் ஒரு முறை கைதியானபோது அவர் மகள் குமார பிரேமி என்னும் சிறுமி அதிர்ச்சி அடைந்து வாய் பேச முடியாது ஊமையாகி விட்டாளாம்! அப்புறம் அரும்பாடு பட்டு சிறையிலே வாடிய தௌலத்ராமைப் பேட்டிகாண அமைதிபெற்று குமார பிரேமியை அவரிடம் அழைத்துச் சென்றனர். மித மிஞ்சிய மகிழ்ச்சியால் அவள் அதிர்ச்சி மாறி திரும்பவும் பேச ஆரம்பித்து விட்டாளாம்!

கலைகளைக் காத்தல்:

"நீங்கள் எங்கே போனாலும் என்ன செய்தாலும், (கலைப் பொருள்களைக்) காப்பதிலே அதிக கவனமும் படைப்பதிலே சிறிது கவனமும் செலுத்துங்கள், பழையவற்றைத் தூரத்தள்ளி, உங்களுக்குக் கொஞ்சம் இடம் தேடிக் கொண்டு அமர்ந்து நாள் முழுதும் நூற்பதேயன்றி வேறுவேலையில்லையென்று நீங்கள் நினைக்கிறீர்கள். இதனாலேயே இன்று உலகம் பேரபாயக்குழப்பத்தில் சிக்கியுள்ளது. உங்களைச் சூழவும் உள்ள பொருள்களை, ஒரு குடித்தனக்காரனைப் போல், ஒழுங்குபடுத்தி வைப்பதே உங்களுடைய முதல் வேலையாகும். தரையைச் சீராக்கி ஒழுங்கு செய்யுங்கள்; களஞ்சியங்களின் அழுகலை நீக்குங்கள். பின்பு, உட்கார்ந்து நூற்கத் தொடங்குங்கள்; அதுவரையில் கூடாது."

—ஜான் ரஸ்கின்

அசட்டுப் பெண்கள் கண்களைக் கசக்கிக்கொண்டும் அப்பாவை மணியார்டர் செய்யச் சொல்லியும் அவதிப் படுகிறார்கள்.

ஒன்றும் வேண்டாம். அந்த அல்ப சந்தோஷியின் வேஷ்டியைத் துவைத்து உலர்த்தி மடித்து கை கால் அலம்பிக்கொண்டு வந்தவுடன் ஆபீஸ் உடைகளைக் களைந்து அதை உடுக்கக் கொடுத்துப் பாருங்கள். வெற்றி எவ்வளவு சுலபம் என்று தெரியும்.

கத்தரிப் பூ கலர் புடவை என்ன மயக்கு மயக்கும் தெரியுமா? 28-ம் தேதி என் தம்பிக்கு இருநூறு ரூபாய் மணியார்டர் செய்ய வைத்தது!

அட ராமச்சந்திரா! என் ரகசியத்தை யெல்லாம் இப்படி அம்பலப் படுத்துகிறேனே? இந்த 'மங்கை' அவர் கண்ணில் படாதிருக்க வேண்டுமே!

பழங்கள் பாதுகாப்பு

எஸ். யமுனா

பறவைகள் தம்முடைய இறகுகளைக் கொண்டு எவ்விதமான பருவ காலத்திலும் தமது உடலை ஒரே நிலையில் காத்துக் கொள்ளும் சக்தியைப் பெற்றுள்ளன. ஆதலால் குளிர் நடுக்கும் பயங்கர ஹிமயகிரியிலுங்கூட அவைகள் சற்றும் கவலை யின்றி ஆகாயத்தில் மிகவும் உயரப் பறக்க முடிகின்றன. ஆனால் நம்மவருக்கோ, எதுவும் சொற்ப அஜாக்கிரதையினால் எந்தக் காலத்திலும் இருக்கக்கூடிய பண்டங்களைக் கூட இழக்க நேரிடுகிறது.

பூமா தேவியின் நகை முகம், நிலத்தில் பரவிக் கிடக்கும் பற்பல நிறமுள்ள பழங்களைப் பொறுத்தது என்றார் ஒரு கவிஞர். மனித்னுடைய எழிலுங்கூட சரீரத்தின் வனப்பைப் பொறுத்தது என்று கூறுவது மிகையாகாது. கிளர் நிலத்தை எருவைக் கொண்டு வளம் பெறச் செய்வார்கள். மனித தேகத்தில் வற்றிய ரத்தத்தையும், சக்தியையும் சீக்கிரத்தில் விருத்தி செய்வதற்கு நல்ல எருவாயிருப்பதும் பழங்கள் தாம்.

நாம் நாகரிக முன்னேற்றத்தில் ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் மேன்மேலும் விஞ்ஞானத்திற்கே திரும்புகிறோம். நமது இயல்பான சக்தி குறைந்து போய், விஞ்ஞானக் கருவிகளாலேயே வாழ்ந்து நம்மைக் காத்துக் கொள்ளுகிறோம். மேல் நாடுகளுக்கிடையில் சம அந்தஸ்துடன் தனக்குரிய ஸ்தானத்திலமர இந்தியப் பெண்கள் விஞ்ஞானத்தைப் புறக்கணிக்காமல் தங்களுடைய தினசரி வாழ்வில் அதைச் சற்றுக் கவனித்து வீட்டு வேலைகளைச் செய்வார்களேயாகில், தனது மோசமான நிலைமையைச் சீக்கிரத்தில் சமாளித்துக் கொள்ளலாம். விஞ்ஞானம், கைத்தொழில் ஆகிய இரண்டையும் சரியாக இணைத்துக்கொண்டு செல்வத்திலேயே ஒரு நாட்டின் அபிவிருத்தி இருக்கிறது. தற்காலத்தில் எந்தத் தொழிலுக்கும், விஞ்ஞானம் தான் அடிப்படையாக இருக்கிறது.

'பழங்களைப் பாதுகாத்தால்' என்ற தலைப்புக்கு மாறாக விஞ்ஞானத்தைப் பற்றிப் படிக்க நேரிடுகிறதே என்று இதைப் படித்த நேயர்கள் எண்ணக் கூடும். பழங்கள் இயற்கை வஸ்துவாக இருந்த போதிலுங்கூட, அதை நாள்படப் பாதுக்காப்பதற்கு விஞ்ஞானக் குறிப்புகளைக் கொண்டேதான் காப்பாற்ற வேண்டி வருகிறது.

தற்காலத்தில் பழங்கள் ஓர் உன்னதமான ஆகாரமாகக் கொண்டாடப்படுகிறது. நம் தேக சுகத்துக்கு வேண்டிய எல்லா ஆகார வஸ்துக்களும் பழத்தில் அடங்கியுள்ளது. நம் நாட்டில் எத்தனையோ வகைப் பழங்களும், காய்கறிகளும் வீணாய்ப் போகிறது; அல்லது மிகவும் குறைந்த விலைக்கு நஷ்டத்தில் விற்கப்படுகின்றன, அதோடு அல்லாமல் சில பழங்கள் அதனதன் காலத்தில்தான் கிடைக்கும். ஆகையால், 'காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும்' என்னும் பழமொழியை மேற்கொண்டு, நம் நாட்டுக் குடித்தனப் பெண்கள் விஞ்ஞானக்

குறிப்புகளைக் கொண்டு அந்தந்தக் காலத்தில் கிடைக்கும் பழங்களைப் புட்டிகளில் போட்டுப் பாதுக் காப்பார்களே யாகில், அதிகப் பணத்தை மிச்சப் படுத்து வதோடல்லாமல், வருஷம் பூரா வும் நல்ல ஆகாரமாகிய பழம் நம் கை யிருப்பில் இருந்து வரும்.

பழங்களைப் பாதுக்காக்கும் கலை மிகவும் புதியதாகக் கொண்டு வரப்பட்டது. இக்கலை இந்தியாவில் குழந்தைப் பருவத்தில் தான் இருந்து வருகிறது. நமது இந்தியப் பழத் தோட்டக்காரர்கள் இக் கலையை அறியாதிருக்கின்றனர். இந்தியப் பெண்கள் சாதாரணமாகக் கொஞ்ச நாள் இருக்கக் கூடிய முறையில், சர்க்கரைப் பாகில் பழங்களை ஊறவைத்துப் பாதுகாப்பதற்கு அறிந்திருக்கிறார்கள். அவர்கள் விஞ்ஞானக் குறிப்புக்களைக் கொண்டு பழங்களைப் பாதுக்காக்க அறிந்து கொண்டால், ஒவ்வொரு வீட்டிலும் புட்டிப் பழங்களைக் காணலாம்.

இந்தப் பழங்கள் நல்ல ஆகாரமாவதோடு, அதிகமாக மிகுந்திருக்கும் பழங்களை உபயோகப் படுத்த ஒரு முறையுமாகும். இதில் ஆகாரச் சத்துக்கள் சிறிதும் குறையாமல், அதிலிருக்கும் பழச் சாறு புதுப் பழத்தி லிருப்பது போலவே இருக்கிறது.

எல்லாப் பழங்களையும் மிகவும் எளியதும், சிக்கனமானதுமான முறையில் பாது காக்கலாம்.

பழங்களைப் புட்டிகளில் அடைத்து பாதுக்காப்பதன் முக்கிய காரணம் அவைகள் அழுகிப் பாழாகாமல் இருப்பதற்கும், பழங்கள் நாளானல் ஆகாயத்தில் கண்ணுக்குப் புலப்படாத அணு வளவுள்ள சிறு கிருமிகளால் நாசமாக்கப்படுவதைத் தடுப்பதற்குமேயாகும்.

உஷ்ணத்தைக் கொண்டு சுத்தம் செய்து, கிருமிகளைத் தடுப்பதை ஸ்டரிலிஸிங்* என்று சொல்லுவார்கள்.

தேவையான சாமான்கள் :—

1. சுகாதார விதமாய் ஒரு ஸ்டரிலிஸிங், அதற்கு அடியில்லாத புட்டிகள் வைக்கும்படியான மரச் சட்டம்.

2. அல்லது வீடுகளிலிருக்கும் எந்தப் பாத்திரத்தையும் உபயோகிக்கலாம். இதற்கு இட்டிலிப் பானை மிகவும் பொருத்தமானது.

3. கண்ணாடி மூடியுள்ள நல்ல பாட்டில்கள்.

4. ஸ்டவ்.

5. ஒரு உஷ்ண கிர்மாணி † (கையிருப்பிலிருந்தால்)

கடைகளில் அநேக விதமான புட்டிக ளிருப்பினும், கண்ணாடி மூடியில் ரப்பர் வளையம் அமைத்து ஸ்பிரிங் கொண்டு அழுத்தி மூடி வைக்கக்கூடிய புட்டிகளிருப்பின் சிறந்ததாகும். தகர மூடியுள்ள புட்டிகளை ஒரு பொழுதும் உபயோகப்படுத்தலாகாது. ஏன் என்றால், பழச் சாறுகளில் உள்ள சில வஸ்துக்கள் மூடிகளில் பட்டுச் சில சமயங்களில் உலோக விஷமாகவும் ‡ மாறிவிடும்.

வேகவைத்துப் பாதுகார்க்கும் முறை.

படத்தில் காட்டிய வண்ணம் ஒரு ஸ்டரிலிஸர் தயார் செய்து கொள்ளவேண்டும். புட்டிகளை வைப்பதற்கு வலை யடித்த ஒரு சட்டம் அந்தப் பாத்திரத்தின் நடுவில் நன்ருய் பொருந்தியிருக்குமாறு அமைக்கப்பட

* Sterilizing † Thermometer ‡ Metal poisoning

வேண்டும். இந்த புட்டிகளைப் பாத்திரத்தில் நேராக வைத்தால் சமமான உஷ்ணம் புட்டிகளில் படாமல் புட்டிகள் வெடித்து விடும். நன்ருய்த் தண்ணீர் கொதித்து உஷ்ணம் புட்டிகளின் எல்லாப் பாகத்திலும் ஒரே சமமாகச் சுற்றிப்பரவுவதற்கு இந்த வலை அடித்த சட்டம் முக்கியமானதாகும்.

முதலில் பழங்களை நன்ருய் அலம்பி, பெரியது, சின்னது என்று தனியாகப் பிரித்து; பெரிய பழங்களா யிருப்பின் கொட்டையை நீக்கி; ஒரே அளவாக நறுக்க வேண்டும். பழங்களை எப்போதும் நறுக்குவதற்கு முன் அலம்ப வேண்டும். இல்லாவிடில் சில ஆகார வஸ்துக்கள் தண்ணீரில் கரைந்துவிடும்.

புட்டிகளில் அடைப்பதற்கு மரத்திலேயே பழுத்த பழங்களை பறித்த உடனே உபயோகப்படுத்துவதுதான் முதல்தரமானது. அவைகளை நன்ருய் அலம்பி தோலை உரித்தோ, அல்லது கொட்டை நீக்கியோ, அளவு பிரகாரம் பிரித்து, பெரியதாயிருப்பின் ஒரே அளவாகத் துண்டங்களாக நறுக்கி புட்டிகளின் கழுத்து வரைக்கும் அடைக்க வேண்டும். வேகவைக்கும் போது பழங்கள் மேல் எழும்பாமலிருக்கும் பொருட்டு நன்ருய் அழுத்தமாக பழங்களை அடைத்து வைக்க வேண்டும்.

பழங்களைத் தண்ணீரிலாவது; சர்க்கரைப் பாகிலாவது பாதுகாக்கலாம். ஆனல் தண்ணீரில் பாதுகாக்கும் முறையில் பழங்கள் வாசனையை இழந்து விடுவதோடன்றி அதனுடைய நிறமும் மாறிவிடுகிறது. பாகு கொண்டு பாதுகாப்பதில் அதன் வாசனை சிறிதும் கெடாமல் பழத்தின் நிறத்தைச் சிறிது மாறுபடுத்துவதில்லை. ஆரஞ்சும், அனசும் அவைகளினுடைய சாறுகளாலேயே பாதுகாக்கலாம்.

வெள்ளை மேகமும், கறுப்பு மேகமும்

மேகங்களில் உள்ள நீர்த்துளிகள் மிக மிகச் சிறியனவாக இருந்தால் அவைகள் ஒளியைப் பிரதிபலிக்கும். அதனல் பார்வைக்கு வெள்ளையாகத் தென்படும். நீர்த்துளிகள் பெரிதாகி, மழைத்துளியின் அளவுக்குப் பருக்கும்போது ஒளியைப் பிரதிபலிக்காமல், துளிகள் அதைத் தம்முள் அடக்கி ஐக்கியப்படுத்திக்கொண்டு விடுகின்றன. அதனல், மேகங்கள் கறுப்பாகக் காணப் படுகின்றன.

—ஸயன்ஸ் டைஜஸ்ட்

பாகுபண்ணும் விதம்: ½. Lb. சர்க்கரையில் ½ டம்ளர் (cup) ஜலம் விட்டு நன்ருய் காய்ச்ச வேண்டும். பாகு கைக்கு நல்ல பிசுக்காக வந்தவுடன், சூட்டோடு வடிக்கட்டினல் புட்டியில் சுத்தமானதும், பார்வைக்கு வசீகரமுள்ளதாகவும் இருக்கும். வேண்டுமானல் சிறிது கேசரி கலர் பாகில் உபயோகப் படுத்தலாம்.

பாகு நன்ருய் குளிர்ந்த பிறகு புட்டிகளின் வாய்க்கு 1'' "குறைவாக, மிகவும் மெதுவாக புட்டிகளில் நிரப்பவேண்டும். அப்பொழுதுதான் பழத்திற்குப் பழம் இருக்கும் இடைவெளியிலிருக்கும் காற்றுகள் எல்லாம் வெளிவரும். வேக வைக்கும் போது பாகு இளகி மேலெழும்புமாகையால் மேற்சொன்னபடி அந்த 1'' புட்டி மூடிக்கும் பழத்திற்கும் இடையில் காலியாக விருக்கவேண்டும். பிறகு புட்டியை நன்ருய் இறுக மூடி சட்டத்

தில், ஒரு புட்டி மற்றொன்றில் படாத வண்ணம் வைத்து, புட்டிகளின் கழுத்து வரைக்கும் ஜலம் விட்டு பாத்திரத்தையும் நன்ருக இறுக மூடி அடுப்பின் மேல் வைக்கவும். தண்ணீர் நன்ருய் கொதித்தபின், அதாவது 212° F. அடுப்பை சிறிது தணித்து இதே உஷ்ணத்தில் இரண்டு மணி நேரம் வைக்கவும் புட்டிகள் பெரிதாயிருப்பின் இன்னும் ஒரு மணிநேரம் கூடவும் வைக்க வேண்டிவரும்.

நன்ருய் ஸ்டரிலைஸ் பண்ணிய பிறகு புட்டிகளை வெளியெடுத்து மூடிகளைத் திறக்காமல் நன்ருய் ஆற வைக்கவும். நன்ருய் ஆறிய பிறகு, கறுப்புக் காகிதத்தில் சுற்றி இருட்டான இடத்தில் வைக்கவும். என் என்ருல் வெளிச்சத்திற்குப் பழத்தின் நிறத்தை மாற்றி பழுப்பு நிறத்தைத் தரக்கூடிய சக்தியுண்டு.

புட்டிப் பழங்களைப் புட்டிகளிலிருந்து எடுத்த உடனேயே உபயோகப் படுத்த வேண்டும்.

குறிப்பு:—புட்டிகளில் பழங்களை அடைப்பதற்கு முன், புட்டிகளையும், நன்ருய் மேற்கூறிய பிரகாரம், புட்டிகளில் ஜலத்தை நிரப்பி ஸ்டரிலைஸ் பண்ணிய பிறகு பழங்களை அடைப்பின் நல்ல பலன் அளிக்கும்.

(2) பழங்களைப் பாகு இல்லாமல் கூட பாதுகாக்கலாம். இது மிகவும் சுலபமானதும், சிக்கனமானதுமாகும். புட்டிகளிலும் அதிக பழங்கள் அடைக்கலாம்.

முதலில் மேற் சொன்னபடியே புட்டிகளையும், பழங்களையும் தயார் செய்துகொள்ளவும். ஒரு ஸ்பூனைக் கொண்டு பழங்களை நன்ருய் நசுக்கி, கொட்டைகளை நீக்கிய பிறகு மரஸ்பூனைக் கொண்டே அவைகளை புட்டி கொள்ளும் வரைக்கும் நன்ருய் அடைக்கவும். அடைத்தபின் புட்டிகளை நன்ருய் இறுக மூடி மேற்கூறிய பிரகாரமே ஸ்டரிலைஸ் பண்ணவும். இம்முறையில் ஒவ்வொரு புட்டிகளிலும் அதிகப் பழம் அடைக்கப் பட்டிருப்பதால் ஒரு மணி நேரங்கூட ஸ்டரிலைஸ் பண்ணவும்.

ஸ்டரிலைஸ் பண்ணும்போது பழங்கள் சுருங்கி புட்டிகளில் குறையும். ஆகவே ஒரு புட்டியிலிருக்கும் பழத்தை எல்லாம் மற்றப் புட்டிகளில் சமமாய் நிரப்பி மறுபடியும் ஸ்டரிலைஸ் பண்ணவும். புட்டி நல்ல உஷ்ணமாயிருக்கும்போதே, சிறிது உஷ்ணமாயுள்ள மரக்கரண்டியைக் கொண்டேதான் பழங்கள் மாற்றப்படவேண்டும். பிறகு ஒரு மணி நேரம் 156° F அல்லது 166° உஷ்ணத்தில் ஸ்டரிலைஸ் பண்ணி இறக்கிய பிறகு, நன்ருய் மூடிகளைத் திறவாமல் நிதானமாக ஆறவைத்து, வெளிச்சம் படாத இடத்தில் வைக்க வேண்டியது அவசியமாகும்.

மேற்கூறிய பிரகாரம் ஒவ்வொரு விஞ்ஞானக் குறிப்புகளையும் கவனித்துச் செய்வார்களேயாகில் பழங்களை வருஷக் கணக்கிலுங் கூட பாதுகாத்து உபயோகப்படுத்தலாம்.

மேதையின் குணம்

மேதைக்கு எல்லாம் தெரியும்; ஜீவனேபாயத்துக்குசம்பாதிக்கமட்டும் தெரியாது.

—விர்னஸ் மிலஸன்

பெயராசை

●

லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி

கலாசாலையில் என்னுடன் படிக்கும் ஒரு மாணவியின் வீட்டிற்குப் போயிருந்தேன். நாங்கள் ஏதோ சுவாரஸ்யமாக பேசிக் கொண்டிருக்கும் பொழுது, உள்ளேயிருந்து யாரோ, சுப்பாயி, அடி சுப்பாயி, என்று கூப்பிட்டார்கள். ஆனல் இந்தச் சத்தம் எங்கள் பேச்சைத் தடை செய்யவில்லை. மீண்டும் கூப்பிட்டுக் கொண்டே அக்குரல் நெருங்கியது.வந்தது ஒரு பாட்டி. நாங்கள் இருந்த அறையில் பிரவேசித்து 'ஏண்டி சுப்பாயி உன்னைத்தானே இத்தனை நாழியா கூப்பிடறேன். பேசாமே உக்காந்திருக்கயே' என்ருள். என் சிநேகிதியின் முகம் கறுத்து விட்டது. 'ஸாரோ மன்னிச்சுக்கோ இதோ வந்துடறேன்' என்றுசொல்லிவிட்டுப்போனுள். கலாசாலையில் இவள் பெயர் லதாங்கி என்பது; உன் கொடி போன்ற தேகத்திற்கு இசைந்த பெயர் என்று யாராவது சொன்ஞல், உச்சி குளிர்ந்துவிடும். லதாவுக்கு கர்நாடக நாகரீகம் என்ருலே பிடிக்காது. இப்படிப் பட்டவளை அதுவும் என் எதிரில் 'சுப்பாயி' என்று கூப்பிட்டதும் பெருங் கோபம் வந்து விட்டது. அவள் திரும்பி வந்ததும், பாவம் முகம் அசடு வழிந்தது. தலை நிமிர்ந்து என்னைப் பார்க்கவே கூசினுள். அவள் ரகசியம் இனியும் ரகசியமாகவே இராது என்று அஞ்சினுள் போலும்!

பீ. ஏ. யில் படிக்கும் ஒரு இருபது வயது நாரீமணியை 'சுப்பாயி' என்றழைப்பது பொருத்தமில்லாமல் தானே இருக்கிறது. சுமார் 20, 25 வருடங்களுக்கு முன்னர் கூட குழந்தைகளை 'சுப்பி' குப்பி, சேஷி' என்று பாட்டியிடம் இருக்கும் அன்பிற்காகவோ அல்லது ஊர்ப்பிச்சையாக வளரட்டும் என்பதற்காக 'பிச்சை, வேப்பு என்ருே பெயரிடுவார்கள். அதே குழந்தைகள் விவரம் அறிந்த யுவர்களாகி நாகரீக ஏணியின் முதல் படியில் கால் வைக்கும் போதே செய்யும் பிரதான காரியம், தங்கள் பெயரை மாற்றிக் கொள்வதே. இதற்காகச் சிலர் சர்க்காருக்கு ஐந்து ரூபாய் அபராதமும் செலுத்தத் தயார்.

பிறந்த வுடனே குழந்தைகளுக்கு ஏன் பெயரிட வேண்டும்? இக் கஷ்டம் ஏற்படுவதெல்லாம் அதனுல் தானே. பெரியவர்களாகி, பிடித்த பெயராக அவர்களாகவே பொறுக்கிக் கொள்ளட்டுமே. இன்று நாம் எந்தப் பெயரை வைத்தாலும், 20 வருடத்திற்கப்பால் அது பழமையாகத்தான் இருக்

பேச்சினால் துன்பம் நேரலாம். ஆனால் மௌனத்தினால் அதைவிட பெரிய தீங்கு நேரலாம். வாய் விட்டுத் திட்டிய எந்த வசவும் வாயைத் திறவாமல் அன்பையும் ஆதரவையும் நிராகரித்த அலட்சியத்தைப் போன்ற புண்ணை மனித இருதயத்தில் உண்டாக்காது, "அப்பவே சொல்லாமல் போனேனே" என்ற ஏக்கம் சொன்ன அசட்டு வார்த்தைகளைவிட அதிக வருத்தத்தைக் கொடுக்கும்

அம்மா

கும். இப்பொழுது பெற்றோர் ஒரு பெயருக்காக தேடி அலைவதும், கவலைப்படுவதும், விவாதிப்பதும் எல்லாம் பின்னால் கட்டாயம் வியர்த்தமாகிவிடும். மோட்டார் கார்கள் பெயருக்குப் பதிலாக நம்பரை மட்டும் வைத்துக் கொண்டே சமாளித்து விடுகின்றன. கைதிகளும், கான்ஸ்டேபிள்களும் நம்பருடனேயே காலந் தள்ளிவிடுகின்றனர். இதே போல் குழந்தைகளுக்கும் நம்பர் வைத்தாலென்ன?

ஒருவருடைய பெயரிலிருந்தே அவரைப் பற்றிய அனேக விவரம் அறிய முடியும். அவர் பெயரே, அவர் குடும்ப அந்தஸ்து, செல்வ நிலை, நாகரீக முன்னேற்றம், வயது, சொந்த ஊர், மதம் இன்னும் எவ்வளவோ சொல்லிவிடும்.

மீனாக்ஷி சுந்தரம் என்ற பெயருடையவரானால், சட்டென்று மதுரையைச் சேர்ந்தவர் என்று கூறிவிடலாம். பிராமணரா, அப்பிராமணரா என்று சொல்ல முடியாவிட்டாலும், சைவ ஜாதி என்று திடமாகச் சொல்லலாம். இப்பெயர் ஆண்பால் பெண்பால் இரண்டுக்கும் பொதுவானது! இதே போல்தான் ராஜகோபாலன் என்றால் மன்னார்குடி ஞாபகம் வருகிறது, ஆனால் இது சைவ, வைஷ்ணவர் இருவருமிடையே காணப்படும் பெயர். கற்பகம் மயிலாப்பூர் சைவப் பெண்தான். பார்த்தசாரதி என்ற பெயரோ திருவல்லிக்கேணியை நினைப்பூட்டுகிறது. சில சைவர்களிடையேயும் இப் பெயர் காணப்படுகிறது. சைவ மதத்தினர்தான், வைஷ்ணவரைவிட பரந்த நோக்கமுடையவர்களா?

'வெங்கோபராவ், குப்பய்யங்கார், சுப்பய்யர்' என்ற நாமங்களைக் கேட்ட மாத்திரத்திலே, சரி ஆசாமி 1900 ஆண்டு மோஸ்தர் என்று தோன்றுகிறது. பெயருடன் அய்யர், ராவ் என்றவாலும் இருப்பதால் வைதீகப் பற்றுகூட உண்டு என்பதில் ஐயமில்லை. குடுமி இருந்தாலும் இருக்கலாம்! ஸ்ரீநிவாஸ், சுந்தர், சங்கர் என்றிருந்தால் 1910-1915 மோஸ்தர் எனலாம் — இவர்களுக்கு வயது சுமார் முப்பது அல்லது முப்பத்தைந்து இருக்கும். பெயருடன் வால் இல்லாததால் ஜாதியை நிச்சயமாக குறிப்பிட முடியாது, இருந்தாலும் ஆளைப் பார்த்தால் சொல்லிவிடலாம். இந்த வகுப்பில் பெண்களின் பெயர்களோ ராதா, ஸீதா, கமலா, விமலா என்று ஜோடி, ஜோடியாக இருக்கும். இவர்களில் சகோதரிகள் எவ்வளவு பேர் இருந்தாலும் அவர்கள் பெயரெல்லாம் பிராஸத்துடன் பிரமாதமாகத்தான் இருக்கும்— ஜயா, விஜயா, சுஜயா, ஸ்ரீஜயா என்று இவர்கள் பழைய நாகரீகமுமில்லை, புதிய நாகரீகமுமில்லை என்று இரண்டு கூட்டத்திலும் இருப்பார்கள்.

இன்னும் 10, 15 வருடங்களுக்கு முன்னர் பார்த்தால் சில

ருக்கு மேல் நாட்டிடம் இருக்கும் மோகம் அவர்களுடைய பெயரிலேயே விளங்கும். பெற்ரோர் வாய் நிறைய அழைக்க வேண்டுமென்று பரமேச்வரன், தனபாலன், வேங்கடாசலபதி என்று பெயரிடுவர். அது கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனது போல், பி. ஈச்வரன், டி. பாலன், வி. சலபதி என்ருகி கடைசியில் பி. வாரன், டி. பால், வி. பதி என்று ஏதோ ஆங்கிலப் பெயர் போல் மாறிவிடும். பெண்களின் பெயரோ ஷீலா, ரீடா, லில்லி என்றுதான் இருக்கும். இவர்களை 1920-30 ஆண்டு மோஸ்தர்களாக வருணிக்கலாம்.

ஆனுல் அக்காலம் மாறி தனித் தமிழர்களே — திராவிடர் என்று மார்தட்டுபவர்—அதிதமாக அந்தக் கோடிக்குப் போய் விடுகிருர்கள்,பெயரில்கூட தமிழ் ஒலிக்க வேண்டுமாம். பஞ்சரத்னம், ஐந்து கல் என்று மாறினது போல் நாராயண சாஸ்திரி, திருமால் பண்டிதனுக மாறி விடுகிருர். (ஒரு சந்தேகப் பிராணி 'பண்டிதர் வடமொழி அல்லவோ?' என்கிருர்.) ஆரிய தெய்வங்களின் பெயரால் ராமன், கிருஷ்ணன் என்றழைப்பதை விட்டு, திராவிட தெய்வங்களின் பெயரால் மாடன், இருளன் என்றழைத்தாலென்ன என்று கூட கேழ்ப்பார்கள். வேறு சில தாய் நாட்டு அன்பர்கள் இருக்கின்றனர். நாட்டிலிருக்கும் நதி, மலைகளின் பெயரால்தான் குழந்தைகளை அழைக்க வேண்டுமென்பார்கள். இப்படிப்பட்டவர்கள் சரயு,விந்தியா, ஹிமவான் என்று வைக்கலாம். இன்னும் சிலருக்குத் தேசத் தலைவர்களின் மீது இருக்கும் பாசமோ சொல்லி முடியாது.பத்து வருடம் கழித்து, ஒரு பள்ளிக்கூட 'ரிஜிஸ்டரில்' போய்ப் பார்த்தீர்களானுல் பெயர்களெல்லாம் மோஹன், சுபாஷ், ஜவாஹர், கஸ்தூரிபா, ஸரோஜினி, அருணு என்றே இருக்கும். ஏது, ஒரு பள்ளி உபாத்தியாயருக்கு தினம் ஒரு தடவை 'ரிஜிஸ்டரைப்' படித்தாலே சஹஸ்ரநாமம் செய்த பலன் கிட்டுவிடும்போலிருக்கிறதே!

> **இரசாயனம்**
>
> துர் நாற்றமடிக்கும் தண்ணீரை சுத்தம் செய்வதெப்படி?
>
> அடுப்புக் கரியை பாணலியில் போட்டு நெருப்புப் பிடிக்காமல் வருக்கவும். ஒரு சட்டியில் காலணு அகலத்திற்கு பொத்தல் செய்து தாமரைக் கிழங்கையாவது அல்லது ஒரு துண்டு பிரம்பையாவது சொருகவும். வருத்தக் கரியை சட்டியில் கொட்டி துர்நாற்ற மடிக்கும் தண்ணீரை ஊற்றவும். பொத்தலுக் கடியில் ஒரு சுத்தமான பாத்திரம் வைத்து சிறிய சொட்டுகளை பிடித்தால் தண்ணீர் துர்நாற்ற மடிக்காமலிருக்கும்.

பெயரில் என்ன இருக்கிறது என்கிருர் ஷேக்ஸ்பியர் - அப்படியும் ஓர் பிரகிருதி. ரோஜாவை, ரோஜாவென்றழைக்காவிட்டால் அதன் குணம், மணம், மாறியாவிடும் என்று கேட்கிருர். கனகாம்பரத்தை அடிக்கடி ரோஜாவென்றழைப்பதால், அதற்கும் நறுமணம் வந்துவிடும் என்கிருர்கள் தற்கால விளம்பர நிபுணர்கள். படித்த அறிவாளிகள் கேவலம் பெயருக்கு இருக்கும் மதிப்பை உணரவில்லையென்ருல், இனி உண்மையாகாது. இதற்கு ஒரு உதாரணம் தருகிறேன் பாருங்கள்.

பிரசாரம் என்பது 'பொது உறவு' என்ற கௌரவமான

பட்டத்தின் கீழ், இப்பொழுது நிபுணர்கள் போதிக்கும் ஓர் அரிய சாஸ்திரமாக துலங்கு கிறது. இதன் விசேஷம், பெரிய மேதாவிகள், பாமரர்களின் நன் மதிப்பைப் பெற இவ்வளவு பாடு படுவதுதான். சாதாரண மக்க ளிடையே எப்படிப் பேசவேண் டும், அவர்கள் சிந்தனை செல்லும் வழி யாது, அதை கவருவதெப் படி, அவர்களை எவ்வாறு திருப்தி செய்வது என்றெல்லாம் அறிஞர் கள் நுணுக்கமாக ஆராய்ச்சி செய்யத் தொடங்கிவிடுகிறார்கள். ஒரு சமயம் 'டோரி'க் கட்சியி னர் பொதுத் தேர்தலில் தோல்வி யுற்றனர். உடனே தங்கள் கட்சி யின் பொது உறவு இலாகா விடம் பரிகாரத்திற்கு ஓடினார் கள். அவ் விலாகா நிபுணர் கள், ரகசியம் எல்லாம் பெயரில் தான் இருக்கிறது என்றனர். இக் கட்சிக்கும் 'டோரி' என்ற பழைய பெயரே இருந்ததால், ஜனங்கள் இது புதுக் கொள்கை களுடைய கட்சி என்பதை உணர வில்லை. கட்சிக்கு ஆதரவும் கிடைக்கவில்லை. ஆகவே, 'கன்ஸர் வேடிவ்' கட்சியின் அடுத்த கூட் டத்தில், தங்கள் கட்சிக்கு ஒரு புதிய, வசீகரமான பெயர் வேண்டுமென சிலர் பேசினர். இதையெல்லாம் பார்த்த பிறகும் யாராவது பெயரில் என்ன இருக் கிறது என்று சொல்வார்களா?

சாக்குவிற்பனை அதிகரிப்பதின் பாதி ரகசியம் அச் சாமானுக்கு ஒரு கவர்ச்சியான பெயரை கண்டுபிடிப்பது அல்ல, கற்பனை செய்வது என்பதே. இதை எந்த விளம்பர அதிகாரியும் அறிவான். பெயர் பிடித்திருந்தால் சாமா னும் பிடித்திருக்கும் என்று 10-ல் 9 பங்கு நிச்சயமாகக் கூறலாம். எவ்வளவோ நல்ல சாமான்கள் பொருத்தமுள்ள பெயரில்லாத தால் கவனிப்பற்றுப் போயிருக் கின்றன. அதே போல் நம்மிடம் பிரபலமா யிருக்கும் அனேக சாமான்களின் தரம் சுமாராகவே இருந்த போதிலும், அவைகளு டைய வசீகரமான பெயரும், அவைகளுடைய விளம்பரத்திற் கான பெரும் செலவும், அச் சாமான்களின் அமோகமான விற்பனைக்கு காரணமாகின்றன. ஷிக்கல்க்ரப்பர் ஐரோப்பாவின் 'பூச்சாண்டியாவதற்குமுன் தன் பெயரை ஹிட்லர் என்று மாற் றிக் கொள்ள வேண்டியிருந்தது என்கிறார் ஒரு தமாஷ் பேர்வழி! ஸல்பானமைட்* போன்ற அரும் மருந்தின் பெயரைத்தான் எடுத் துக் கொள்ளுங்களேன். அதன் வைத்தியப் பெயரால் அதை யார் அழைக்கிறார்கள். அதை உற்பத்தி செய்யும் மே & பேக்கர்† கம்பெ னியின்பெயரே நிலைத்து விட்டது.

பெண்ணுக்கு வரன் தேடப் போங்கள். பெயர் கீதா, பிரபா என்றில்லாமல் வடுவாம்பாள், வாலாம்பாள் என்றிருக்கட்டும். பையன், பெண்ணின் புகைப் படத்தைக் கூட பார்க்க மறுத்து விடுவான், அதுவே தப்பி ஒரு கலியாணம் நிச்சயமானாலும், பெண்ணிற்குப் புதிய நாமகரணம் ஏற்படாமலிருக்காது. சாஸ்திரத் தில் கூட பெண்களுக்கு விவா கத்தின் போது தானே நாம கரணம், ஜாதகரணம் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக் கிறது. அதனால்தானோ என் னமோ சில திருமணப் பத்திரிகை களில் வேம்பு அலயஸ் வஸுமதி என்றிருக்கும்!

பெயரிடுதல், சினிமா முதலாளி களுக்கும், புத்தகவெளியீட்டாள

---

* Sulphanamide † May and Banker

ருக்குமே சிக்கலான பிரச்னை யாக இருந்தால், பெற்றோருக்கு தங்கள் குழந்தைகளுக்கு ஏற்ற, கவர்ச்சியுள்ள, மங்களமான பெயரைப் பொறுக்குவது எவ்வளவு கடினமாக இருக்கும். அதுவும் இரட்டைகளாகப் பிறந்துவிட்டால் அவர்கள் மூளைக்குச் சரியான பரீட்சை தான். நுட்ப புத்தியும், கற்பனையும் உடையவரானல், ராதா. அனுராதா, ரங்கன், சாரங்கன், தீபா, பிரதிபா என்றெல்லாம் பெயரிடுவார்கள். ஆனல் சாதாரணமானவர்கள் இத் தருணத்தில் திணறித்தான் போவார்கள், இவர்களுடைய உதவிக்காக நம் அறிஞர்கள் ஹிந்துப் பெயர்களின் ஒரு அகராதியை தயாரித்தல் அவசியம்.

கூடியமட்டில் பெயர் பொருத்தமானதாகவும் அமைய வேண்டும். கவி தாகூரின் ஓர் கதையில் சுபாஷினி என்று அருமையாக பெயரிடப்பட்ட குழந்தை ஊமையாக நேரிட்ட சோகக் கதை போல் ஆகாமலிருக்க வேண்டாமா? தீனதயாளுவிடம் பிச்சைக்குப் போனவன் வெறுங் கையாக திரும்பவும், ஆசையோடு மீனாக்ஷி என்று பெண் 15 வயதுக்குள் 'ஸோடா பாட்டில்' கண்ணாடி போல், கண்ணுக்கு அணிகலம் போட்டுக்கொள்ள நேரிட்டால் என்ன செய்வது?

நம் பெரியோர் குழந்தைகளுக்குப் பெயர் சூட்டுவதில் மூட நம்பிக்கை உள்ளவர்களாக இருந்தனர் என்று சொல்வது பெருந் தவருகும். உண்மையில் நாம்தான் இக் குற்றத்திற்கு ஆளாகிறோம். பண்டைய காலத்தவர் அதிர்ஷ்டமுள்ள பெயர்களையோ நல்ல பெயர்களையோ கடமைக்காகவே தேர்ந்தெடுத்தனர் என்று குற்றஞ் சாட்டப்பட்டாலும், இன்றைய யுவ யுவதிகள் பெயருக்காகத் தேடி அலைவதைப் பார்க்கும்பொழுது, ஏது இவர்கள் தாங்களிடும் பெயர்களையே பெரும் பரிசாக மதிக்கிறார்கள் போலும் என்று தோன்றுகிறது. சம்பிரதாயப்படி பாட்டி, தாத்தாவுக்காகவோ அல்லது ஊர்த் தெய்வத்துக்காகவோ பெயரிடுவது நம் முன்னேரின் தன்னடக்கத்தையே காட்டுகிறது. மற்றக் காரணங்களைவிட வழக்கப்படி செய்வது, பெயரிடுதலை சுலபமான, எளிதான காரியமாக்கியது என்ற ஒரு காரணமே போதுமே. நாமோ பெயர்களிலேயே வீண் கர்வம் அடைகிறோம்.

எவ்வளவு அபூர்வமாகவும் நவீனமாகவும் இருக்கிறதோ அவ்வளவு திருப்தி அடைகிறோம். இப்படிப்பெயருக்காக வேட்டையாடுவதும், லதாங்கி 'சுப்பாயி'யைக் கண்டு நடுங்குவதும் மாத்திரம் மூடநம்பிக்கை இல்லையோ?

சூரப் புலிகள்!

ஒரு காலத்தில் அந்த இரண்டு பேரும் நெருங்கிய சிநேகிதர்கள் ஒரு நாள் அவர்களுக்குள் சண்டை வந்துவிட்டது. ஆனல், இருவரும் மகா கோழைகள் நல்ல இருட்டு நேரத்தில் ஒருவனைப் பார்த்து மற்றொருவன் ரிவால்வரால் சுடப் போனன். ஆனல், அவனைச் சுடப் பயந்துகொண்டு கை நடுக்கத்துடன் அங்கே ஓர் அடுப்பைப் பார்த்துச் சுட்டான் இந்தச் சப்தம் கேட்ட மற்றவனே திடீரென்று பயந்து கீழே விழுந்து விட்டான்.

—ஸ்டெர்லிங் ஸ்பார்க்ஸ்.

ஈடித் சிட்வெல் ஆங்கிலக் கவியரசி

●

மீரா

சரோஜினி தேவி, தோருதத் முதலிய நம் நாட்டுக் கவியரசிகள் தோன்றிய சகாப்தத்தில் தோன்றியவர் ஈடித் சிட்வெல் அம்மையார். இவர் உணர்ச்சி ததும்பும் புரட்சி வேகங்கொண்ட செய்யுட்களை இயற்றியுள்ளார்.

"எலும்பும் இருதயமும்" என்னும் ஒரு செய்யுளின் மொழி பெயர்ப்பைக் கொடுக்கிறேன். அதிலிருந்து இருதயத்தையும், மூளையையும் ஒருங்கே ஸ்தம்பிக்கச் செய்யும் சக்தி ஏற்பட்டு உணர்ச்சி வேகத்தை அடக்க முடியாத ஒருவித உணர்ச்சி ஏற்படும்.

சக்தியின்றி கல்லறையில் புதைந்து கிடக்கும் ஒரு தாயின் வாய் மூலமாக பொழியப்படும் வார்த்தைகள்.

அவளுக்கு ஒரே ஒரு மைந்தன். தன்னிடமிருந்த எல்லாவற்றையும் அவனுக்கே அர்ப்பணம் செய்து விட்டாள். ஏன்? தன் உடலையே அர்ப்பணம் செய்து விட்டாளென்றால்கூட மிகையாகாது. தன் முழு அன்பிற்கும் பாத்திரமான அந்த மைந்தன் வேறொருவள் பால் அன்பு கொண்டு தாயை திரஸ்கரிக்கிறான். தாயின் உள்ளம் எப்படி இருக்கும் பாருங்கள்! மைந்தன் தன் காதலியை திருப்தி செய்ய அரும்பாடு படுகிறான். அவன் தாய் தன் படுக்கையடியில் சேமித்து வைத்திருந்த கொஞ்சம் பணம் அவன் கண்ணில் படுகிறது. அந்தப் பணத்தைப் பறிக்கத் தன் தாயைக் கொன்று விடுகிறான். கொல்ல யத்தனம் செய்யும் போது தாயும் மகனும் சந்திக்கிறார்கள். இருவர் கண்களும் சந்திக்கின்றன.

செய்யுளின் கடைசிப் பாகம் உணர்ச்சி ததும்ப முடிகிறது. கல்லறையில் அடைபட்டிருக்கும் தாயின் உள்ளம் எப்படி தவிக்கிறது கவனியுங்கள்:—

"என் தனயனின் கையால் சிந்தப்பட்ட என் உயிரின் ரத்தம்; என் உடைந்த இருதயத்திலிருந்து பெருகும் குருதி வெள்ளம்,

அவன் தாகத்தைத் தணிக்க நான் மீண்டும் தருவேன்

அவன் ஒரு பாபமும் அறியான். ஆனால் இந்த ஈவிரக்க மற்ற குருட்டு மண்,

இந்த உடல்—எல்லாம் என் பாபம்—என்னுடையதே.

அவன் மீது எனக்கிருந்த அன்பின் ஆழம் போதாது."

✲

பென்ஸிலின் அற்புதம்!

மேகநோய் பிடித்த ஸ்திரிக்குப் பென்ஸிலின் சிகிச்சை செய்வதன் மூலம் கருப்பையில் பத்து வாரங்கள் நிரம்பப்பெற்றுள்ள குழந்தைக்கும் மேகநோய் வராமல் தடுத்துவிட முடியும் என்கின்றனர் பென்ஸில் வேனியா மருத்துவக் கல்லூரி வைத்தியர்கள்.

—ஸயன்ஸ் டைஜஸ்ட்.

வஞ்சனையும் வாஞ்சையும்

●

ராஜம் வேங்கடராம்

"அம்மா, அம்மா, தினமும் சொல்ல மாட்டேன் என்கிறாயே, அப்பா எங்கே அம்மா? ....சொல்லமாட்டாயா?........ என்ன, நான் இன்னும் கைக் குழந்தை என்று எண்ணிக் கொண்டாய்?"

"ஐயோ! அதைப்பற்றி மட்டும் கேட்காதையேன்...அவர் வந்து விடுவார்...கூடிய சீக்கிரம் வந்து விடுவார்."

"எத்தனை நாளைக்குத்தான் 'வந்து விடுவார்', 'வந்து விடுவார்' என்று சொல்லப் போகிறாயோ! அப்பா, என்னமோ வந்த பாட்டைக் காணோம்! அம்மா! நிஜமாகச் சொல்லு, அப்பா எங்கே?"

"நிஜம்மாகத்தான் சொல்லுகிறேன். அப்பா வட நாட்டிற்குச் சென்றிருக்கிறார். கூடிய சீக்கிரம் வந்துவிடுவார். கவலைப் படாதே கண்மணீ! உனக்கு நானிருக்கும் போது என்ன கவலை? நான் உன்னைக் கவனித்துக் கொள்வேனடா கண்ணு" என்றாள் தாய் தயக்கத்துடனும் ஆறுதலுடனும்.

மகன் அதை அறிந்து கொண்டான். தாயைப் பார்த்து, "இல்லை அம்மா! நீ பொய் சொல்லுகிறாய். அப்பா விஷயமாக ஏதோ ஓர் மர்மம் இருக்கிறது. அம்மா! உண்மையைச் சொல்லக் கூடாதா?" என்றான் பரிதாபமாக.

தாயின் கண்களில் நீர் பெருகி வழிந்தது. அந்த சோக நாடகம் அவள் மனதை ஊடுருவிற்று. எத்தனை நாளைக்குத்தான் அவள் அதை மறைத்து வைப்பது? எனினும் உடனே சொல்லப் பிரியப் படாமல், "ராமச்சந்திரா! நாளை விடிந்தால் பரீக்ஷையப்பா. பேசாமல் படி. அப்பா விஷயத்தைப் பற்றி இன்னொரு நாளைக்கு விரிவாகச் சொல்லுகிறேன். கட்டாயமாக" என்று கூறிவிட்டுச் சென்றாள்.

உறுதியான அம் மொழியினால் ராமச்சந்திரன் திருப்தி அடைந்தான். தாயிடம் அவனுக்கு மிகுந்த வாஞ்சை. அவள்தானே அவனுக்கு அப்பாவும் கூட! 'பிராக்ரஸ் ரிபோர்டில்' அவள்தானே கையெழுத்துப் போடுகிறாள். அப்படிப்பட்ட ஆசை மிகுந்த தாயின் சோகத்தை அவன் கிளறிவிட விரும்பவே இல்லை. அவள் மகிழ்ச்சியையே ஆவலோடு எதிர்பார்த்தான். மகிழ்ச்சியுடன் புஸ்தகத்தை வைத்துக்கொண்டு கருத்தாய் படிக்கலானான்.

ராமச்சந்திரனுக்கு பதினைந்து வயதாகிறது. நல்ல கெட்டிக்காரன். வகுப்பிலே இவன்தான் முதல்தர மாணவன். நாளை விடிந்தால் S. S. L. C. பரீக்ஷை. அதற்காக அவன் படித்துக் கொண்டிருந்தான்.

தாய் சமையல் அறையில் இருந்தபடியே அதை கவனித்தாள். ஓர் ஆறுதல் அவள் உள்ளத்தை சமாதானப் படுத்தியது.

2

புஷ்பா நல்ல ஸ்வபாவமுடையவள். படித்தவள். ரொம்ப அழகு என்று சொல்வதற்கில்லை. அவள் மகனை கண்ணை இமை காப்பது

போலக் காத்தாள்; அவனுடனேயே அவள் எப்பொழுதும் இருப்பாள். அவனுடைய நடை, உடை, பாவனை, தோற்றம் எல்லாம் அவன் அப்பா ஜகந்நாத கவியைப் போலவே இருக்கும். அவன் பேசுவதிற்கூட அவன் அப்பாவைப் போலவே இருக்கும். இது வேறு புஷ்பாவிற்கு சாந்தியை ஒரு புறம் அளித்தது. இவ்வளவு வயதாகியும்கூட ராமச்சந்திரனை, அவள் இளங் குழந்தையைப் போல் பாவித்து, நடந்தும் கொண்டாள். ராமச்சந்திரனுக்கு கொஞ்சம் வெட்கமாயிருக்கும். ஆனால் தாயோ, மட்டற்ற மகிழ்வில் ஆழ்ந்துவிடுவாள், பெற்ற தாய் அல்லவா?

புஷ்பாவின் கணவன் ஜகந்நாத கவியை அறியாதவர்கள் எவருமே இல்லை. அவர் நல்ல அறிவாளி; படிப்பாளி. தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, வங்காளி முதலிய பாஷைகளில் அவர் தேர்ச்சியுடையவர். பிரபல எழுத்தாளரும் கூட, பல பாஷைகளில், கதை கவிதை. நாடகம் முதலியவைகள் எழுதி பெரும் புகழை அவர் அடைந்தார்.

இந் நிலையில்தான் புஷ்பா அவருடைய கிரஹலக்ஷ்மியாக வந்தடைந்தாள். அவருக்கு செல்வம் குவிந்தது. அவர் காவியங்களுக்கு ஏகப்பட்ட கிராக்கி ஏற்பட்டது. "எல்லாம் புஷ்பாவின் பாக்கியம்தான்" என்று அவர் புஷ்பாவிடம் அடிக்கடி கூறுவார். புஷ்பாவிடம் அவருக்கு மகத்துவம் மிகுந்த உண்மைக் காதல் இருந்தது. புஷ்பாவின் மேலான எண்ணங்களும், உதார குணமும் கவியின் மனதைக் கொள்ளை கொள்ளும்.

புஷ்பாவோ கணவனை தெய்வமாகக் கருதி வந்தாள். அவர் உள்ளூற திருப்தி அடைந்தால் தான் தானும் திருப்தி அடைவாள். கணவனுக்கு உதவியாகத் தானும் சில சமயங்களில் காவியங்களை எழுதிக் கொடுப்பாள். உணர்ச்சியுடன் சில சமயங்களில் கணவன் எழுதும் நாடகங்களை நடித்தும் காட்டுவாள்.

அவர்களுடைய ஆனந்த மயமான வாழ்க்கையின் முதல் மலராக ராமச்சந்திரன் பிறந்தான்.

குழந்தைகள் பிறப்பது சிலருக்கு நல்லதாய் இருக்கிறது; சிலருக்குத் தீயதாய் இருக்கிறது ......இதன் காரணம்? கர்ம வினைப் பயன்தானே? என்னவோ, ராமச்சந்திரன் பிறந்த எட்டு மாதங்களுக் கெல்லாம் ஜகந்நாத கவி வீணர் சகவாசம் கொண்டான். அவர்கள் அட்டைகளைப்போல் அவனைப் பிடித்துக் கொண்டார்கள். அதிகம் எழுதுவானேன். அவன் சினிமா கலையில் அதிக ஆர்வம் செலுத்தினான். காம பாசத்தில் சிக்குண்டான். மனம் மாறுபட்டது. ஆசை மனைவியும், அருமைக் குழந்தையும், வஞ்சக்கனல் ஆனார்கள். முடிவில், வட நாட்டு நடிகையான திலோத்தமை என்பவளுடன் வட தேசம் சென்றுவிட்டான்.

பாவம்! புஷ்பா என்செய்வாள்? பரந்த இவ்வுலகில் அவளுக்கு பெற்றோர்களோ, நெருங்கிய உறவினர்களோ கிடையாது! விதியை நொந்து கொண்டு தனக்கிருந்த நில புலன்களை விற்று கணவன் வைத்துப் போன கடன் முழுவதையும் அடைத்தாள். எஞ்சியிருந்த அற்ப வருவாயில் காலக்ஷேபம் செய்தாள். குழந்தை ராமச்சந்திரனை நன்றாக வளர்த்து அவனைப் பெரியவனாக்கினாள்!

3

ஜகந்நாத கவி, திலோத்தமை யுடன் சினிமாவில் நடித்துக் கொண்டும், சரள கேளிக்கை களில் ஈடுபட்டுக்கொண்டும், குடித்துக்கொண்டும், ஒரே சிற்றின்ப ரஹிதனுய்த் திரிந்தான். திலோத்தமை கவியை மயக்கி அவனுடைய உயரிய கதை, நாடகம் இவைகளை தான் எடுக்கும் சினிமா படத்திற்கு ஏற்றதாக்கிக் கொண்டாள். இதனுல் பணம் மிகுந்தது. தவிர பல சினிமா பட முதலாளிகள் கவியின் உயரிய இலக்கியங்களை அதிக விலை கொடுத்து சினிமாவிற்காக வாங்கிக்கொண்டு செல்வார்கள். அந்தப் பணமெல்லாம் திலோத்தமையின் கைப் பையையே அடைந்தன. சிலர் கவியிடம், கதை, வசனம், எழுதித் தரும்படியும், டைரக்ஷன் செய்யும்படியும் வந்து கேட்பார்கள். அதற்கெல்லாம் திலோத்தமையின் மூலமாகத்தான் வரவேண்டும். அவள் வைத்ததுதான் சட்டம். அவள் இட்ட கோட்டை ஜகந்நாத கவி தாண்டமாட்டார். அவள் கவியை அவ்வாறு கட்டுப்படுத்தி இருந்தாள்.

திலோத்தமை, தன் புகழை வைத்துக் கொண்டு தன்னை ஆட்டி வைப்பது அந்த கவிக்கும் ஒரோர் சமயங்களில் தெரியும். அதனுல் அவன் துயர் உறுவான். அதை திலோத்தமை எப்படியோ அறிந்து கொள்வாள். உள்ளத்திலே வஞ்சக் கனலின் வெம்மை இருந்தபோதிலும் முல்லையைப் போல் முறுவல், அந்த சாகசத்தின் சக்திக்கு, கவி எம்மாத்திரம்?

அந்தச் சிரிப்பிலேயே ஜகந்நாத கவி மயங்கி விடுவான்.

நாளடைவில் ஜகந்நாத கவியின் அறிவு மழுங்கியது. அவன் தாறுமாருக எல்லா விஷயங்களிலும் நடந்து கொண்டான். எல்லோரும் அவனுடைய செய்கைகளை அறிந்து அவனைத் தூற்றினர்கள். திலோத்தமையும் மெல்ல மெல்ல அவனை விட்டு விலகிவந்தாள். இந் நிலையில் காசநோய் அவனைப் பற்றிக் கொண்டது. நோயின் உபாதை பெருகிற்று. அவனுல் தாங்க முடியவில்லை. துடிதுடித்தான்.

ஓர் தினம் அவன் நிலைமை நிரம்ப மோசமாய் இருந்தது. மிகவும் பலஹீனமான த்வனியில் "திலோத்தமா! திலோத்தமா!" என்று அழைத்தான். பதிலே கிடையாது.

இந்தச் சமயத்தில் வீட்டு வேலைக்காரன் அவனிடம் வந்தான். "எஜமானியம்மா சொல்லி விட்டார்: நீங்கள் இந்த வீட்டை விட்டு உடனே போய்விட வேண்டுமாம். வியாதிஸ்தர்களுக்கு இங்கு இடமில்லையாம்!" என்று கூறினுன்.

அந்தச் செய்தி அவன் உள்ளத்தைக் குத்தி எடுத்தது. அவ்வமயம் திலோத்தமை குஷாலாக உள்ளே வந்தாள். கவியை வெறுப்புடன் பார்த்தாள்.

ஏற்கனவே ஆத்திரம் அடைந்த கவி, அவள் கோலத்தைக் கண்டதும் துடிதுடித்துப் பொங்கி எழுந்தான். ஆனுல் முடியவில்லை. உன்மத்தமாக, "சாகசி! நீ பெண்ணு, பேயா?" என்று கேட்டான்.

திலோத்தமைக்கு 'சுருக்' கென்றது. மிகுந்த ஆக்ரோஷம் கொண்டவளாகி, அவள் "என்ன சொன்னுய்? பேயா, நானு பேய்? ......ஆம், இதோ வாங்கிக்

கொள்'' என்று கவியின் கன்னத்தில் ஓங்கி அறைந்தாள்.

''ஹா!'' என்றலறிச் சுருண்டான் கவி. விழுந்து விழுந்து சிரித்தாள். ''ஊம். கொண்டு போய் தள்ளு இவனை'' என்று திலோத்தமை வேலைக்காரனுக்குகட்டளை இட்டாள்.

ஜகந்நாத கவிக்கு சுய நினைவு வந்தது. கண்விழித்துப் பார்த்தான். தான் ஓர் தர்ம ஆஸ்பத்திரியில் கதியற்றுக் கிடப்பது அப்பொழுதுதான் தெரிந்தது!

மனிதர்கள், தாங்கள் துயருறும் காலத்தில்தான், தாங்கள் செய்த, வஞ்சனை, பாபம், அட்டகாசம் முதலியவைகளை எண்ணுகிறார்கள். அப்பொழுதுதான் அவர்களுக்கு அறிவும், ஞானமும், நேர்மையும் உதயமாகிறது. தர்மம் தெரிகிறது. இது உலக இயல்பு போலும்! ஒவ்வொரு மனிதனும் இந்த இயல்பில் அடிபட்டுத்தான் ஆக வேண்டும் போலிருக்கிறது!

ஜகந்நாத கவிக்கும் இப்போதுதான் தன் மனைவி, மக்களைப் பற்றி சிந்தனைகள் தொடர்ந்தன. ''ஐயோ! புஷ்பா உன்னை வஞ்சித்தேனே! வஞ்சித்தேனே!'' என்று புலம்பினான். புஷ்பாவை எண்ணி உருகினான். தன் அருமைக் குழந்தை ராமச்சந்திரன் இப்பொழுது எப்படி இருக்கிறானோ? புஷ்பா எப்படித் தவிக்கிறாளோ? அவர்கள் இந்தஉலகத்தில் சுகமாய் வாழ்கிறார்களோ? ஐயோ! வஞ்சகம் செய்தேனே ...செய்தேனே...! என்று சதா புலம்பிக் கொண்டிருந்தான்.

நாட்கள் சென்று கொண்டிருந்தன. அவனுடைய வியாதி —புஷ்பாவின் பூஜாகிரஹம்தான் என்று சொல்ல வேண்டும்— குணமடைந்தது. ஆஸ்பத்திரியை விட்டு அவன் சீக்கிரம் வெளி வந்தான்.

முதலில் தன் மனைவி, மகனைக் காண வேண்டுமென்ற அவா அவன் மனதைத் துருவிற்று. உடனே அவன் தன் சொந்த நகரத்திற்குப் பிரயாணமானான்.

4

ராமச்சந்திரனுக்கு இப்பொழுது பத்தொன்பது வயது தான் ஆகிறது. அதற்குள் அவன் பிரபல எழுத்தாளனாகிவிட்டான். பல கலைகளிலும், பாஷைகளிலும் பாண்டித்தியம் பெற்று விளங்கினான். ஓர் பிரபல தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியர் ஆனான். நல்ல சம்பளம். இடையில் வேறு வருமானம், வேறு பத்திரிகைகளுக்கு விஷயதானம் செய்வதால், இன்னும் பிரசங்கம் முதலியவைகளிலிருந்து வேறு வருமானம். செல்வம் கொழித்தது அவனிடத்தில். நவயுக எழுத்தாள உலகில் அவன் ஓர் புரட்சிக் கனலாகத் திகழ்ந்தான்.

புஷ்பாவிற்கு இதில் ஓர் ஆனந்தம். ஆயினும் அவள் அவனை அடிக்கடி ''ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும்'' என்று எச்சரிப்பாள்.

ராமச்சந்திரன் தாயின் சஞ்சலத்தை அறிந்து பதில் அளிப்பான்.

புஷ்பா அடிக்கடி தன் கணவனை சிந்தித்துக் கண்ணீர் வடித்தாள். 18 வருஷங்கள் தேய்ந்த பின்னும் அவளுக்கு இன்னும் வாஞ்சை அதிகரித்துக் கொண்டுதான் இருந்தது. அவர் தன்னை வஞ்சித்தபோதிலும் அவள் அதை மறந்தே போனாள். 'என்னுடைய அருமைக் கணவன்தானே' என்று தனக்குள் சொல்லிக்கொள்வாள். ''ஐயோ!

அவர் இப்பொழுது எங்கு இருக்கிருரோ? எப்படி யெல்லாம் கஷ்டப்படுகிருரோ? அந்த சாகசி அவரை எப்படி படுத்துகிருளோ? பகவானே! அவர் சுகமாய் இருந்து, என்னை மறுபடியும் வந்தடைய அருள வேண்டும்!'' என்று கல்லுருவான கடவுள் முன் கசிந்துருகுவாள்.

இதை ஓர் தினம் ராமச்சந்திரன் கவனித்துவிட்டான். உடனே அவன் மனச்சாந்தி அற்று விட்டான். தாயின் சோகத்தைத் தீர்க்க தீவிர யோசனை செய்தான். தன் தகப்பனைத் தானும் காண வேண்டுமென்ற ஆசை அவன் உள்ளத்தில் ஒரு புறம் இருந்தது. உடனே அவன் வடநாட்டிற்குக் கிளம்பினன். பல இடங்களில் சென்று விசாரித்தான். கடைசியில் யாரோ ஒருவர் மூலம் 'அவர் ஆஸ்பத்திரியில் கிடப்பது' தெரிந்தது. உடனே ஓடோடியும் அங்கு சென்று பார்த்தான். ஆனல் அவர் அங்கில்லை!

5

ஜகந்நாத கவி அப்பொழுது தான் தன்னகத்தை நாடி வந்து கொண்டிருந்தான்! தன் ஸ்வதேசத்தை அடைந்த ஜகந்நாத கவி சற்று மன நிம்மதி யுற்ருன். தன் மனைவி, மகனைப் பற்றி அக்கம் பக்கத்தில் விசாரித்தான். அவர்கள் சொன்னதிலிருந்து, 'தன் மகன் ஓர் பிரபல ஆசிரியன் என்றும், புஷ்பா அவனுடன் இருக்கிருள்' என்பதையும் தெரிந்து கொண்டான். மனம் கூத்தாட, விறு விறு என்று தன் வீட்டை நாடிச் சென்ருன்.

''எங்கே?...இங்கு என் வீட்டைக் காணுேமே!...பங்களா!... ஒரு பெரிய பங்களாவல்லவோ இருக்கிறது?...இது யாருடையது?...'' என்று சுற்று முற்றும் பார்த்தான். சுவரில் 'ராமச்சந்திரன்—இன்' (அதாவது உள்ளே இருக்கிருர்) என்ற பலகை இருந்தது அதைக் கண்டதும் கவி அதி ஆச்சரியமும், குதூகலமும் அடைந்தான். தன்னுடைய மகன் பங்களா என்பதையும் அவன் சந்தேகமற அறிந்தான். உள்ளே செல்லத் துணிந்தான்.

மூடியிருந்த வாயிற் 'கேட்'டைத் திறந்தான். சுவர் மறைவில் அரைத் தூக்கத்தில் இருந்த காவலாளி விழித்துக் கொண்டான். ''யார் அது?'' என்று கேட்டுக் கொண்டே எழுந்து வந்தான். கவி தயங்கி நின்ருன். கவியின் கோலத்தைக் கண்ட காவலாளி 'சள்' 'புள்' ளென்று இரைந்தான். அவனை விரட்டினன்.

கவிக்கு இன்னது செய்வதென்று புரியவில்லை. சிறிது யோசித்தான். தன் கிழிசல் பையில் வைத்திருந்த நாலணவை எடுத்து, அவனிடம் கொடுத்தான். பின், ''நான் உன் எஜமானரைக் காண வேண்டும். அவரிடம் நான் வந்திருப்பதாகத் தெரிவி'' என்ருன்.

காவலாளி சாவதானமாக, ,,நீ யாரப்பா? உன் பெயர் என்ன? யஜமானரை எதற்காக பார்க்க வந்தாய்?...'' என்றெல்லாம் கேட்டான்.

''இல்லை நான் அவருடைய; அவருடைய...'' பிதா என்று சொல்லிக் கொள்ள ஜகந்நாதனுக்கு வெட்கமாய் இருந்தது. சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தான்.

காவலாளி அதை அறிந்து, ''சரி இந்தா சீட்டு. இதில் உன் பெயரை எழுதிக் கொடு.

எஜமானரிடம் கொண்டுபோய்க் கொடுக்கிறேன்...'' என்று ஓர் காகிதத்தையும் பேனாவையும் நீட்டினான்.

கவி உவகையுடன் அதில், "வஞ்சனை இழைத்துள்ள உன் தகப்பன் இன்று உன் வாசலில் வந்து நிற்கிறேன். நீ என்னை ஏற்றுக் கொள்வாயா?..." என்று எழுதி அனுப்பினான்.

காவலாளி உள்ளே சென்றான்.

கவியின் மனதில் சந்தோஷமும் துயரமும், மாறி மாறித் தோன்றின. அவன் உள்ளம் கொந்தளித்தது. முதலில் தான் புஷ்பாவிடம் அடைக்கலம் புக வேண்டுமென்று எண்ணினான், தக்ஷணமே உள்ளே சென்றான். மன்னிக்க முடியாத குற்றம் தான் செய்துவிட்டானல்லவா?

திறந்திருந்த ஓர் அறைக்குள் அவன் காலை வைத்தான். ஆம், அது புஷ்பாவின் அறை தான், அந்த அறை எங்கும் மாலையோடு காணப்படும் படங்களும் அவனுடையதே! 'ஆ!' என்று அதிசயித்து நின்றான் கவி. அவைகளைப் பார்த்துப் பார்த்து அவன் கண்கள் பூத்து விட்டன. இதயம் 'பட்' 'பட்' வென்றடித்துக் கொண்டது.

அதே சமயத்தில் புஷ்பா அறைக்குள் பிரவேசித்தாள். கவி ஜகந்நாதனைக் கண்டதும் திடுக்கிட்டு நின்றாள். அன்றலர்ந்த மலர் மாலைகளை அவள் கையில் பிடித்திருந்தாள். அவள் மனம் புரண்டது. சற்று சந்தேகமும் ஒரு புறம் இருந்தது. எத்தனை வருஷங்கள் சென்று விட்டன!... பதினெட்டு வருஷங்கள்!...... "ஆ!...தாங்கள், தாங்கள்..." என்றாள். மேலே பேச அவளால் முடியவில்லை.

கவி நிலை குலைந்தான். 'ஆ, புஷ்பா எப்படிப் போய் விட்டாள், பிரிவுத் துயரம் இவ்வளவு கொடுமையானதா?' என்று அவன் மனம் துடித்தது. அதோடு அவள் தவிப்பையும் கவி உணர்ந்தான். "புஷ்பா! நான் மஹாபாபி! வஞ்சித்தேன்! வஞ்சித்தேன்!!... வஞ்சித்தேன்!!!......என்னை நீ ஏற்றுக் கொள்வாயா!" என்று துக்கம் முழங்கக் கேட்டான் கவி.

அந்த யாசிப்பு புஷ்பாவின் மென்மையான உள்ளத்தை உருக்கிற்று. கனிந்த குரலில், "எல்லாம் ஈசன் செயல்! இந்த மட்டுமாவது தாங்கள் என்னிடம் வந்தீரே! என் பாக்கியமே பாக்யம்!" என்று கூறி அம் மலர் மாலையைக் கவியின் பாதத்தில் அர்ப்பணித்தாள்!

✻

இப்போது தெரியும்!

ஒரு மூன்று வயது பையன் படம் வரைந்துகொண் டிருப்பதை அவனுடைய தாயார் பார்த்துக்கொண்டாள் உடனே "என்ன படம் போடுகிறாய்? என்று கேட்டாள்.

"கடவுளின் படம்"

"கடவுளின் படமா? கடவுள் எப்படி இருப்பார் என்று யாருக்குமே தெரியாதேடா?"

பையன் புன்னகை செய்துவிட்டுச் சொன்னதாவது:

"தெரியாவிட்டால், இதைப் பார்த்துத் தெரிந்து கொள்ளப் போகிறார்கள்"

—ஆர்தர் பிளேக்

சட்டமும் பெண்களும்

●

ஸ்ரீமதி எஸ். வி. ரா.

1829-ம் வருஷம் டிசம்பர் மாதம், நான்காம் தேதி, பதினேழாவது சட்டம், வில்லியம் பென்டிங் பிரபுவின் விடா முயற்சியின் காரணமாக அமுலுக்கு வந்தது. அதன்படி 'சதி' (உடன் கட்டை ஏறுதல்) தடுக்கப்பட்டது. ஆனால் இந்தச் சட்ட மூலமாக ஹிந்து விதவை அடைந்த நன்மை சற்றேறக் குறைய மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிக்கு அப்பிலின் பேரில் தண்டனை தீவாந்திர சிக்ஷையாக மாற்றப்பட்டால் எப்படியோ, அப்படியே தான் இருந்தது. எப்படி இருபது ஆண்டுகள் பல கஷ்ட நிஷ்டூரங்களை அனுபவிக்க நேர்ந்த குற்றவாளி, மரணமே உத்தமமாயிருந்திருக்குமே என்று ஏங்குவானோ, அப்படியேதான் இருந்தது. இளம் விதவையின் நிலைமையும். ஆனால் ஒரு வித்தியாசம். அவனுக்காவது மனச் சாட்சி விழித்திருக்கும்போது "நாம் செய்த கர்மத்தின் பலனை அனுபவிக்கிறோம்" என்று ஆறுதல் இருக்கும். ஆனால் இவ் வேழைப் பெண்கள் செய்த பாவம் ஒன்றுமில்லையே. விதவா விவாகத்தைச் சட்ட மூலமாக அனுமதிப்பதற்காகத் தீவிரமாக உழைத்த பேராப்ஜி மலபாரி என்பவர் விவரித்தபடி ஒரேயடியாய் உடன் கட்டை யேறியவள் சதி யென்றாவது கொண்டாடப்பட்டாள்; ஆனால் உயிர் வாழும் ஹிந்து விதவை சொல்லொணாத் துயரம் தாங்கி அணு அணுவாக வதங்கி, கருகித் தீய்ந்து போகும்படி, சமூகம் கட்டுப்படுத்தி விட்டது.

விதவா விவாகத்திற்கு எதிராக சாஸ்திரங்களை மேற்கோளாகப் பலர் எடுத்துக் கூறினர். ஆனால் அவர்கள், சாஸ்திரங்களை முற்றுங் கற்ற மூதறிஞர்களென்று வங்காளத்தில் ஈஸ்வர சந்திர வித்யாஸாகரர் என்பார், முதல் முதலாக விதவா விவாகம் சாஸ்திர சம்மதமென்று நிரூபித்தார். 1885-ம் ஆண்டில் ஈஸ்வர சந்திரர், "ஹிந்து விதவா விவாகம்" என்றொரு சிறிய புத்தகத்தில் ஸ்மிருதிகளிலிருந்து விதவா விவாகம் சாஸ்திர சம்மதமென்று ஆதாரங் காட்டினார். "பாராசர ஸம்ஹிதையில், புருஷனைக் குறித்துப் பல ஆண்டுகளாகத் தகவல் தெரியாமல் இருந்தாலாவது, புருஷன் மரித்த பிறகாவது. அவன் சந்நியாசியான பிறகாவது, அவன் நபும்சகனென்று தெரிந்த பிறகாவது, பெண்கள் மற்றொரு மணாளனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்" என்று சொல்லியிருக்கிறது.

கலியுகத்திற்கு அனுஷ்டமான விதிகளை பாராசார ஸம்ஹிதையில் தான் ரிஷிகள் எழுதி வைத்திருக்கிறார்கள். இது வைதிகப் பிச்சுக்களின் கண்களில் தென்படவேயில்லை.

ஈஸ்வர சந்திரரின் முயற்சிகள் பலனளித்தன. பலத்த எதிர்ப்புக்கெதிராக 1856-ம் ஆண்டின் பதினைந்தாவது சட்டம் அப்

பொழுதிருந்த சட்ட நிர்மாண சபையில் ஆக்கப்பட்டது. சுமார் ஐம்பது, அறுபதினாயிரம் பேர்களின் கையொப்பத்துடன் நாற்பது விண்ணப்பங்களுக்கு மேல் இந்த சட்டத்திற்கு எதிராக வந்தன என்றால், அப்பொழுது இருந்த ஜனங்களின் மனோ பாவத்தை யூகிக்கலாம். இந்தச் சட்டப்படி விதவா விவாகம் எல்லா உரிமைகளையும் அடைந்தது. சட்டத்தின் வாசகம் பின்வருமாறு: "ஒரு முறை விவாகம் செய்துகொண்டதன் விளைவாக ஹிந்து விதவைகள் சட்ட சம்மதமாக மறு விவாகம் செய்துகொள்ள முடியாமல் இருக்கிறது. அப்படி விவாகம் செய்து கொண்டாலும் அவர்களுக்கு சொத்துரிமை மறுக்கப்படுகிறது. அநேக ஹிந்துக்கள் இதே வழக்கமாக இருந்தபோதிலும் சாஸ்திரங்களின் மேற்கோளுக்கு எதிராயிருப்பதாயும் மனச் சாட்சிக்கு விரோதமில்லாமல் வேறு சாஸ்திர சம்மதமான வழக்கத்தைக் கைப்பிடிக்க விரும்பும் ஹிந்துக்களை நியாயஸ்தலங்கள் தடுக்கக் கூடாதென்று அபிப்பிராயப் படுகிறார்கள். அப்படிப்பட்ட ஹிந்துக்களுக்கு சட்ட அனுமதி யளிப்பது நியாயம். ஹிந்து விதவா விவாகத்திற்கு எதிராயுள்ள தடைகளை நீக்குவதால், உத்தம வாழ்க்கையும் சமூக நன்மையும் ஏற்படும். ஆகையினால் பின்வருமாறு விதிக்கப்படுகிறது." "யாதொரு வழக்கமோ, ஹிந்து சட்டத்தின் வியாக்கியானமோ, எதிராயிருந்த போதிலும், ஏற்கனவே நிச்சயதார்த்தம் செய்யப்பட்டவனோ, அல்லது மணம் செய்யப்பட்டவனோ மரண மடைந்த பிறகு, மணம் செய்துகொள்ளும் ஹிந்துக்களும் அவர்களுடைய சந்ததிகளும் விதிக்கு விரோதமானது என்று கருதப்பட மாட்டார்கள்.

"காலஞ்சென்ற கணவனின் சொத்திலுள்ள உரிமைகளையும், ஜீவனாம்சத்தையும் மரண சாஸனத்தில் (உயிலில்) மறுமணம் செய்துகொள்ள அனுமதி இருந்தாலன்றி மேற்படி சாசனத்தினால் ஏற்பட்ட அனுகூலங்களும், சொத்துக்களும், வாரிசுகளும் அவள் மறு மணம் செய்து கொண்டவுடன் அற்றுப்போம். அவள் இறந்துவிட்டால், யார் அடுத்த வாரிஸோ அவருக்கு அவளுடைய சொத்துக்களும் உரிமைகளும் அவள் மறுமணம் செய்துகொண்டதும் இறந்து விட்டதேபோல் பாவிக்கப்பட்டு அவரைச் சேரும்.

"மரண சாஸனத்தில் விதவையோ அல்லது மற்ற எவரோ, மரண மடைந்த கணவனின் மைனர் குழந்தைகளுக்கு கார்டியனை விவரிக்கப்படாமலிருந்தால், விதவை மறு மணம் புரிந்து கொண்டவுடன், காலமான கணவனின் தகப்பனோ அல்லது பித்ரு வர்க்கப் பிதாமகனோ (பாட்டன்) தாயோ அல்லது பித்ருவர்க்கப் பாட்டியோ அல்லது காலஞ்சென்ற கணவனின் ஆண் உறவினரோ அவன் மரண மடைந்த இடத்தைச் சேர்ந்த உயர்தர நீதி மன்றத்தில் மேற்படி தகப்பனற்ற குழந்தைகளுக்கு உசிதமான ஒரு கார்டியனை ஏற்படுத்தும்படி மனு செய்து கொள்ளலாம்.

"மேற்படி நீதி மன்றம், உசிதமெனத் தோன்றினால் அப்படியே ஒரு கார்டியனை நியமிக்கலாம். அப்படி நியமிக்கப்பட்ட கார்டியனை மேற்படி குழந்தைகளை அவர்களுடைய மைனரிடி காலத்தில் அவர்களுடைய தாய்க்குப்

பதிலாக அவர்களைச் சரிவர பராமரிக்கக் கடமைப்பட்டவராவர். கார்டியனை நியமிக்கும் விஷயத்தில் நீதி மன்றம் தாய், தகப்பனற்ற குழந்தைகளுக்கு கார்டியன் ஏற்படுத்துவதில் உள்ள விதிகளையே கைப்பற்றும். ஆனல், குழந்தைகளின் போஷாக்குக்கு வேண்டிய சொத்து, குழந்தைகளுக்கு இல்லாத போனல், தாயாரின் சம்மதமின்றி, நியமிக்கப்படும் கார்டியன், குழந்தைகளின் பராமரிப்பிற்கும், படிப்பிற்கும் போதிய ஜாமீன் அளித்தாலன்றி, அவரை நியமிக்கக்கூடாது.''

இந்தச் சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன், சந்ததியற்ற விதவையாக இருப்பதன் காரணமாக ஏதாவது சொத்தை யடைய பாத்தியதை யற்றிருந்தா ளானல், சொத்தை விட்டு விட்டுச் செத்தவர் மரண மடையும் போது அவள் பிள்ளைப் பேரற்ற விதவையாயிருந்தால், இந்த சட்டப்படி அவளுக்கு அந்த சொத்திலோ அதன் பகுதியிலோ பாத்தியதை யிருப்பதாக வியாக்கியானம் செய்யக்கூடாது. ''மேற்கூறிய மூன்று விலக்குகளைத் தவிர்த்து, மறுமணம் செய்து கொண்டதன் காரணமாக, எந்த ஒரு விதவையும் தனக்கு உரிமையுள்ள சொத்துக்களையோ உரிமைகளையோ இழக்க மாட்டாள். மறுமணம் செய்து கொண்ட ஒவ்வொரு விதவையும், அது முதல் மணமாயிருந்தால் ஏற்படும் எல்லா உரிமைகளையும் பாத்தியதைகளையும் பெறுவாள். எந்த வார்த்தைகளைக் கூறுவதன் மூலமோ எந்த சடங்குகளின் மூலமோ எந்த நியமனங்கள் மூலமோ ஒரு ஹிந்து கன்னிகை (அது வரையில் மணம் செய்விக்கப்படாதவள்) விவாகம் செய்து கொள்கிருளோ, அதே வார்த்தைகள், சடங்குகள் அல்லது நியமனங்கள் மூலம் ஒரு விதவையும் மணம் செய்து கொள்ளக்கூடும். அது சட்ட சம்மதமான மணமுமாகும்.''

அந்த வார்த்தைகள், சடங்குகள் அல்லது நியமனங்கள் ஒரு விதவைக்குச் செல்லாது என்று எந்த விவாகமும் ரத்து செய்யப்பட மாட்டாது.

''மறுமணம் செய்து கொள்ளும் விதவை கன்னிப் பருவம் கழியாதவளா யிருந்தால் (ருதுவாகாதவளாக இருந்தால்) அல்லது மைனராக இருந்தால் அவளுடைய தகப்பனர், தகப்பனில்லாவிட்டால் பிதா வழியாக வந்த பாட்டன் அப்படி பாட்டனில்லாவிட்டால் தாயார், இவர்களில்லாவிட்டால் தமையன், தமையனும் இல்லாவிட்டால் நெருங்கின ஆண் உறவினர் சம்மதம் பெறவேண்டும். இந்த விதிக்குப் புறம்பாக மறுமணத்திற்குத் தூண்டுவோர் ஒரு வருஷத்திற்கு மேற்படாத சிறைவாசமோ அல்லது அபராதமோ, அல்லது இரண்டுமோ விதித்து தண்டிக்கப்படுவார்கள். அப்படி இந்த விதிக்கு முரணன விவாகங்களைக் கோர்ட்டார் சட்ட பூர்வமாக ரத்து செய்து விடுவார்கள். அப்படி இந்த விதிக்கு விலக்காக செய்யப்பட்ட விவாகத்தில் மேற்படி சம்மதம் பெறக் கூடு மென்று எதிர்பார்க்கப்படலாம். விவாகரத்து கோருகிறவர்கள் மேற்படி சம்மதம் பெற முடியாதென்று நிரூபிக்க வேண்டும். விவாகம் பூர்த்தியாயிருந்தால் (சாந்தி முகூர்த்தம் முடிந்திருந்தால்) கல்யாணம் ரத்து செய்யப்பட மாட்டாது. ருதுவா யிருந்த

19764

விதவை அல்லது சாந்தி முகூர்த்தத்திற்குப் பிறகு விதவையானவள் தன் சம்மதத்தாலேயே மறுமணத்தைச் சட்ட சம்பந்தமானதாகச் செய்யக்கூடும்.''

இந்தச் சட்டப்படி விதவைகள் விவாகம் செய்து கொள்ளலாம். ஆனால், சட்டமியற்றியும் சமூகம் மறுமணம் புரிந்து கொண்ட விதவைகளை (அவர்கள் பணக்காரர்களாயிருந்தாலன்றி) சேர்க்காமலிருப்பதால் "கல்யாணம் செய்தும் சன்னியாசி, கடன் வாங்கியும் பட்டினி'' என்று சொல்வார்களே அப்படி, விதவைகளின் வாழ்க்கை பழையபடியே இருந்து வருகிறது. இதற்கு முக்கிய காரணம் இரண்டு. முதன் முதலாக புருஷர்களின் மனமாற்றம் அவசியம். "பல தாரங்களை தாம் மணக்கலாம். ஆனால் தம் மனைவி தன்னைத் தவிர வேறெவரையும் கண்ணெடுத்தும் பார்க்கக் கூடாது.'' என்றும் எண்ணம்மாறி, விட்டுக் கொடுக்கும் மனோபாவம் ஏற்பட வேண்டும். உடன்படியாகத் தாரமிழந்தவர்கள் விதவைகளையன்றி கன்னிகைகளைக் கைப்பிடிப்பதில்லை என்று உறுதி செய்து கொள்ள வேண்டும். அறுபது வயது கிழவன் தன் ஐந்தாவது மனைவி இறந்ததும், ஆறுந்தாரமாக பதினன்கு வயது பெண்ணை மணக்கக் கூடாது. தன் வயதிற்கேற்ற விதவையை மணப்பதால் இருவரும் இன்புற வாழ்க்கை நடத்தலாம்.

இரண்டாவது வரதக்ஷிணை: இந்தப் பேய் தாண்டவமாடும் வரையில் மணவாழ்க்கைத் துன்பமயமாகத்தான் இருக்கும். "மணமகன் என்ன விலை? என்ற கேள்வி ஒழிய வேண்டும். மீனுக்ஷி அம்மாள் தன் பிள்ளைக்குக் கல்யாணம் செய்த விவரத்தை அடுத்தகத்துக் கோமளத்தினிடம் சொன்னதும் முதல் கேள்வி "வரதக்ஷிணை எவ்வளவு?'' இரண்டாவது சீர் என்ன செய்தார்கள்?''முதல் கணவனைப்பெற பல ஆயிரம் ரூபாய்கள் செலவழித்த விதவையிட மிருந்து இரண்டாம் கணவன் பணம் பறிக்க ரூபாய் செடியிலா முளைக்கிறது?

✻

குழந்தை யின்பம்

குழந்தைப் பருவம் இன்பத்தின் நிலைக்களனுகவும், வயதானவர்களுக்கு வழி காட்டியாகவும், உலகின் சூதுவாது அறிய சந்தர்ப்பமில்லாத உத்தமத் தன்மையாகவும் இருக்கிறது. குழந்தைகளைப் பார்க்கும்போது வயதானவர்களுக்கு நாமும் இம்மாதிரி எப்போதும் குழந்தைகளாகவே இருந்துவிடலாகாதா? என்ற நினைவுண்டாகிறது. குழந்தைப்பருவம் தெய்வீக நிலையைப் பிரதிபலிக்கும் கண்ணுடி போன்றது.

ஸ்வர்க்கத்தின் இன்ப நிலையை குழந்தைகளிடம் காணுகிறோம். எங்கே குழந்தைகள் இருக்கின்றனவோ அங்கே குறையாவின்பம் நிலைத்திருக்கிறது. குழந்தைகளுடன், குழந்தைகளுக்காக, குழந்தைகளைப் போலவே நாம் வாழப் பயிலவேண்டும்,

மனோரஞ்சிதம்

மு. அருணசலம்

என்ன அழகான பெயர்! இப்பூவை அறிந்தவர்கள் இதற்கு இதைவிட அருமையான பெயர் அமைய முடியாது என்றே சொல்வார்கள். மனதுக்கு இப்பூவின் மணம் அவ்வளவு ரஞ்சிதமானது. ரஞ்சிதம் மட்டுமா? விசித்திரமும் உண்டு. பூவின் மணம் என்ருல் அது இப்படியிருக்கக் கூடும் என்று நாம் அறிந்த பிற பூக்களின் மணத்தைக் கொண்டு ஓரளவு வரையறை செய்ய முடியும். மனோரஞ்சிதத்தின் மணம் இவ் வரையறைக்குள் அடங்குவதில்லை. காரணம் இப் பூவின் மணம் பூ மணமே யன்று; பழத்தின் மணம்!

எந்தப் பழத்தை நினைத்துக் கொண்டு இப்பூவை நாம்மோந்து பார்த்தாலும், அப் பழத்தின் மணத்தை இதில் காணலாம் என்று எல்லோரும் சொல்வார்கள். கேட்பதற்கு இது வேடிக்கையாகத் தோன்றினலும், அத்தனையும் உண்மை. நமக் குரிய புராதன முப் பழங்களான வாழை, மா, பலா; புதியவையான அன்னசி, கொய்யா; இப்படியாக நல்ல மணமுடைய பழவகைகள் என்ன என்ன உள்ளனவோ, அவற்றுள் ஏதேனும் ஒன்றை மனதில் எண்ணிக் கொண்டு, இதை மோந்து பாருங்கள்: அப் பழ மணத்தை இதனிடம் நன்ருய்க் காணலாம். எனவே, இது விசித்திர மென்பதில் தடையென்ன? இதை எண்ணும்போது, மனோரஞ்சிதத்தைப் படைத்த கடவுள். பழங்களின் நறுமணத்தை யெல்லாம் வடித்தெடுத்த சாரத்தை இதன் இதழ்களில் பெய்து வைத்து விட்டான் என்றே சொல்லத் தோன்றுகிறது.

மணம் அதிகமாய்ப் படைத்த பூக்கள் யாவும் பூமத்திய ரேகையை ஒட்டிய வெப்ப நாடுகளில் அதிகமாய்ப் பயிராகின்றன. அவற்றுள் ஒன்ருகிய மனோரஞ்சிதமும் வெப்ப நாடாகிய நம் தமிழ் நாட்டுக்கே உரியது. வளம் மிகுந்த நிலத்தில் இது நன்ருய்ச் செழித்துப் புதர் போல 20 அடி உயரம் வரையில் கூட வளரும். செடியின் அடியிலிருந்து புதிய போத்துக்கள் கிளைதது, கொடி போல 20 அடி நீளம் நீண்டு வளைந்து படரும். இலை யுதிர்க்காமல் செடி என்றும் பசுமையா யிருக்கும். மாவிலையையொத்த பளபளப்பான இலைகள். அடிக் கிளையில் நீண்ட தடித்த கூர்மையான முள்ளிருக்கும்.

விதை போட்டாவது, கிளையை வளைத்துப் பதியன் போட்டாவது செடி பயிரிடலாம். நன்ருய் நீர் பாய்ச்சி எரு விட்டால், எந்த நிலத்திலும் செழிப்பாய்ப் பயிராகும். நன்ருய் வளர்ந்த செடி, தரையில் 10 அடி நீளம் அகலம் கொண்ட இடததை அடைத்துக் கொள்ளும். சுமார் மூன்று

வருஷத்தில் ஓராள் உயரம் வளர்ந்து பூக்கத் தொடங்கும். புதிய போத்துக்களின் நுனிக் கொழுந்தில் இலைக்கணுத் தோறும் அரும்பு இருக்கும். அரும்பு சற்றே மஞ்சை கலந்த பச்சை நிறம். முதிர முதிர, பச்சை மஞ்சளாக மாறி, நன்றாய் மலர்ந்த பூ, மஞ்சள் நிற மாகி விடும். இலைக் கணுவி லிருந்து, காய் தொங்குவது போலப் பூ தொங்கும். பூவி னுள் மூன்று பெரிய இதழ்களும் உள்ளே மூன்று சிறிய இதழ் களும் இருக்கும். பூ என்றால் மென்மையான இதழ்களுடை யது என்றே நாம் எண்ணு வோம். ஆனால் மனோரஞ்சிதப் பூவின் இதழ்கள் மிகவும் தடித் தவை; இதழை வளைத்தால் மளுக் கென்று ஒடியும். அரும்புக்கும் பூவுக்கும் தோற்றத்தில் வித்தி யாச மில்லை. அரும்பின் இதழ் களும் வளைந்தே யிருக்கும். பூத்த பின், முழு மஞ்சள் நிறமும், இதற்குரிய தனியான மணமும் உதிக்கும்.

மாலையில் மலரும். இதன் மணம் மிக்க வேகமுடையது. பெரிய தோட்டத்தில் ஒரு பூ பூத்திருந்தாலும், தோட்ட மெங்கும் மணம் கமழும். இம் மணத்தை அனுபவிப்பதென்றால், செடியிலேயே பூ இருக்கும்படி விட்டு வைத்து அனுபவிப்பதே நல்லது. பறித்து வீட்டிலோ தலையிலோ வைத்தால், மணத்தின் 'நெடி' தாங்க முடியாது; தாங்க முடியாமல் சிலருக்குத் தலைவலி உண்டாவது முண்டு. இதன் மணத்தை நாடிச் செடியில் எப்போதும் நல்ல பாம்பு வாசம் செய்யும் என்று சொல்வார்கள்.

மாலையில் மலர்ந்த பூ இரண்டு நாள் இருந்து விட்டு, இதழ்களை உதிர்த்துவிடும். பின் பூவில் கொத்தாய்க் காய்கள் உண்டா கும். ஒரு கொத்தில் 10—20 காய்கள் இருக்கும். கொட்டைப் பாக்களவுள்ள பசுமையான காய்; நன்றாய்ப் பழுத்த பின் மஞ் சள் நிறம். பழத்தினுள் பெரிய கொட்டை. இதை எடுத்து விதைத்தால் செடி முளைக்கும். வளத்துக்கு ஏற்றபடி, வளர்ச்சி பெற்ற செடி முதல் வருஷத்தி லிருந்தே பூத்து வருவது முண்டு. வருஷம் முழுமையும் பூத்துக் கொண் டிருக்கும். நெடுங் காலம் பசுமை மாறாமல் செழித்து வளர்ந்து பூத்துக் கொண்டிருக் கும். செடியைப் பக்குவமாய்க் கத்தரித்துக் கிளைகளைப் பின்னி விட்டுச் சுவர்போல வளர்ப்பது முண்டு.

மனோரங்கினி என்றும் இதற்கு மற்றொரு பெயர் வழங்கும்.

✲

சந்தோஷத்தாலேயே மனிதன் தன்மையைப் பூராவும் அறிகின்றோம். பிறரை வீணாகத் துதிக்கும் சிரிப்பு; பனிக்கட்டியின் குளிர்ந்த உணர்ச்சி யற்ற கொடிய புன்முறுவல்; கசடான கம்பளிச் சிரிப்பு. உண்மையாய் உணர்ச்சியுடன் சிரிக்கச் சக்தியற்றவன், கொள்ளையும் கொலையும் புரியும் சண்டாளனாகின்றான். அவனுடைய வாழ்க்கையே மித்திர பேதம், சூழ்ச்சி.

—கார்லைல்

ஆகாரம்

●

ருசினி

ஏதாவது ஒருவகை உணவுப் பொருளால் மாத்திரம் உயிர் வாழ முடியாது என்னும் தத்துவத்தை உடல் பொருளாதார நிபுணர்கள் ஐயக் திரிபற நிரூபித்து விட்ட பிறகும்கூட தமிழகத்தில் ஒரே ஒருவகை உணவுப் பொருள் அடங்கியுள்ள (கார்போஹைட்ரேட்-அரிசியை "அன்னமயம்-பிராணமயம்" என்று சொல்லிக் கொண்டு விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். தப்பித் தவறி அரிசியில் கார்போஹைட்ரேட்டை தவிர வேறு வைடமின் சத்துக்கள் வந்து விடப்போகிறதே என்று அதையும் பலமுறை தீட்டி, கழுவி, வெண்மையாக்கி விடுகிறார்கள்! சாதமாகவோ, தோசையாகவோ இட்டிலியாகவோ, உப்புமாவாகவோ, இந்த சத்தற்ற அரிசியை உள்ளே தள்ளுவதென்ற வழக்கத்தைக் கைப்பிடித்ததன் மூலம் ஆரோக்கிய திடகாத்திரத்தையும் உலகை வெல்லும் ஆணவத்தையும், நுண்ணறிவையும் கூட இழந்து விட்டார்களென்று கூறுவது கூட மிகையாகாது. ஏதோ கடவுள் புண்ணியத்தால் யுத்தம் வந்தாலும் வந்தது. அரிசி விளைவு குறைந்தாலும் குறைந்தது. பலவந்தமாகவாவது, மக்கின அரிசி ஆறு நாள் சாப்பிட்ட பிறகாவது, ஒரு நாள் சத்துள்ள கோதுமை சாப்பிடட்டும் என்று அரசாங்கத்தார் விதித்ததால், அப்படியாவது கொஞ்சம் பசையுள்ள ஆகாரத்தை உட்கொள்ள மறுக்கும் ஜீவராசிகளை என்னவென்று மதிப்பது? ஒரு நாள் பட்டினியாவது கிடப்பேனே ஒழிய அரிசியை விட்டிருக்கமாட்டேன் என்னும் மனோபாவம் எப்பொழுது ஒழியப்போகிறது என்ற இந்த எண்ணங்கள் தான் என்னை இரவு முழுதும் தூங்க விடவில்லை. நேற்று சாயங்காலம் ரேஷன் அரிசியையும் கோதுமையையும் வாங்கிவர மளிகைக் கடைக்குப் போனேன். என் ஒருத்தியை தவிர, அங்கு வந்த மற்ற அனைவரும் கோதுமை வேண்டாமென்று சொல்லிவிட்டு அரிசியை மாத்திரம் வாங்கிக் கொண்டு போனார்கள்.

நாம் நோயற்ற நல்வாழ்வு வாழ வேண்டுமென்றால், கார்போஹைட்ரேட் புரோட்டீன்களும் உயிர்ச் சத்துக்களான வைடமின்களும் உலோக சத்துக்களான உப்புக்களும் அவசியம் என்பதற்கு நமது வாழ்க்கையே பிரமாணமாக அமைந்துள்ளது. முதலாவதாக இயற்கையாகவே நமக்கு ஒரே வகை ஆகாரத்தின் மீது வெறுப் புண்டாகிறது. "என்ன இழவெடுத்த கத்தரிக்காய் தினப்படி" என்று எரிந்து விழுகிறோம். ஆனால் வழக்கம் காரணமாக இயற்கை உணர்ச்சியும் ஓரளவுக்கு அடங்கி அரிசி மோகம் ஏற்பட்டு விடுகிறது. இரண்டாவதாக, நமது ஜீரணக் கருவிகளின் அமைப்பைக் கவனித்தால், அவை பலவித ஆகாரங்களை ஜீரணிப்பதற்கான சத்துக்களை உண்டாக்கும் உண்மை வெளியாகிறது. மூன்றாவதாக, நமது சரீரத்தினின்றும் வெளியாகும் மல, மூத்திரம் முதலிய விஸர்ஜனங்களைப் பரிசோதித்தால் அவற்றில் கார்போஹைட்ரேட் யன்றி மற்றும் பல வகைப் பொருள்கள் கலந்திருப்பது தெரிகிறது. தேக தத்துவா

சிரியர்கள் தமது சோதனைகளினின்றும் ஒருவகை நைட்ரோஜனித ஆகாரத்தையும் ஒருவகை கார்போஹைட்ரேட்டை ஆகாரத்தையும் உட்கொண்டு ஒருவர் சிலகாலம் ஜீவிததிருக்க முடிந்த போதிலும் நீடித்த காலம் வாழ்வதற்கு உலோக உப்புக்களும், வைடமின் சத்துக்களும் அவசியமென்பதை கண்டு பிடித்திருக்கிறார்கள். உத்தமமான ஆகாரத்தில் போஹைட்ரேட்டும் நைட்ரோஜனிதங்களும், நிண பதார்த்தங்களும், உலோக உப்புக்களும், வைடமின்களும் போதிய அளவிற்கு இருக்க வேண்டும். இதற்காக உணவு திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் வயது, வேலை, பருவம், சீதோஷ்ண ஸ்திதி முதலிய காரணங்களால் எல்லோருக்கும் பொதுவாக, ஒரு ஆகார நியமத்தை ஏற்படுத்துவது முடியாத காரியம். மற்றும் ஆகாரங்கள் பலவகைப் பட்டவைகளாயிருப்பதால், அவற்றின் குணாகுணங்களை அறிந்து தினசரி ஆகாரத் திட்டம் தயார் செய்து, உணவுப் பொருள்களைப் பரிமாற வேண்டியிருக்கிறது.

சிறு குழந்தைகளுக்கும் இளம் பருவத்தி லுள்ளவர்களுக்கும் உடல் வளர்ச்சிக்கு அவசியமான நைட்ரோஜனிதங்களும் கொழுப்புகளும் அதிகமாக இருக்க வேண்டும். சாதாரணமாக நடைமுறையில் நடப்பது என்னவென்றால், வயது முதிர்ந்தவர்கள் அதிகமாகவும், சிறு வயதுள்ளவர்கள் குறைவாகவும் இத்தகைய ஆகாரங்களை உட்கொள்கிறார்கள். சாதாரணமாக பெண் மக்கள் ஆண்களைவிட பத்திலொரு பங்கு குறைவாக சாப்பிட வேண்டும். கூலி வேலை முதலிய கஷ்டமான வேலை செய்யும் உழைப்பாளிப் பெண்களை இந்த திட்டம் பாதிக்காது. ஆனால் சாப்பிடுவதைத் தவிர மற்றெல்லா அலுவல்களுக்கும் வேலைக்காரர்களிருக்கும் பணக்காரர் வீட்டு பெண்மணிகளுக்கு இந்த விதி கட்டாயமாக உபயோகிக்கப்பட்டால் டாக்டர்களைத் தவிர மற்றெல்லோரும் சந்தோஷப்படலாம்.

சரீரக் கஷ்டப்பட்டு உழைக்கிறவர்கள் அதிகமாக சக்தியைக் கொடுக்கக் கூடிய ஆகாரங்களை உட்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் உட்கார்ந்த இடத்தில் கையெழுத்துப் போட்டு உத்தியோகம் பார்ப்பவர்கள் ஜீவசத்து அதிகமாயுள்ள ஆகாரங்களை மாத்திரம் சாப்பிட்டால் போதும்.

குளிர்ந்த பிரதேசங்களில் உள்ளவர்கள் சரீர உஷ்ணத்தைக் காப்பாற்றிக் கொள்ள அதிகமாகக் கொழுப்புள்ள ஆகாரங்களைச் சாப்பிட வேண்டியிருக்கிறது.

சாதாரணமாக நைட்ரோஜனித ஆகாரத்திற்கும் மற்றவைகளுக்கும் இரண்டு பாகத்திற்கு ஏழு பாகம் அல்லது ஒன்பது பாகம் என்று விகிதாசாரம் ஏற்படுத்திக்கொள்வது நல்லது.

ஒரு நாளைக்கு 250 லிருந்து 350 கெல் எடை நைட்ரோஜனும் (Nitrogen) காற்றில் ஐந்தில் நான்கு பங்கு அடங்கியுள்ள (வாயு) 3500-லிருந்து 6500 கெல் எடை பெறுமான கரியும் (carbon) ஒரு சாதாரண மனிதனுக்கு வேண்டியிருக்குமென்று கணக்கெடுத்திருக்கிறார்கள்.

பெண்களும் யோக ஆசனமும்

"பெண்மணி"

'ஆரோக்கியமே அருர்தனம்', 'நோயில்லா வாழ்வே சுக வாழ்வு' என்னும் வாக்கு எவ்வளவு சிறந்தது என்பதை நாம் ஏதாவது ஒரு நோயால் அவஸ்தைப் படும் போதுதான் அறிகிறோம். நமக்கு ரொம்ப வேண்டியவர்கள் நோயால் அவஸ்தை படும்போது, நாம் அவர்களுக்கு ஆறுதல் சொல்வதைத் தவிர வேறு என்ன செய்ய முடிகிறது? டாக்டரையோ, வைத்தியரையோ அழைத்து காண்பித்து மருந்து கொடுக்கிறோம். மற்றும் கிட்ட இருந்து அவர்களுக்கு வேண்டிய சிசுருஷை செய்கிறோம். அவ்வளவுதான் நம்மால் செய்ய முடியும். தலைச் சுமையா என்ன மாற்றிக் கொள்வதற்கு?

நோய் கொள்ளல் பாவம்.

நோயை அனுபவிப்பவர்களுக்குதான் எவ்வளவு கஷ்டம். உடல் நலம் எவ்வளவு சீர் கேடடைகிறது. சாதாரணமாக நாம் ஒரு செடியையோ, மரத்தையோ வளர்க்கிறோம். அதற்கு பல பூச்சிகளினால், நோய்கள் வருகின்றன. அடிக்கடி நோய் கொள்ளும் மரம் பெரிதானாலும் அதனிடம் நாம் பலனை அதிகம் எதிர்ப்பார்க்க முடியாது. சிறு செடியாய் இருக்கும் போதிலிருந்து அதற்கு எந்தவித நோயும் வராமல் பாதுகாக்கப்பட்ட மரம் நல்ல பலனைக் கொடுக்கும். அதன் கனியைத் தான் எல்லோரும் சாப்பிட விரும்புவார்கள். அந்த மரத்தையும் அதன் கிளைகளையும் கூட வெட்டிப் பதிவுகள் போட்டு அபிவிருத்தி செய்வார்கள். பலன் கொடா மரத்தை யாரும் விரும்பமாட்டார்கள். அதை வெட்டியும் போட்டு விடுவார்கள். மரம், செடிகளுக்கே இவ்வளவு சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றால், எல்லா ஜீவராசிகளிலும் சிறந்த மானிடர்கள் எவ்வளவு முன் ஜாக்கிரதையுடன் நடந்துக் கொள்ளவேண்டும். மரம் செடிகளுக்கு நோய் வந்தால் என்ன நேருகிறதோ அதேதான் நமது சரீரத்துக்கும். ஒவ்வொரு நோயால், நாம் கஷ்டப்படும் போது அந் நோயின் தழும்பு நம் சரீரத்தில் ஏற்படுகிறது. அவ்வாறே அடிக்கடி தழும்புகள் விழுந்துக் கொண்டே இருந்தால் மரம் எப்படி பலன் தராதோ அவ்வாறே நாமும் வாழ்க்கையில் சுகம் காணாமல், மற்றவர்களுக்குத் தொந்தரவாயும், பூமிக்குப் பாரமாயும் வாழவேண்டி யிருக்கிறது. ஆனால் மரம், செடிகளை வெட்டி எறிந்து விடுவதைப் போல மனிதர்களைச் செய்யமாட்டார்கள். அவர்களால் யாருக்கும் நன்மை கிடையாது. அதனால் தான் பெரியோர்கள் 'நோய் கொள்ளல் பாவம்' என்று சொல்லி யிருக்கிறார்கள்.

வியாதி தினுசுகள்

வியாதிகளில் இரண்டு வகைப் படும். ஒன்று அஜாக்கிரதையினால் நாமே வாங்கிக் கொள்வது. மற்றொன்று நம் அனுமதியில்லாமலேயே நம்மை அணுகும் தொத்து வியாதி. இவ் விரண்டும் நாம் வராமல் தடை செய்யக் கூடியதே. ஆகார வகைகளும்,

யோகாசனம் முதலிய வியாயா மங்களே இதைத்தடுக்கும் அணே.

உணவு

சத்துள்ள ஆகாரங்களாயும் சீக்கிரம் ஜீரணிக்கக் கூடியவை களாயும் இருக்க வேண்டும். இது நமது சகோதரிகள் கையில் இருக்கிறது. கஞ்சியை வடிக்கா மல் சமைக்க வேண்டும். காய் கறி வேகவைத்து ஜலம் கொட் டக்கூடாது. அதிக நேரம் வேக வைக்கக்கூடாது. உடல் நலத் திற்கும் வளர்ச்சிக்கும் வேண் டிய நல்ல ஆகாரங்கள் மாத்திரம் எடுத்துக் கொண்டு, அவசிய மில்லாதவைகளே நீக்கி விட வேண்டும். உணவைப் பற்றி பிறகு விரிவாக எழுதுவோம்.

வாழ்க்கை

வீணை நன்ருய் வாசிக்க வேண்டுமானல், அதைத் தினம் துடைத்து, நரம்புகள் துரு ஏருமல் பத்திரமாக பாதுகாக்க வேண்டும். நரம்புகளே எல்லாம் நமக்கு வேண்டிய ஸ்ருதிக்கு சரியாய் இழுத்துச் சேர்த்து வைத்துக்கொண்டால்தான் சப்த ஸ்வரங்கள் சரியாய் எழும்பும். நல்ல சங்கீதத்தை சுகமாய் அனுபவிக்கலாம். அதைப் போலவே நம் சரீரமாகிய வீணேயும் துரு ஏருமல் இருந்தால் -தான் வாழ்க்கை என்னும் தந்தியை மீட்டி ஆனந்த மென்னும் சங்கீததகை அனு பவிக்க முடியும்.

ஊண், உடை, உறக்கம் எவ் வளவு அவசியமோ அதைப் போல தேகப் பயிற்சியும் சரீரத் திற்கு மிக்க அவசியம். இதை ஆண்களே உணராத இக் காலத் தில் பெண்கள் எங்கிருந்து உணரப்போகிருர்கள். அப்படி தெரிந்திருந்தாலும் சோம்பல் என்னும் சகோதரிக்கு வசப் பட்டுப் போகிருர்கள்.

எது சிறந்தது?

தேக அப்பியாசங்களில் பல விதம் உண்டு. டென்னிஸ் பாட், மிண்டன் முதலியவை ஆங்கிலம் படித்த பெண்களால்தான் ஆட முடியும். நூற்றுக்கு 2 பேர் படித்தவர்களுள்ள இந்தியாவில் எல்லோரும் அம்மாதிரி செய்ய முடியுமா? அவர்களும் இவர் களேப் போல மட்டையைத் தூக் கிக்கொண்டு வெளிகளில் ஆட சௌகரியமும் கிடையாது. முடியாத காரியமும் கூட. மற்ற பயிற்சிகளாகிய கர்லா, பைடக், டம்பெல்ஸ் முதலியவை களும் பெண்களுக்கு அவ்வளவு சிறந்த தல்ல. எல்லா வயது உடையவர்களும் செய்ய முடியாது. சாஸ்திரீகமான யோக ஆசனங்களே பெண்களுக்கு சாலச் சிறந்தது. காசு செலவும் கிடையாது, இடமும் அதிகம் தேவை இல்லே. எல்லாம் ஒரு விரிப்புடன் சரியாய்ப் போகும்.

மற்ற பயிற்சிக்கும் இதற்கும் உள்ள வித்தியாசங்கள் என்ன வென்ருல், யோக ஆசனம் செய் வதால் நோய் வராது. நோயாளிகளாலும்செய்ய முடியு மென்பதே.

யோக ஆசனம் என்ற உடன் யோகிகளல்லவா செய்ய வேண் டியது. நம்மைப் போன்ற கிருஹஸ்தர்களால் ஆகக் கூடியதா? அதுவும் பெண்களால் செய்யமுடியுமா என்று கேள்வி கள் எழலாம்.

முக்கியமாகப் பெண்கள்தான் யோக ஆசனம் பயிலவேண்டும். அப்பொழுதுதான் நம் குடும்பம் ஸ்வர்க்கமாக விளங்கும். முன் காலத்திலுள்ள பெண்கள் யோகியர்களாய் விளங்க

வில்லையா? நளாயினி தேவி சூரியனை உதிக்காமல் செய்தது எந்த பலத்தால்? கணவனுயிரைக் கவர்ந்து சென்ற காலனுடன் வாதாடி மீட்ட சாவித்திரி ஒரு யோகி யல்லவா. பதினான்கு வருடம் ராவணனிடம் சிறையிருந்தும் ராவணனை தன்னிடம் அணுகாமல் காத்தது சீதையின் யோக பலமல்லவா? ரணகளத்தில் தசரதனுடைய ரதத்தின் அச்சாணி கழள, கைகேயி தன் விரலை அச்சாணிக்கு பதில் வைத்திருந்தது, சாதாரணப் பெண்மணிகளால் செய்யக் கூடியதா? கணவன் வா என்று அழைத்ததும், கிணற்றில் மொண்டு கொண்டிருந்த பாத்திரத்தை பாதி கிணற்றில் விட்டு வாசுகி அம்மையார் சென்றபோது, விட்ட பாதி இடத்திலேயே தவலை நின்றது யோக பலத்தா லல்லவா? பாஞ்சாலியை பஞ்ச பாண்டவர்கள்முன் பதை பதைக்க துகில் உரிந்தும் துச்சாதனனை ஆயாசம் கொள்ளச் செய்ததும, மானத்தையும்காப்பாற்றிக்கொண்டது, யோக பலத்தா லல்லவா? சிரஞ்சீவிக் கவிகளைப் பாடிய ஔவை ஒரு யோகி அல்லவா? அவ் வமிசத்தில் பிறந்த நாம் நம்முடைய மகிமையை மறந்தோம். பல இன்னல்களுக்கு ஆளானோம். கடைசியில் நடைப் பிணங்களாக நடமாடுகிறோம். யோக ஆசனமாம், தலைகீழ் நிற்பதாம்! இதுகள் எல்லாம் மரத்தடியில் இருக்கும் சாமியார்க ளல்லவா செய்வார்கள். குடும்ப ஸ்திரீகள் செய்யத் தகுமா என்று வீண் வம்பியர்கள நீட்டி முழக்குவார்கள். இவர்களிடம் நாம தர்க்கித்தால் ஒருக்கால் நம் தீர்மானத்தையும் கலைத்துவிட நேரிடும். இம் மாதிரிதான் நாம் இக்கதிக்கு ஆளானோம். நமக்குக் கடவுள் பகுத்தறிவு கொடுத் திருக்கிறார். எது நன்மை தீமை என்று அறியும் ஆற்றல் நமக்கிருக்கிறது. இனி நமக்கு வேண்டியவைகளை நாமே தேர்ந்தெடுத்துக் கொள்வோம்.

வீட்டில் மூன்று வேளையும் சமைப்பதற்கும் குழந்தைகளைப் பராமரிப்பதற்குமே நேரம் சரியாய்விடுகிறது. எங்கு ஆசனம் போட நேரமிருக்கிறது என்று சோம்பல் வசப்பட்ட சகோதரிகள் சொல்லலாம். மனம் இருப்பின் இடம் கொள்ளும். யார் என்ன சொன்னாலும், என்ன வேலை யிருந்தபோதிலும் தினம் ½ மணி நேரமாவது ஆசனம் செய்ய வேண்டும் என்று சங்கல்பித்துக் கொள்ளுங்கள். காலையில் வழக்கமாக எழுந்திருக்கும் நேரத்தைவிட ½ மணி நேரம் முந்தி எழுந்திருந்தால் தானே நேரம் கிடைத்துவிடும். சில நாள் இம் மாதிரி பழகிவிட்டால் பிறகு விட மனது வராது. அனுபவத்தில்தான் அதன் சுகத்தை அறியலாம். நமக்கு ஒரு புது உற்சாகம், வாழ்க்கையில் புது உணர்ச்சி சுறுசுறுப்பு, ஆரோக்கியம், ஆனந்தம் எல்லாம் கிட்டும்.

சாதாரண வீட்டு வேலைகளே அப்பியாச மல்லவா? அதற்கென்று ஆசனம் போட்டால்தான் பயிற்சி ஆகுமா என்று சிலருக்கு சந்தேகம் வந்துவிடும். அப்படி வீட்டு வேலைகளே தேகப் பயிற்சி என்றால் அவர்களுக்கு மல்லவா அவ்வப்போது ஜுரம் முதலிய மற்ற நோய்களும் வருகிறது. எந்த வேலையும் செய்யாமல் சோம்பித் திரிகிறவர்களை விட இவர்கள் பரவாயில்லைதான். இதிலிருந்து வீட்டு வேலைகள் மாத்திரம் நோய்களைத் தடுத்து

எப்பொழுதும் ஆரோக்கியமாய் இருக்கப் போதவில்லை. சரீரத்திலுள்ள எல்லா அவயவங்களுக்கும் சராசரி வேலையில்லை. ஏதோ சில பாகங்களுக்கு அதிக வேலையும், சிலவற்றிற்கு குறைந்தும், சிலவற்றிற்கு ஒருவித வேலையும் இல்லாமல் இருக்கிறது. வேலையில்லாமல் இருக்கும் பாகங்களுக்காகத்தான் யோக ஆசனம் வேண்டியது.

எல்லோரும் செய்யலாம்

நம் தேசத்தில் உள்ளவர்களின் நிலைமை மூன்று விதங்களாகப் பிரிக்கலாம். 1 சொற்ப வருமானமுள்ளவர்கள். 2. சுமாரான வருமானமுள்ளவர்கள் 3. அதிக வருமானமுள்ளவர்கள். இவர் எல்லோராலும் இவ் வாசனங்களைப் பழக முடியுமா வென்பதை ஆராய்வோம்.

இந்தியாவில் உள்ள, ஜனத்தொகையில் முக்கால்வாசிப் பேர் சொற்ப வருமானமுள்ளவர்கள். இவர்களுக்குத்தான எல்லாவித வாழ்க்கை வசதிகள் குறைவு. இவர்களுக்காகத்தான் இன்று நமது மாபெருந் தலைவர்கள் கூடி அநேகத் திட்ட மிடுகிறார்கள். அவர்களுடைய திட்டங்கள் கூடிய சீக்கிரம் நிறைவேறினால் இவர்களுடைய வாழ்க்கைத் தரம் ஏதோ கொஞ்சம் உயரும். அதுவரை எல்லோரும் கைக் கட்டிக் கொண்டு சும்மா இருக்க முடியாது. அவரவர்கள் சொந்த முயற்சியினால் தான் முன்னேற வேண்டும். உலகத்திலுள்ள மற்றெந்த தேசத்தவர்கட்கும், அறிவிலோ, ஆற்றலிலோ கொஞ்சமும் குறைந்தவர்களல்லோம். ஆனால் தேக பலத்தில் குறைந்திருக்கிறோம். இதை முதலில் சரிக்கட்டினோமேயானால் நாமே மற்றெல்லா தேசத்தவர்கட்கும் முன்னணியில் நிற்போம்.

எலிக் குஞ்சுகளைப் போன்ற குழந்தைகளும், எண்பது ராத்தல் அறுபது ராத்தல் உள்ள வாலிபர்களும், 25 வயதில் சுடுகாடு யாத்திரையும் ஒழிய வேண்டும். மற்ற நாடுகளில் சராசரிவயது அறுபது ஆனால், நம் தேசத்தில் இருபத்தைந்து, முப்பது வயதுக்குள் எல்லாம் முடிந்துவிடுகிறது. இந்த வயதுக்குள் வேண்டாத குழந்தைகள் எத்தனை? ஸ்திரீகளுக்கு சரீர சிரமம் எத்தனை? தாங்கத்தான் சக்தி இருக்கிறதா? இதுகளையெல்லாம் போக்கி ஆனந்த வாழ்வு அளிக்கக்கூடியது யோக ஆசனம் ஒன்றே. அதுவே பிற்காலத்தில் மோக்ஷப்படிகளாகவும் அமைகிறது.

மானிட தேகம் எடுத்தது, உண்டு, உறங்கி, குழந்தைகளை பெற்றுமடிவதற்கல்ல. ஆத்மாவை அறிந்து கடவுளை சரணடையவே. சுவர் வைத்தல்லவோ சித்திரம் எழுத வேண்டும். அஸ்திவாரமில்லாக் கட்டடம் ஆட்டம் கொடுத்துவிடும். ஆரோக்கியமென்னும் அஸ்திவாரம் இருந்தால்தான் வாழ்க்கைப் போராட்டத்தில் சுக, துக்கமென்னும், காற்று, மழைக்கு ஈடு கொடுக்க முடியும்.

யோக ஆசனம் பழக விலை உயர்ந்த கருவிகள் எதுவும் தேவையில்லை. செய்ய வேண்டுமென்ற ஆர்வம், ஆறடி நீளமுள்ள ஒரு விரிப்பு, சுத்த காற்றோட்டமுள்ள இடம், சோம்பலுக்குச் சீட்டு.

இதற்குப் பாதம் ஹல்வா, கீர் முதலிய சத்துள்ள ஆகாரங்கள் வேண்டியதில்லை. சாதாரணமாக நாம் சாப்பிடும் ஆகாரங்களை கொஞ்சம் திருத்திக்கொண்டால் போதும். (தொடரும்)

கைப்பால்

டி. கிருஷ்ணகுமாரி

குழந்தைகளுக்குத் தாய்ப் பாலோ அல்லது தாதிப் பாலோ கொடுத்து வளர்க்க வசதிப் படாவிட்டால் கைப்பால் கொடுத்து வளர்க்கலாம். ஆனல் தாய்ப் பால் குடித்து வளரும் குழந்தைகளைவிட கைப்பாலருந்தி வளரும் குழந்தைகள் மிக அதிகமாக மரணத்துக்குள்ளாவதோடு அவைகளுக்கு கணை நோயும் அதிகமாகக் காண்கிறது. மூக்கு, வாய் முதலியவை சரியானபடி வளர்ச்சியடையாமல் முகம் குழி விழுந்து பார்க்க அவலட்சணமாகி விடுகிறது. காலா காலத்தில் பல் முளைக்காததோடு பலவித வயிற்றுக் கோளாறுகள் ஏற்படுகின்றன. உள் நாக்கு வளர்ந்து காதில் சீழ் வடிகிறது. ஆகையால் கூடுமானவரை பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குத் தாய்ப்பால் அல்லது தாதிப் பால் கொக்க முயற்சி செய்து அது முடியாமல் போனலே புட்டிப் பால் மாட்டுப் பால் போன்ற கைப் பால்கள் கொடுத்து வளர்ப்பதைப் பற்றி யோசிக்க வேண்டும். நம் நாட்டில் பெரும்பாலான தாய்மார்களுக்கு கைப் பாலூட்டி குழந்தைகளை சரியான முறையில் வளர்க்க போதிய அனுபவமோ அல்லது அறிவோ இல்லை. ஒவ்வொரு பெண்ணும் தாயாவதற்கு முன் தன் குழந்தையை சரியான முறையில் எவ்விதம் வளர்ப்பது என்பதை பற்றி தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். அப்படித் தெரிந்திருந்தால் நம் நாட்டில் எவ்வளவோ குழந்தைகளுக்கு மேற்படி கேடுகள் ஏற்படாமல் தடுப்பதோடு காலதேவனுக்கிரையாகாமல் எத்தனையோ குழந்தைகளை காப்பாற்றி சிசு மரண விகிதத்தையும் குறைத்திருக்கலாம்.

பல் முளைக்கும்வரை அதாவது ஏழிலிருந்து பதினேழு பதினெட்டு மாதங்கள்வரை குழந்தைகளின் வயிறு தாய்ப் பால் தவிர வேறு எதையும் செரிக்க சக்தியற்றதாயிருக்கிறது. ஆகையால் அச் சமயத்தில் அவைகளுக்கு நாம் தாய்ப் பாலுக்கு பதிலாக கொடுக்கும் ஆகாரம் குணத்திலும், சத்திலும், அளவிலும் தாய்ப் பாலுக்கு சமானமாக இருந்தாலே அவைகளுக்கு ஒத்துக் கொள்ளும். அப்படி இல்லாவிட்டால் ஒத்துக் கொள்ளாமல் பலவித கெடுதல்களும் வியாதியு மேற்பட்டு மரணத்திற்கு ஹேது ஏற்படும். நமக்குச் சுலபமாகக் கிடைக்கும் ஆட்டுப் பாலோ அல்லது மாட்டுப்பாலோ தாய்ப் பாலுக்கு எவ்விதத்திலும் சமதையானதல்ல. ஆகையால் அவைகளை நம் குழந்தைகளுக்கு ஊட்டு முன் அவற்றைத் தாய்ப் பாலுக்கு ஈடாக மாற்றி அமைத்தே ஊட்ட வேண்டும்.

நமக்குக் கிடைக்கும் பால்களில் பசும் பாலும் எருமைப் பாலுமே மிகவும் சுலபமாக கிடைக்கிறது. எருமைப் பாலில் அதிகமாக கொழுப்பு சத்திருப்பதால் அது குழந்தைகளுக்கு எளிதில் செரியாது. மேலும் அது மிகவும் அசுத்தமான மந்தமான பிராணி. ஆகையால் அதன் பால் குழந்தைகளுக்கு ஏற்றதல்ல. பசும் பால் அதன் இயற்கையான நிலையில் குழந்தைகளுக்கு ஏற்றதல்ல. ஆனல் அதை ஏற்றதாக நாம் மாற்றி அமைத்துக்கொள்ளலாம். பசும் பாலுக்கும் தாய்ப்

பாலுக்கும் பலவிதங்களில் பேத மிருக்கிறது. பசும் பால் புளிப்பு (Acid) சம்பந்தப்பட்டது. தாய் பாலோ வழ வழ (Alkaline) ப் பானது. பசும் பாலிலுள்ள ஊண் வளர்ச்சி சத்து (Protein) தாய்ப் பாலிலுள்ளதைப் போல் கிட்டதட்ட இரண்டு மடங்கு இருக்கிறது. ஆகையால் தான் பசும் பால் குடித்து வளரும் குழந்தைகள் சில தாய்ப் பால் குடித்த வளரும் குழந்தைகளை விட புஷ்டியாக வளர்கின்றன. ஆனல் இவ் விதம் புஷ்டியாக வளர்வதைப் பார்த்து பல தாய் மார்கள் ஏமாந்து போகிருர்கள். இப்படி முதலில் குழந்தைகள் குளு குளுப்பாக வளர்ந்த போதி லும் கணை போன்ற வியாதிகளுக் குள்ளாகி பிறகு க்ஷீணமடையும் என்பது அவர்களுக்குத் தெரிவ தில்லை. தாய்ப் பாலைவிட பசும் பாலில் கொழுப்பு சத்து அதிக மாகவும் சர்க்கரை சிறிது கம்மி யாகவு மிருக்கிறது. இவ்விதம் பல விஷடங்களில் பசும் பாலும் தாய்ப் பாலும் பேதப் படுவதால் அது குழந்தைகளுக்கு எளிதில் ஜீரணமாகக் கூடியதில்லை என தெளிவாகிறது.

பசும் பாலில் சரி சமமாக சுடு ஜலம் அல்லது பார்லி ஜலம்—அதாவது இரண்டு அவுன்ஸ் பால் என்ருல் இரண்டு அவுன்ஸ் ஜலம்—சேர்த்தால் அதில் உள்ள ஊண் வளர்ச்சி சத்தின் விகிதாசாரம் குறைந்து கிட்டதட்ட தாய்ப் பாலிலுள்ள விகிதாச்சாரத்துக்கு சமமாகிவிடும். பசும் பாலில் புதிதாக ஜலம் சேர்த்தால் ஏற்கன வேயே அதிலுள்ள குறைவான சர்க்கரை விகிதாசாரம் இன்னும் அதிகமாகக்குறையும். ஆகையால் தாய்ப் பாலுக்கு ஈடாகச் செய்ய ஆறு அவுன்ஸ் ஜலம் சேர்த்த பாலுக்கு இரண்டு தேக் கரண்டி சர்க்கரை வீதம் சேர்க்க வேண் டும். சாதாரணமாக நமக்குக் கிடைக்கும் சீனியைவிட பால் சர்க்கரை கிடைத்து அதைச் சேர்த்தால் நல்லது. குழந்தை களுக்கு வயிற்று வலி ஏற்பட் டால் நாம் பாலில் சேர்த்த சீனி யின் விகிதாசாரம் அதிகம் என உணர்ந்து பார்லி ஜலத்தின் அள வைக் கூட்டிச் சர்க்கரையின் அளவைக் குறைத்துக் கொள்ள வேண்டும். பசும் பாலில் ஏற் கனவேயே சற்று அதிகமாக உள்ள கொழுப்பு சத்தின் விகி தாச்சாரம் ஜலம் சேர்த்ததும் சிறிது குறைவுபடும். இதை ஈடு செய்ய சிறிது பாலேடு அல்லது சில துளிகள் மீன் எண்ணெய் சேர்த்துக்கொள்ளலாம். புளிப்பு குணமுள்ள பசும் பாலை வழ வழப்புக் குணமுள்ள தாய் பாலைப் போல் மாற்றி யமைக்க அதில் சிறிது சுண்ணும்பு ஜலம் அல்லது சோடா பைகார்பனேட் சேர்த் துக் கொள்ளலாம். இதிலிருந்து பசும் பாலில் சரி சமத்துவமான அளவு பார்லி அல்லது சுத்தஜலம் கலந்து அதில் 6 அவுன்சுக்கு 2 தேக் கரண்டி வீதம் சர்க்கரை சேர்த்து பிறகு சில துளிகள் மீன் எண்ணெய், சிறிது சுண்ணும்பு ஜலம் அல்லது சோடா பைகார்ப னேட் சேர்த்தால் தான் அது தாய்ப் பாலுக் கீடாகி குழந்தை களுக்கு ஏற்ற ஆகாரமாகும் எனத் தெளிவாகிறது. கொதிக்க வைத்த பாலைவிட பச்சைப் பாலி லேயே அதிகமான சத்துகளிருக் கின்றன. ஆனல் நம் பக்கங் களில் கிடைக்கும் பால் பொது வாக அவ்வளவு சுத்தமாக கிடைப்பதில்லை. பலவித வியாதிக் கிருமிகள் அவைகளி லிருக்கலாம். ஆகையால் ஜலம் சேர்த்து கொதிக்க வைத்துக் கொடுப்பதே

நல்லது. மேலும் அனுபவத்தில் பார்த்தமட்டில் பச்சைப் பாலை விட காய்ச்சிய பாலே குழந்தைகளுக்கு அதிகமாக ஒத்துக் கொள்ளுகிறது.

சிலர் மாட்டுப் பாலைவிட ஆட்டுப் பாலே நல்லது எனக் கருதுகிறார்கள். மாட்டைவிட ஆடு பலவித பச்சை செடி கொடிகளைத் தின்று ஜீவிப்பதால் அதன் பால் மாட்டுப் பாலைவிட சற்று விசேஷம்தான். ஆனால் நகரங்களில் வசிப்பவர்கள் ஆட்டுப் பாலுக்கு ஏற்பாடு செய்வது சிரமம். பசும் பாலுக்கும் வெள்ளாட்டுப் பாலுக்கும் சத்து செயற்கை விகிதாச்சாரத்தில் அவ்வளவாக வித்தியாச மேதுமில்லை யாகையால் பசும் பாலைப் போன்றே இதையும் தயார் செய்து குழந்தைகளுக்குப் புகட்டலாம். ஆனால் வெள்ளாட்டுப் பாலில் ஒருவகை கெட்ட மணமுண்டு. இதனால் சில குழந்தைகளுக்கு இது பிடிக்காது. குடித்ததும் வாந்தி செய்யும். ஆட்டுப் பாலில் ரோமங்கள் அதிகமாகக் கிடக்கும். ஆகையால் முதலில் ஜாக்கிரதையாக வடிக்கட்டி மயிரை யெல்லாம் எடுத்துவிட்டு பிறகே ஜலம் சேர்த்துக் கொதிக்க வைத்து பசும் பாலுக்குக் கூறியுள்ள அளவுப்படி சர்க்கரை மீன் எண்ணெய் சுண்ணாம்பு ஜலம் முதலியவைகளைக் கலந்துக் கொடுக்க வேண்டும்.

குழந்தைகளுக்கு எந்த அளவு எந்த எந்த நேரங்களில் பால் புகட்ட வேண்டும் என வரையறுத்துச் சொல்ல முடியாது. குழந்தைக்கு குழந்தை இது வித்தியாசப்படும், ஆனால் சாதாரணமாக ஒரு தடவை குடித்த பாலை ஜீரணிக்க குழந்தைக்கு இரண்டரையிலிருந்து மூன்று மணி வரை பிடிக்கு மாகையால் மூன்று அல்லது நான்கு மணிக்கொரு தடவை கொடுப்பதே நல்லது. பொதுவாக இரண்டாவது மாதத்தில் தடவைக்கு இரண்டு அவுன்சும் நாலாவது மாதத்தில் தடவைக்கு நாலு அவுன்சும் ஆறாவது மாதத்தில் தடவைக்கு ஆறு அவுன்சும் போதுமானது. முதல் இரண்டு வாரங்களில் குறிப்பிட்ட அளவுக்கு அதிகமாக ஒரு அவுன்சு பாலுக்கு இரண்டவுன்சு ஜலம் வீதம் கலந்து கொடுப்பது நல்லது. ஆறு மாதங்களுக்குமேல் பாலில் சேர்க்கும் ஜலத்தின் அளவைப் படிப் படியாகக் குறைத்து வந்து நாளடைவில் ஜலம் சேர்க்காத சுத்தமான பாலையே புகட்டுவது நல்லது.

> **இன்பத்தைக் காண்பதெங்கே?**
>
> இன்பத்தை எங்கு தேடி அலைந்தாலும் அதைத் தர்க்கத்திலும் காணமுடியாது, புகழிலும் காண முடியாது, செல்வத்திலும் காண முடியாது, உலகானுபவத்திலுங் காண முடியாது. மனிதனுடைய மெய் இயல்பு கூறுவதுபோல் நடப்பதிலேயேதான் இன்பத்தைக் காண முடியும்.
>
> —மார்க்க அரேலியர்

மேற்கண்ட விதம் பசும் பாலோ அல்லது ஆட்டுப் பாலோ தயார் செய்து புகட்டி அது குழந்தைக்குச் சேராவிட்டால், அல்லது அப் பால்கள் கிடைப்பது சிரமமாக இருந்தால் கடைகளில் விற்கும் புட்டிப் பால்கள் வாங்கி புகட்டலாம். ஆனால் இவைகளில் பெரும்பாலானவைகளில் அரிசிக் கஞ்சி சத்து சேர்க்கப்பட்டிருப்பதால் சில குழந்தைகளுக்கு ஜீரணக் கோளாறுகளை

இவை உண்டாக்கும். தற்காலத்தில் கடைகளில் விற்கும் இவ்வித செயற்கை ஆகாரங்களில், ஹார்லிக்ஸ், அல்லன்பெரிஸ், மெல்லின்ஸ், கிளாக்ஸோ, மில்க்மெய்ட், ஆஸ்டர் மில்க் முதலியவை முக்கியமானவை.

கடைசியாகப் பால் புகட்டும் புட்டிகளைப் பற்றி ஒரு வார்த்தை. பால் புட்டிகள் தட்டையாக குழிகள் இல்லாமல் ஜலம் விட்டு நன்றாக அலம்பி சுத்தமாக கழுவ சவுகரியமானதாக இருக்கவேண்டும். குழந்தைக்குப் பால் புகட்டியவுடன் பால் மீத மிருந்தால் கீழே கொட்டி விட்டு முதலில் வாஷிங் சோடா கலந்த ஜலத்தில் போட்டு நன்றாகவும் சுத்தமாகவும் அலசி பிறகு சுத்தமான ஜலத்தில் கழுவி வைக்க வேண்டும். இவ்விதம் ஒவ்வொரு தடவையும் பால் புகட்டி முடிந்தவுடன் செய்வது நல்லது. ஏனெனில் பால் மிகவும் சீக்கிரம் புளிப்பேறிக் கெட்டுப் போகக் கூடியதாகையால் உடனே சுத்தம் செய்யாமல் வைத்திருந்தால் புளிப்பேறிய பால் அடுத்த தடவை புகட்டும் போது உள்ளே சென்று குழந்தைக்கு கெடுதல் செய்ய ஹேது உண்டு. இதே போல்தான ரப்பர் காம்பு விஷயமும். பால் புகட்டியவுடன் ரப்பர் காப்பை புட்டியி லிருந்து கழற்றி சோடா பைகார்பனட் கலந்த ஜலத்தில் இரு பக்கமும் நன்றாக தேய்த்து கழுவி சுத்தம் செய்து வைக்க வேண்டும். இவ்விஷயத்தில் தாய்மார்கள் சோம்பல் படுதல் கூடாது. ஏனெனில் கெடுதலான ஆகாரத்தைப்போல் சரியாக சுத்தம் செய்யப்படாத புட்டியும் குழந்தைகளுக்கு தொந்தரவு விளைவிக்கும்.

✲

மதிப்புரை

ஐந்தாவது சுதந்திரம் [ஆசிரியர் ல்க்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி—பதிப்பாளர்: சக்தி காரியாலயம்-சென்னை 14 கிரவுன் 1×8 பக்கம் 88 ரூ 1-8-0]

ஸ்ரீமதி லக்ஷ்மி இக்காலத்தில் சமூகத்தில் ஊறிகிடக்கும் ஊழல்களை பாரபட்சமின்றி வன்மையாகக் கண்டிக்கும் கட்டுரைகளும் நாட்டின் முற்போக்கு பற்றிய இன்னும் பலவும் இப்புத்தகத்தில் அடங்கியிருக்கின்றன. படித்து ரசிக்கவேண்டிய புத்தகம். காலஞ் சென்ற தேசபக்தர் சத்யமூர்த்தியின் மகளல்லவா ஸ்ரீமதி லக்ஷ்மி. தந்தையைப் போலவே இந்தப் புத்தகத்தில் பல கட்டுரைகளில் கிண்டல் செய்திருக்கிறார்!

வாழ்க்கைச் சித்திரம் [ஆசிரியர் வ. ரா. பதிப்பாளர், பவானி பிரசுரம் ராயவரம். கிரவுன் 1×8 பக்கம் ரூ. 2-8-0.]

இந்த வருஷத்தில் வெளி வந்த புத்தகங்களில் இது ஒரு அருமையான சித்திரம். படிக்க ஆரம்பித்ததும் குழந்தை ராமுவின் அட்டகாசம்தான். அவன் பேசுகிறான். விளையாடுகிறான். யாருடன்? நம்முடன். மைக்குறத்தி குறி சொல்லுகிறாள். வண்டிக்கார அழகப்பன் மைக்குறத்தியுடன் பேசுவதையும் கேளுங்கள். அப்பாடி! எத்தனை பேரய்யா இந்தப் புத்தகத்தின் மூலம் பேசுகிறார்கள், உறவு கொண்டாடுகிறார்கள். படித்துப்பாருங்கள்.

இந்த மாதிரி சித்திரங்களை வ. ரா. தான் தீட்ட முடியும். சித்திரங்களைத்தான் தீட்டினார். சித்திரத்தி லுள்ளவர்களை நம்முடன் பேசவும்—விளையாடவும்—நையாண்டி செய்யவும் வைத்துவிட்டாரே. இவர் ஒரு அதிசய மனிதர்தான்.

மதிப்புரைக்கு இரண்டு புத்தகங்கள் அனுப்ப வேண்டும்.
ஆசிரியர்

17641

ஒரு சந்தோஷச் செய்தி!

ஜூலை மீ முதல்

பாப்பா

மாதம் இருமுறையாக

பிரதி மாதமும்

10, 25 தேதிகளில்

வெளிவரும்

வருஷச் சந்தா ரூ. 6 0 0

தனிப் பிரதி அணு 4

பாப்பா பத்திரிகாலயம்

ராயவரம் :: புதுக்கோட்டை சமஸ்தானம்

சென்னை ஆபீஸ்:

115-E, மோபரீஸ் ரோட்

ராயப்பேட்டை :: சென்னை 14.

இந்தக் காலத்துப் பெண்களில் பலருக்கு 'கால்சியம்' சத்துக்குறைவாய் இருப்பதால் உடல் நலம் குன்றிவிடுகிறது என்று டாக்டர்கள் சொல்கிறார்கள். தாம்பூலம் உபயோகிப்பதால் ஓரளவு 'கால்சியம்' உடம்பில் சேருகிறது. முன் காலத்துப் பெண்கள் தினம் இரண்டு மூன்று முறை தாம்பூலம் தின்பார்கள். ஆதலால் அவர்கள் நீண்டகாலம் உடல் நலத்துடன் உயிர் வாழ்ந்தனர். ஏன் நாமும் அதைப் பின்பற்றக்கூடாது? தாம்பூலத்தில் உபயோகிப்பதற்கு ருசியும், மணமும் உள்ள பாக்குத்தான் 'அசோகா' தான் என்று சொல்லவா வேண்டும்.

அசோகா

சுகந்த பாக்குத் தூள்

தயாரிப்பவர்:

எம். கே. கிருஷ்ண செட்டி

அசோகா பாக்டரி :: கோயமுத்தூர்

No. 1506 அசோகா MILD SCENTED ASOKA ட்ரேட் நெ. 1506